1435 335 1054

Manavar Mani Malai

FOURTH READER

மாணவர் மணி மாலை

நான்காம் புத்தகம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 DEC 1939
MADRAS

By

V. ANTONY SAWMY M.A., L.T.,

St. Xavier's High School, Tuticorin.

1114

A. V. D. PACKIAM PILLAI

PUBLISHER :: TUTICORIN

COPYRIGHT] 1939 [PRICE AS 6.

மாணவர் மணி மாலை

நான்காம் புத்தகம்

1939-ம் வருஷ புதியப் பாடத்திட்டத்தை அனுசரித்து
எழுதப்பட்டது.

1114
H43
494'81186

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 DEC 1939
MADRAS

BY

V. அந்தோனிசாமி, M. A., L. T.,
உதவி ஆசிரியர்
அர்ச். சவேரியார் ஐஸ்கூல்
தூத்துக்குடி.

A. V. D. பாக்கியம் பிள்ளை
பப்ளிஷர் :: தூத்துக்குடி

பதிப்புரிமை] [விலை அணா 6

First Edition 1939.

முகவுரை

புது முறையில் இயன்ற இவ்வாசக வரிசை, அரசாங்கத்துக் கல்வி இலாகா அதிகாரிகளால் 1939-ம் வருஷம் வெளியிடப்பெற்ற புதிய பாடத்திட்டத்தை யொட்டி, ஆரம்பப் பாடசாலைகளில் உள்ள முதல் ஐந்து வகுப்புக்களுக்கு ஏற்றவாறு, அமைந்துள்ளது. புதிய பொருள்களைப் புது முறையில் விளக்கும் பல புதுப்பாடங்கள் இப் புத்தகங்களிற் புகுந்துள்ளன. புதுமையான பாட்டுக்கள் பல சிறு குழந்தைகளின் மனத்தைக் கவரத்தக்க நடையில் இன்னிசையோடு பொருந்த அமைக்கப்பட்டுள்ளன. சிறுசிறு நாடகங்கள் சில இக்கால இயல்புக் கேற்றவாறு இப் புத்தகங்களில் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு பாடத்தின் பிறகும் புதுமுறையில் அமைந்த பயிற்சிகளும் விளக்கங்களும் இலக்கணக் குறிப்புக்களும் இப்புத்தகங்களின் புதுமையை விளக்கத்தக்கவையாம். இங்ஙனம் குழந்தைகளின் நன்மை கருதியே இன்னின்ன வகுப்பிலே இன்னின்ன பொருள் போதிக்கப்பெறல் வேண்டும் என அமைந்த புதிய பாடத்திட்டத்தை யொட்டி எழுதிய இப்புத்தகங்களைக் கல்வித் துறையில் உள்ள ஆசிரியர்களும் அதிகாரிகளும் ஆதரித்து எனக்கு ஊக்கம் அளிக்க வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,

V. அந்தோனிசாமி.

பொருளடக்கம்

எண்	விஷயம்		பக்கம்
1.	தமிழ்நாடு	...	1
2.	ஆறுகள்	...	4
3.	நாயின் நன்றியறிவு	...	7
4.	லோகமான்ய பால கங்காதர திலகர்	...	12
5.	தேகப் பயிற்சி	...	16
6.	பாரததேசம் (பாட்டு)	...	20
7.	எல்லாம் நன்மைக்கே	...	21
8.	ஔவையார்	...	25
9.	வீரத்தாதி	...	30
10.	தாஜ் மஹால்	...	35
11.	குயில் (பாட்டு)	...	40
12.	ஒற்றுமை	...	41
13.	புகை வண்டித் தொடர்	...	46
14.	சமயோசித புத்தி	...	50
15.	தேனீ	...	56
16.	புறாவும் எறும்பும் (பாட்டு)	...	62
17.	இரட்டையர்	...	63
18.	வஞ்சகன் வஞ்சிக்கப்படுவான் (நாடகம்)	...	67
19.	கடிதம் எழுதுதல்	...	74
20.	உண்மையின் உயர்வு	...	79
21.	கொக்கும் நண்டும் (பாட்டு)	...	87
22.	விதை முளைத்தல்	...	90
23.	மலை (பாட்டு)	...	94

எண்	விஷயம்		பக்கம்
24.	மலேரியா ஜுரம்	...	96
25.	பேராசை பெருநஷ்டம் (பாட்டு)	...	100

செய்யுட் பகுதி

வெற்றி வேற்கை

நீதி வெண்பா

விவேக சிந்தாமணி

பழமொழிகள்

மாணவர் மணி மாலை

நான்காம் புத்தகம்

1. தமிழ்நாடு

நாம் குழந்தைப் பருவத்திலிருந்து பேசிவரும் மொழி தமிழ்மொழியாகும். நாம் சிறு குழவிகளாய் இருந்த பொழுது நமது தாய் நம்முடன் இப்பாஷையில்தான் கொஞ்சிப் பேசினுள். அச்சமயம் நாம் நம் பெற்றோர் மனம் உவக்கும் வண்ணம் இம்மொழியை மழலைச் சொற்களால் பேசினேம். நமது வீட்டில் சாதாரணமாகப்பேசுவது இம்மொழியில்தான். நமது நண்பர்களோடும், அன்பர்களோடும் நாம் அளவளாவுதல் இச்சீரிய மொழியில்தான். நெடுங் காலத்திற்கு முன் தோன்றி, இன்றும் அழியாது சிறப்புடன் விளங்குவது நமது செந்தமிழ் மொழியேயாகும். ஆதலால் தமிழ்மொழியே நம் தாய்மொழியாகும்.

தமிழ்மொழியைத் தாய்பாஷையாகப் பேசுகின்றவர்கள் தமிழர்கள். தமிழர்கள் கல்வியிற் சிறந்தவர்கள். தெய்வ பக்தி நிறைந்தவர்கள். தரும சிந்தனை உடையவர்கள். நாகரீகத்தில் மேம்பட்டவர்கள். சீரிய ஒழுக்கம் உடையவர்கள். தமிழ் நாகரீகம் மிகவும் மேன்மை வாய்ந்தது.

தமிழ்மொழி பேசப்படும் நாட்டிற்குத் **தமிழ்நாடு** என்று பெயர். இந்த நாடு வடக்கே திருப்பதி முதல் தெற்கே **கன்னியாகுமரி** வரை பரவியிருக்கிறது. இந்நிலப் பரப்பிற்குத் தமிழகம் என்ற பெயரும் உண்டு. தமிழ் நாடானது

ஒரு காலத்தில் தெற்கே மிகவும் பரவியிருந்தது என்று சிலர் கூறுகின்றனர்.

தமிழ்நாடு மிகவும் செழிப்பான நாடு. நீர்வளத்திலும், நிலவளத்திலும் தமிழ்நாடு பிற நாடுகளுக்குச் சற்றும் இளைத்ததல்ல. அநேக உயர்ந்த மலைகளையும், மரங்கள் அடர்ந்த காடுகளையும் தன்னகத்தே உடையது. பாலாறு, பெண்ணையாறு, தாமிரபரணி முதலிய பல நதிகள் பரந்து பாய்கின்றமையின், தமிழ்நாடு வளம் பொருந்திய நாடாய் இருக்கிறது. மக்களுக்கு இன்றியமையாத நெல் முதலிய உணவுப் பொருள்கள் மலிந்திருக்கின்றன. நறுமணங் கமழும் சந்தனமரங்கள் தமிழ் நாட்டில் வளர்கின்றன.

இத்தமிழ்நாடு முற்காலத்தில் சேரநாடு, சோழநாடு, பாண்டிய நாடு என மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. சேரநாட்டின் தலைநகர் வஞ்சி. சோழநாட்டின் தலைநகர் காவிரிப்பூம் பட்டினமும், உறையூறும். மதுரை, பாண்டிய நாட்டின் தலைநகர். இந்த மூன்று நாடுகளையும்முறையே சேர, சோழ,பாண்டியர்கள் என்ற மூவேந்தர்கள் ஆண்டு வந்தனர். அம்முப்பெரும் வேந்தரும் குடிகளுக்கு அநேக நன்மைகளைச் செய்திருக்கின்றார்கள். அவர்கள் கட்டிய ஆலயங்களும், அழகான கட்டிடங்களும் இப்பொழுதும் காணப்படுகின்றன. அவர்கள் தமிழ் மொழியை நன்கு ஆதரித்து வந்தார்கள்.

பிள்ளைகளே! நீங்களும் நமது தாய்மொழியாகிய தமிழை நன்கு கற்று, அதனை முன்னேற்றமடையச் செய்ய வேண்டும்.

பருவம்	**நண்பர்**	**தமிழகம்**	**தலைநகர்**
தமிழ்மொழி	**அளவளாவுதல்**	**ஆராய்ச்சியாளர்**	**மூவேந்தர்**
குழவி	**சீரிய**	**இணைத்தது**	**ஆலயங்கள்**
பாஷை	**சிந்தனை**	**தன்னகம்**	**கட்டிடங்கள்**

கொஞ்சி	**நாகரீகம்**	**இன்றியமையாத**	**தற்சமயம்**
உவக்கும்	**மேம்பட்டவர்**	**நறுமணம்**	**ஆதரித்து**
வண்ணம்	**தொன்மை**	**கமழும்**	**முன்னேற்றம்**
மழலை	**நிலப்பரப்பு**	**பகுதி**	**அன்பர்**

கேள்விகள்

1. நமது தாய்மொழி யாது?
2. தமிழ்நாடு மிகவும் வளம் பொருந்திய நாடு. எவ்வாறு?
3. முற்காலத்தில் தமிழ்நாடு எவ்வாறு பிரிக்கப்பட்டிருந்தது? ஒவ்வொரு பகுதியின் தலை நகரத்தையும் கூறுக.
4. தமிழ்நாட்டை ஆண்ட அரசர்கள் யாவர்? அவர்கள் தமிழ் நாட்டிற்குச் செய்த பணிகள் எவை?

அப்பியாசம்

(1) மொழி என்ற பொருளைக் குறிக்கும் மற்றொரு வார்த்தை என்ன?

(2) சாதாரணமாக, அளவளாவி, தொன்மை, மேம்பட்டவர்கள், இன்றியமையாத இவ்வார்த்தைகளைத் தனித் தனி வாக்கியங்களில் பொருத்தி எழுதுக.

(3) "தமிழ்" இந்தவார்த்தையில் எத்தனை எழுத்துக்கள் இருக்கின்றன? இந்த எழுத்துக்களை ழ்மித, மிழ்த, ழ்தமி என்று மாற்றி எழுதினால் ஏதேனும் பொருள் கிடைக்கின்றதா பாருங்கள். பொருள் ஒன்றும் கிடைக்கவில்லை. ஆகையால், எழுத்துக்களை பொருள் விளங்கும்படி தொடர்ந்து எழுதினால் வார்த்தைகள் உண்டாகின்றன. பொருள் விளங்காமல் மாற்றி எழுதினால் அவைகள் வார்த்தைகள் ஆகமாட்டா.

ஆ—இது எழுத்தா அல்லது வார்த்தையா?

ஆ—இது ஒரு எழுத்தே. ஆனால் பசு என்ற பொருளில் வரும்பொழுது இது வார்த்தையாகிறது. பசு என்பதைக் குறிக்காமல் இருந்தால் இது ஒரு எழுத்து.

இவற்றையெல்லாம் ஒரே எழுத்தாலான வார்த்தைகள். இது போன்றவைகளில் இரண்டைக் கூறுக.

மேம்பட்டவர்கள்—இந்த வார்த்தையில் எவ்வளவு எழுத்துக்கள் இருக்கின்றன.

ஐந்து எழுத்துக்கள் உள்ள நான்கு வார்த்தைகள் எழுதுக.

---

2. ஆறுகள்

கிணறு, குளம், கடல் முதலிய நீர்நிலைகளில் உள்ள தண்ணீரானது சூரிய வெப்பத்தினல் ஆவியாக மாறி, மேலே சென்று மேகமாகிறது. இம்முகிலின்மீது குளிர்ந்த காற்று வீசினவுடன் மழை பெய்கிறது. மேகங்கள், உயர்ந்த மலைகளின்மீதே அதிகமாகத் தங்குகின்றன. ஆகையால்தான் மலைகளின்மேல் மழை அதிகமாகப் பெய்கிறது. மலைகளின்மீது விழுகின்ற மழைநீர் தங்குவதற்கு இடமில்லாமல், பல பாகங்களாகப் பிரிந்து பூமியை நோக்கிக் கீழே வேகமாக ஓடிவருகின்றது. இவ்வாறு மலையினின்று இறங்குவதைத்தான் நாம் அருவி என்று அழைக்கின்ரேம். இவ்வருவியைச் சிற்ருறு என்று சொல்வதுண்டு.

பல சிற்ருறுகள் ஒன்றுசேர்ந்து ஓடும் நீர்ப்பெருக்கை 'ஆறு' என்று நாம் அழைக்கிரேம். ஆறு முதலில் சிறியதாக இருக்கின்றது. இத்துடன் பல சிற்ருறுகள் சேர்ந்து பெரிதாகின்றது. அப்போது, இதன் அகலமும், ஆழமும் அதிகமாகிறது. பெரிய ஆற்றுடன் கலக்கும் சிற்ருறுகள் உபநதிகள் எனப்பெயர் பெறும். சிறு ஆறுகள் மணல் திட்டுக்களால் பிரிக்கப்பட்டுப் பல பிரிவுகளாகப் பிரிந்து ஓடும். இவற்றைக் 'கிளைநதிகள்' என்று அழைப்பார்கள். ஆறுகள் கடைசியில் சமுத்திரத்தில் போய்விழும். ஆறுகள் சமுத்திரத்தில் சங்கமமாகின்ற இடத்திற்கு 'முகத்துவாரம்' என்று பெயர்.

சில ஆறுகளில் ஆண்டு முழுதும் தண்ணீர் வற்ருமல் ஓடிக்கொண்டேயிருக்கும். இவற்றை 'ஜீவநதிகள்' என் பார்கள். இந்தியாவில் உள்ள கங்கை, பிரம்மபுத்திரா, சிந்து முதலியன ஜீவநதிகளே. மழை பெய்யாத கோடை காலங் களில்கூட, இவைகள் உற்பத்தியாகும் இமயமலை மீதுள்ள பனிக்கட்டிகள் கதிரவனின் கிரணங்களால் உருகித் தண் ணீர் பெருகிவரும். இதனால்தான் அந்த நதிகளில் எக்கால மும் தண்ணீர் வற்ருதிருக்கிறது.



ஆற்றுத் தண்ணீர் நீர்ப்பாசனத்திற்கு உபயோகப் படுகிறது. ஆற்று நீரால் ஏராளமான நன்செய் நிலங்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. ஆருனது தன் பக்கங் களில் வளப்பமான மண்ணை அரித்துக் கரைகளில் சேர்க் கிறது.

ஆதலால், சில ஆறுகளின் கரையில் உள்ள நிலங்கள் மற்றவைகளைக் காட்டிலும் செழிப்புள்ளனவாய் இருக்கின் றன. இந்த வளப்பமானமண், **வண்டல்மண்** எனப்படும். பெரிய நதிகளின் முகத்துவாரங்களில் வண்டல் மண் சேர்ந்து சேர்ந்து பெரிய நிலப்பரப்பாகிப் பெரிய பட்டணங்கள் ஏற்படுகின்றன.

சில பெரிய நதிகளில் பெரிய மரக்கலங்களும், படகு களும் செல்லுகின்றன. வியாபாரம் விருத்தி அடைகிறது.

காடுகளில் வெட்டப்படுகின்ற பெரிய மரங்கள், ஆற்றின் உதவியால் வெகுதூரம் இழுத்துச் செல்லப்படுகின்றன. ஆற்றின் தண்ணீரைத் தேக்கி வேகமாய் விழச்செய்வதால், அதிலிருந்து மின்சார சக்தி உண்டுபண்ணப்படுகிறது. மின்சாரத்தினுல் பல இயந்திரங்கள் ஓட்டப்படுகின்றன.

ஆற்றுநீர் குளிக்கவும், குடிக்கவும், பயிர்களுக்குப் பாய்ச்சவும் உபயோகப்படுகிறது. ஆற்றின் பக்கங்களில் பயிர்கள் செழித்து வளருகின்றன. பயிர் வளர்ச்சி கண்ணுக்குக் குளிர்ச்சியாய் இருக்கின்றது. இடமும் பசுமையாகத் தோன்றுகிறது. இதனுல் ஆறு, ஊர்களுக்கு அழகைக் கொடுக்கிறது. ஆற்றுப் பாய்ச்சல் இல்லாத இடங்களில் மரம், புல், பூண்டுகள் முதலியன வளரா. அந்த இடங்கள் வறண்ட நிலங்களாகவே யிருக்கும். இதனுலேயே "ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்" என்னும் பழமொழி வழங்குகின்றது.

கடல்	மணல் திட்டு	வண்டல்
சூரியவெப்பம்	கிளை நதி	செழிப்பு
மேகம்	சமுத்திரம்	பேர்யாறு
முகில்	சங்கமம்	மரக்கலன்
பாகம்	முகத்துவாரம்	மின்சாரம்
இழிதருகின்ற	ஜீவநதி	இயந்திரம்
அருவி	கதிரவன்	பசுமை
சிற்ருறு	வற்ருது	பூண்டு
நீர்ப்பெருக்கு	நீர்ப்பாசனம்	வறண்ட
உபநதி	அரித்து	பாழ்

கேள்விகள்

1. மழை எப்படி உண்டாகிறது ?
2. சிற்ருறு என்று எதற்குப் பெயர்? அது எவ்வாறு உண்டாகிறது ?

3. முகத்துவாரம் என்பது என்ன ?
4. ஜீவநதிகள் என்றால் என்ன? இரண்டு உதாரணங்கள் சொல்லு. அவை ஜீவநதிகள் என்று அழைக்கப்படும் காரணத்தை எழுதுக.
5. சில பெரிய ஆறுகளின் பயன் என்ன, விளக்கி எழுதுக.
6. "ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்" ஏன் ?

அப்பியாசம்

கோடிட்ட இடங்களில் சரியான வார்த்தைகளை அமைக்க:

(1) தமிழ் நாடு வடக்கே——முதல் தெற்கே——வரை பரவியிருந்தது.
(2) அநேக உயர்ந்த——மரங்கள் அடர்ந்த——தனக்கே உடையது.
(3) இம்முகிலின்மீது குளிர்ந்த——வீசினவுடன்——பெய்கிறது.
(4) ஆறுகள் சமுத்திரத்தில்——இடத்திற்கு——என்று பெயர்.
(5) இந்தியாவில் உள்ள————————முதலியன ஜீவநதிகளே.
(6) இவ்வருவியைச்——என்று சொல்வதுண்டு.
(7) ஆறுகள் கடைசியில்——போய் விழும்.
(8) ஆற்று நீரால் ஏராளமான——நிலங்கள்——செய்யப்படுகின்றன.

---

3. நாயின் நன்றியறிவு

நாம் வீட்டில் வளர்க்கின்ற எல்லா மிருகங்களினும் நாயே மிகவும் நன்றியறிவுள்ள பிராணி. அது தனக்கு அற்ப உதவி செய்தவரையும் மறவாது, அவர்மீது என்றும் அன்பு காட்டும். "உப்பிட்டவரை உள்ளளவும் நினை" என்ற மூதுரைக்கிணங்க, நாய் தனக்கு ஆகாரம் கொடுத்து

வளர்க்கும் எசமானன்மீது, தன் ஆயுள் உள்ள வரையில் அன்புள்ளதாய் இருக்கிறது. எசமான் தன்னை அடித்து நலிவுறுத்திலுைம், நாய் அதைப் பொருட்படுத்தாது, அவன் தனக்குச்செய்த உபகாரத்தையே நினைத்துத் தன் வாலை ஆட்டித் தன் நன்றியறிவை வெளிப்படுத்தும். இதை விளக்க ஒரு கதை உள்ளது.

ஒரு ஊரில் ஒரு தனவான் இருந்தார். அத்தனவானிடம் ஒரு நாய் இருந்தது. அதை அவர் தம் ஆவியினும் அருமையாக எண்ணி வளர்த்து வந்தார். அந்த நாயும் அவர்மீது பேரன்பு காட்டி வந்தது.

ஒரு நாள் அந்தக் கனவான் தம் குதிரையின்மீதேறி அயலூருக்குச் சென்றுகொண்டிருந்தார். வழக்கம்போல்



அவர் நாயும் அவரைப் பின்தொடர்ந்தது. சூரியன் உச்சியில் வந்ததும், கனவான் சிறிது ஓய்வு எடுத்துக்கொள்ளும் பொருட்டு, புரவியை ஒரு மரத்தில் கட்டிவிட்டு, தான் மற்றொரு பக்கத்தில் படுத்துக் கண் வளர்ந்தார். தான் கொண்டு வந்திருந்த பணப்பையைத் தன் பக்கத்தில் வைத்துக்கொண்டார். மறுபடியும் கண் விழித்து குதிரையின்மீது ஏறிச் செல்லும்பொழுது, பணப்பையை எடுத்துச்

செல்ல மறந்துவிட்டார். ஆனால், இவருடன் வந்த நாயானது அப்பணப்பையைக் கவனித்துக்கொண்டேயிருந்தது.

கனவான் புரவியின்மீதேறிச் சிறிது தூரம் சென்றதும், நாய் தன் பற்களால் பணப்பையைத் தூக்க முயன்றது. அது மிகவும் கனமாயிருந்தபடியால் நாயினால் தூக்க முடியவில்லை. உடனே நாய் கனவான் சென்ற வழியே ஓடி, குதிரையின் முன்னால் சென்று பல தடவை குரைத்து வழிமறித்தது. கனவானுக்கு விஷயம் ஒன்றும் புரியவில்லை. அதனால் அவர் தன் நாயை அதட்டினார். பயன் படவில்லை. நாய் பின்னும் விடாமல் குரைத்துக் குதிரையைக் கடித்தது.



இதைக்கண்ட கனவான் தன் நாய்க்குத் தீடீரென்று பைத்தியம் பிடித்துவிட்டது என்று நினைத்தார். உடனே தன் கைத்துப்பாக்கியை எடுத்து குறிபார்த்து நாயைச் சுட்டார். குண்டு தன்மீது பாயவே நாய் பூமியின்மீது விழுந்தது. ஆயினும், சில நிமிஷங்களுக்குள் எழுந்து பணப்பை இருந்த இடத்திற்கு ஓடி, அப்பையின் பக்கத்தில் விழுந்தது.

நாயைச் சுட்டு வீழ்த்தியபின் கனவான் ஒருவித இடையூறுமின்றித் தம் வழியே போனார். ஆனால், சிறிது

தூரம் சென்றதும் அவருக்குப் பணப்பையின் ஞாபகம் வந்தது. பணப்பையைக் காணோம். தான் முன் படுத்துறங்கின மரத்தடியில் பணப்பையை வைத்தது, நினைவிற்கு வந்தது. உடனே அவர் குதிரையைத் திருப்பி மீண்டும் அம்மரத்தடிக்கு வந்தார். என்ன அதிசயம்! நாய் பணப் பையின்மீது தலையை வைத்துப் படுத்திருந்தது.

நாயைக் கண்டதும் கனவானுக்கு அது குரைத்த காரணம் தெற்றென விளங்கிற்று. தான் ஆராயாது செய்த செயலுக்கு மிகவும் வருந்தினார். எஜமானனைக் கண்டதும் நாய் தன் வாலை மெதுவாக ஆட்டிற்று. அதைக் கண்ட கனவான் அடக்கமுடியாத துக்கத்தில் ஆழ்ந்து அழுதார். பிறகு ஒருவாறு தேறினார். துப்பாக்கி குண்டு நாயின் மார்பில் செல்லவில்லை. அதன் முன் காலில் பலத்த காயத்தை மாத்திரம் உண்டாக்கிற்று. ஆகையால் தன் அருமையான நாய் பிழைப்பதற்கு வழி இருக்கிறதென்று கனவான் உணர்ந்தார். அந்த நாயைத் தன் குதிரையின்மேல் வைத்துக்கொண்டு, பக்கத்து ஊரில் உள்ள வைத்திய சாலைக்குச் சென்றார். தக்க மருந்துகள் போட்டதனால் சில நாட்களில் அந்த நாய் குணமடைந்தது. கனவானும் தன் நாய் பிழைத்ததற்காக மனம் மிக மகிழ்ந்தார். ஆகையால் நமக்கு உபகாரம் செய்பவர்களை ஒருநாளும் மறக்கக்கூடாது.

நன்றியறிவு	கனவான்	கண்வளர்ந்தார்	ஞாபகம்
மிருகம்	தனவான்	முயன்றது	உறங்கின
பிராணி	ஆவி	குரைத்து	மீண்டும்
உள்ளளவும்	அருமை	மறித்தது	தெற்றென
மூதுரை	பேரன்பு	விஷயம்	ஆராயாது
இணங்க	அயலூர்	அதட்டினர்	தேறினர்
எசமான்	தொடர்ந்தது	திடீரென்று	வைத்தியசாலை

ஆயுள்	உச்சி	பைத்தியம்
நலிவு	ஓய்வு	கைத்துப்பாக்கி
பொருட்படுத்தாது	புரவி	இடையூறு

கேள்விகள்

1. நன்றியுள்ள மிருகம் எது?
2. கனவான் ஞாபக மறதியாகச் செய்த காரியம்என்ன?
3. நாய் தன் எஜமான் செய்த தவறுதலை எவ்வாறு எடுத்துக் காண்பித்தது?
4. கனவான் ஆராயாது செய்த காரியம் என்ன?
5. இப்பாடத்தினுல் நீங்கள் அறிந்த நீதி என்ன?

அப்பியாசம்

கீழே எழுதியுள்ள பதங்களைச் சேர்த்து எழுதுக.

நன்றி + அறிவு =

அயல் + ஊர் =

கொண்டு + இருந்து =

குதிரையை + கடித்தது =

தனக்கு + செய்த =

வைத்து + கொண்டார் =

அடக்க + முடியாத =

வழி + இருக்கிறது =

அப்பியாசம்

வார்த்தைகளைச் சரியான வரிசையில் அமைத்து வாக்கியங்கள் எழுதுக.

1. ஒரு இருந்தார் கனவான் ஊரில் ஒரு.
2. இருந்தது நாய் ஒரு அத்தனவானிடம்.
3. எடுத்து தன் கைத்துப்பாக்கியை சுட்டார் நாயைக் குறி பார்த்து உடனே.
4. மிகவும் ஆராயாது செயலுக்கு செய்த வருந்தினர் தான்

5. மகிழ்ந்தார் மிகமனம் தன் நாய் பிழைத்ததற்காக கன வானும்.

6. மறக்கக்கூடாது ஆகையால் உபகாரம் நமக்கு ஒருநாளும் செய்பவர்களை.

---

4. லோகமான்ய பாலகங்காதரதிலகர்

நமது தாய்நாட்டின் விடுதலைக்காக உழைத்த தேசபக்தர்களில் திலகர் தலை சிறந்தவராவர். இவர் பம்பாய் மாகாணத்தில் இரத்தினகிரி என்னும் ஊரில் 1856-ம் ஆண்டு அவதரித்தார். இவருடைய தந்தை திரு நாமம் இராமச்சந்திர திலகர். "விளையும் பயிர் முளையிலே தெரியும்" என்ற முதுமொழிக்கிணங்க மிக்க இளம்பிரா யத்திலேயே திலகரிடம் அநேக அருங்குணங்கள் காணப் பட்டன.

இவர் பத்தாவது வகுப்பு வாசித்ததும் பூனாவில் உள்ள தட்சிணகலாசாலையில் சேர்ந்து பி. ஏ. பட்டம் பெற்றார். அப்பொழுது இவர் சீர்கேடு அடைந்த இந்திய நாட்டை முன்னணியில் நிறுத்த விரும்பினார். திலகர், ஜோஷி, விஷ்ணு சாஸ்திரி என்ற இரு நண்பர்க ளோடு சேர்ந்து, ஒரு பள்ளிக்கூடத்தை ஏற்படுத்திச் சிறு வர்களுக்குக் கல்வி கற்பித்து வந்தார். நாளடைவில் இச் சிறு பள்ளிக்கூடம் பிறைமதிபோல் வளர்ந்து ஒரு உயர் தரக் கல்லூரியாக மாறியது. திலகர் அக் கல்லூரி மாண வர்களுக்குக் கணக்கும் ஆரியமும் கற்பித்து வந்தார். மேலும், திலகர் ஜனங்களுடைய நன்மைக்காக இருபத்திரி கைகள் வெளியிட்டு வந்தார். அந்தக் காலங்களில் நமது திலகருக்கு, அவருடைய விரோதிகளால் அநேக துன்பங் கள் உண்டாயின. ஆனால், நம் திலகர் தமது இடுக்கண் களைப் பொருட்படுத்தவில்லை. இவருக்கு உதவிசெய்து வந்த நண்பர்கள்கூட இவரை விட்டு விலகினர். எனவே,

எல்லாக் காரியங்களையும் திலகர் ஒருவரே பார்த்துக் கொள்ளவேண்டியதாயிற்று.

பொதுநலத்திற்காக உழைத்துவந்த நம் திலகர் பெருமான் காங்கிரஸ் மகாசபையிலும் சேர்ந்து அரிய பணிகள் புரிந்துவந்தார். ஐந்து ஆண்டுகளுக்கு, காங்கிரஸ் மகாசபையின் காரியதரிசியாய் இருந்தார். தாம் எடுத்த காரி

யங்களை நன்ருகச்செய்து முடித்தார். அக்காலத்தில் பாரத தேசத்தில் ஏற்பட்ட பெரிய பஞ்சத்தில் திலகர், ஜனங்களுக்கு மிகுந்த உதவி செய்தார். இதனல் திலகர் ஜனங்களுடைய நன்மதிப்பையும் சம்பாதித்தார்.

இவர் இந்தியர்களுக்குத் தேசாபிமானம் உண்டாக வேண்டும் என்று நினைத்து, மகாராஷ்டிர வீரராகிய சிவாஜியின் பிறந்த தினத்தைக் கொண்டாட ஏற்பாடு

செய்தார். இவர் ஜனங்களைக் கலகம் செய்யத் தூண்டினர் என்று, துரைத்தனத்தார் இவரைச் சிறைச்சாலையில் அடைத்தனர். பிறகு அவர்கள் திலகரது உண்மையான தேசபக்தியை அறிந்து, அவர் செய்த காரியம் குற்றம் இல்லாதது என்று அறிந்து திலகரை விடுதலை செய்தனர்.

திலகர் 1898-ம் ஆண்டு சென்னைக்கு விஜயம் செய்தார். இங்கிருந்து இராமேஸ்வரம், இலங்கை முதலிய இடங்களுக்குச் சென்று பிரசங்கங்கள் செய்தார். திலகரது பொருள் பொதிந்த வீரமொழிகளைக் கேட்டு ஜனங்கள் வியந்தார்கள். திலகர், தம் மனதில் உறங்கிக் கிடக்கும் தேசாபிமானத்தை தட்டி எழுப்பினர்.

ஐரோப்பாவில் யுத்தம் நடந்தபோது இந்தியர் ஆங்கிலேயர்களுக்கு உதவிசெய்ய வேண்டும் என்று இவர் கூறினர். சுயராஜ்யம் என்பதன் உண்மைக் கருத்து எல்லோருக்கும் தெரியும்படியாகப் பல பிரசங்கங்கள் புரிந்தார். இதனல் இவரை எல்லோரும் வியந்து கொண்டாடினர்கள்.

இவர் இங்கிலாந்து சென்று அங்குள்ளவர்களுக்கு இந்தியாவின் பரிதாபமான நிலையைத் தெளிவாக எடுத்துக் காட்டினர். இந்தியர்களின் குறைகளை கல்லும் கரையும் படி திலகர் எடுத்துக் கூறினர். இவர் இந்தியாவிற்குத் திரும்பியதும் காங்கிரஸ் ஜனநாயக கட்சி என்ற சபையை ஏற்படுத்தினர்.

இவர் இந்தியாவிற்குச் செய்த நன்மைகள் பல. 1920-ம் ஆண்டு ஜூலை மாதத்தில் இவருடைய பிறந்த தினத்தை இந்திய மக்கள் கொண்டாடினர். அதேமாத முடிவில் இவர் சுரநோயினல் விண்ணுலகு அடைந்தார். இவருடைய பிரிவுக்காக இந்தியர் அனைவரும் மிக வருந்தினர்கள்.

திலகர் ஒரு பெரிய தேசபக்தர். தனது உடல், பொருள், ஆவி மூன்றையும் தாய்நாட்டிற்கு அர்ப்பணம்

செய்தவர். தன்னலம் அற்றவர். பிறர் நலம் பேணு வதையே தனது பெருங்கடனாகக் கொண்டார். திலகர் பெரிய அறிவாளி. கணிதத்திலும், வடமொழியிலும் திலகர் வல்லவர். இவர் அநேக உயர்ந்த நூல்களை இயற்றிருக் கிறார். இத்தகைய சிறந்த தேசபக்தராகிய திலகரை இந்தியராகிய நாம் ஒருநாளும் மறக்கமாட்டோம்.

தாய்நாடு	பிறைமதி	ஆண்டுகள்	விஜயம்
விடுதலை	கல்லூரி	காரியதரிசி	பொருள்பொதிந்த
உழைத்த	மாணவர்	சேவ்வனே	வியந்து
தேசபக்தர்	ஆரியம்	பாரததேசம்	ஆங்கிலேயர்
தலைசிறந்த	பத்திரிகை	பஞ்சம்	சுயராஜ்யம்
அவதரித்தார்	விரோதி	நன்மதிப்பு	பரிதாபமான
திருநாமம்	இடுக்கண்	விசுவாசம்	தெளிவாக
முதுமொழி	விலகினர்	சம்பாதித்தார்	விண்ணுலகு
இளம்பிராயம்	பொதுநலம்	தேசாபிமானம்	அர்ப்பணம்
அருங்குணங்கள்	உழைத்து	மகாராஷ்டிரவீரர்	தன்னலம்
கலாசாலை	பெருமான்	பிறந்ததினம்	பிறர் நலம்
சீர்கேடு	காங்கிரஸ்	கொண்டாடினர்	பேணுவது
முன்னணி	மகாசபை	தூண்டினர்	கடன்
பணிகள்	சிறைச்சாலை	துரைத்தனத்தார்	கணிதம்
புரிந்து	அரிய		நூல்கள்

கேள்விகள்

1. திலகர் எங்கே பிறந்தார்?
2. திலகரின் தந்தை பெயரென்ன?
3. திலகர் எந்த சபையில் சேர்ந்து உழைத்தார்?
4. தேசாபிமானத்தை உண்டாக்கும்பொருட்டு திலகர் செய்தது என்ன? இதனால் திலகருக்கு விளைந்த கஷ்டம் யாது?
5. இந்தியாவின் நிலைமையை ஆங்கிலேயருக்கு எவ்விதம் எடுத்துக் காட்டினர்?

இப்பாடத்தில் வந்துள்ள ஐந்து பெயரெச்சங்களை எழுதுக. நட என்பது வினைச்சொல்.

ஆனால் நடத்தல் என்பது பெயர். இது ஒரு தொழிலுக்குப் பெயராக வருவதால் இதற்குத் தொழிற் பெயர் என்று பெயர்

பின்வரும் வினைச் சொற்களைப் பெயர்ச் சொற்களாக எழுதுக:

நினை, இரு, கவனி, பாடு. இந்த வினைச் சொற்களில் இருந்து கிடைக்கும் பெயர்கள் தொழிற் பெயர்கள் என்று பெயர்.

அப்பியாசம்

கோடிட்ட இடங்களில் சரியான வார்த்தைகளை அமைக்க :

1. இவர் ——— மாகாணத்தில் ——— என்னும் ஊரில் அவதரித்தார்.

2. இவருடைய ——— திருநாமம் ———.

3. திலகர் ஜனங்களின் நன்மைக்காக இரு ——— ——— வந்தார்.

4. ஐரோப்பாவில் யுத்தம் நடந்தபொழுது ——— ——— உதவி செய்யவேண்டும் என்று இவர் கூறினார்.

---

5. தேகப்பயிற்சி

நமது தேகத்தை இரும்பிற்கு ஒப்பிடலாம். உபயோகிக்காத இரும்பு துருப்பிடிக்கிறது. "துலக்காத ஆயுதம் துருப்பிடிக்கும்" என்ற ஒரு பழமொழியும் இக் கருத்தையே வலியுறுத்துகிறது. ஒரு ஆயுதத்தை அடிக்கடி உபயோகித்து அதற்கு எண்ணெய் முதலியவைகள் பூசி வந்தால் ஆயுதம் பளபளப்பாக இருக்கும். எப்பொழுதும் அது உபயோகத்திற்கு உதவும். இவ்வாறு செய்யாமல் ஆயுதத்தை அடிக்கடி கவனிக்காது விட்டுவிட்டால் அது துருப்பிடிக்கிறது. பிறகு அதனால் ஒரு பயனும் உண்டாகாது. நம்முடைய தேகமும் வேலை செய்யாதிருப்பதினால் வியாதி ஏற்பட்டுப் பலஹீன மடைகின்றது.உழைக்கிற

தேகம் உரம்பிடிக்கும். ஆதலால் நம் தேகத்திற்கு ஏதாவது வேலை கொடுக்கவேண்டும்.

தேகப்பயிற்சி செய்தால் நம் தேகத்தில் உள்ள அசுத்தமானது வேர்வையாக வெளியே வருகின்றது. இரத்த ஓட்டம் அதிகப்படுகின்றது. உண்ணும் உணவு எளிதில் சீரணமாகிறது. ஞாபக சக்தியும் அதிகரிக்கின்றது. இவ்வாறு தேகப்பயிற்சி செய்யாமல் நாள் முழுதும் சோம்பி இருப்பவர்கள், தேகத்திற்குக் கொடுக்க வேண்டிய பயிர்ச்சியை அசட்டை செய்கின்றவர்கள் ஆவார்கள். அதனால் அவர்கள் நோய்க்கு இடங்கொடுத்து தேக பலத்தை இழக்கின்றனர். அவர்களுக்குக் கல்வியிலும் உற்சாகம் குறைகின்றது. ஆதலால், தேகப்பயிற்சியே தேக ஆரோக்கியத்திற்கும் மன வலிமைக்கும் அவசியமானதாகும்.

தேகாப்பியாசம் இல்லாவிடின் அநேக அல்லல்கள் விளையும். முதலில் நாம் உண்ட உணவு சீரணமாகாது. இதனால் வயிற்று வலி, மலச் சிக்கல் முதலிய கொடிய நோய்கள் நம்மை வந்து அடையும். சரியாக நித்திரை உண்டாகாது. உறக்கமின்மையால் தளர்வு ஏற்படும்.

தேகப்பயிற்சி செய்யும்போது அதிகமான காற்றைச் சுவாசிக்க நேரிடும். நல்ல காற்று நமது சுவாசப் பையி

னுள் செல்வதால் இரத்தம் சுத்தியாகின்றது. இரத்த ஓட்டம் அதிகமாகிறது.

தேகத்தில் பலம் உண்டாவதால் நோயைத் தடுக்கும் சக்தி ஏற்படுகிறது. ஆகையால் ஒழுங்காக தேகப்பயிற்சி செய்யும் ஒருவனைப் பிணிகள் துன்புறுத்தாது. தற்செயலாக வந்தாலும் அது எளிதில் குணமாகிவிடும். தேகத்தில் பலமில்லாதவர்கள் நோயினால் பெருத்த துன்பமடைகின்றனர். தேக பலமுள்ளவர்கள் கடினமான வேலைகளைச் செய்வார்கள். பலஹீனமுள்ளவர்கள் எந்த வேலையையும் சரிவரச் செய்ய முடியாது.

தேகப்பயிற்சியை, காற்றோட்ட முள்ள இடங்களில் செய்யவேண்டும். தினந்தோறும் வியாயாமத்தைக் காலையிலும், மாலையிலும் ஒழுங்காகச் செய்யவேண்டும். அவரவருடைய தேக நிலைமைக்கு ஏற்ற தேகப்பயிற்சியைச் செய்தல் வேண்டும். வலிவில்லாதவர்கள் அதிகக் கடினமான தேகப்பயிற்சியைச் செய்தலாகாது. வேண்டுமானால் அவர்கள் வெளியே உலாவிவரலாம். ஏனெனில், உலாவுவதும் ஒரு தேகப்பயிற்சியே. நீந்துதல், ஓடுதல், குதிரை சவாரி செய்தல், பந்து விளையாடுதல் முதலியன தேகப்பயிற்சியைச் சேர்ந்தவை. இவற்றை ஒழுங்காகச் செய்துவந்தால் நாளடைவில் தேகம் வலுவடையும். நோயின்றி வாழலாம். "நோய்க் கிடங்கொடேல்" என்பதை நாம் நன்குணரவேண்டும்.

தேகப்பயிற்சி	பலஹீனம்	உற்சாகம்	தளர்வு
ஒப்பிடலாம்	உரம்	ஆரோக்கியம்	சுவாசப்பை
துரு	சீரணம்	மலச்சிக்கல்	பிணிகள்
துலக்காத	சோம்பி	நித்திரை	தற்செயல்
வலியுறுத்துகிறது	இழக்கின்றனர்	சுவாசிக்க	வியாயாமம்
உலாவி	வலு		

கேள்விகள்

1. நமது தேகத்தை எதற்கு ஒப்பிடலாம்?
2. தேகப்பயிற்சியினால் நாம் அடையும் நன்மைகள் என்ன?
3. தேகப்பயிற்சி இல்லாததினால் நமக்கு ஏற்படும் தீமைகள் என்ன?
4. அதிகமான காற்றை உட்கொள்வதினால் விளையும் நன்மை என்ன?
5. நாம் எவ்வாறு தேகப்பயிற்சி செய்ய வேண்டும்?
6. தேகப்பயிற்சி எத்தனை வகைப்படும்?

அப்பியாசம்

பின்வரும் வார்த்தைகளைப் பிரித்து எழுதுக.

(1) ஒப்பிடலாம்
(2) துருப்பிடிக்கும்
(3) செய்யாதிருப்பதினால்
(4) சோம்பியிருந்தால்
(5) உறக்கமின்மையால்
(6) அவரவருடைய

அப்பியாசம்

ஒவ்வொருநாளும் காலையிலும் மாலையிலும் நாம் தேகப்பயிற்சி செய்ய வேண்டும். இவ்வாக்கியத்தில் உள்ள நாள், காலை, மாலை முதலியவைகள் பெயர்ச் சொற்கள். ஆனால், ஏதாவது ஒரு காலத்தைஉணர்த்தும்பெயர்களுக்குக் காலப்பெயர் என்று சொல்லுவார்கள்.

கீழ்க்கண்ட வாக்கியங்களில் உள்ள காலப்பெயர்களைக் குறிக்க.

1. சனிக்கிழமை எனக்கு விடுமுறை நாள்.
2. நான் நேற்றுக் காலையில் தேகப்பயிற்சி செய்தேன்.
3. சந்திரன் இரவில் ஒளி தருகிறான்.
4. இரண்டு வருடங்கள் கழிந்தன.
5. ஐப்பசி மாதம் தீபாவளி வரும்.
6. இந்த வேலையைச் செய்ய ஐந்து நிமிஷங்கள் செல்லும்.

6. பாரததேசம்

(1) வெள்ளிப்பனிமலையின் மீதுலவுவோம்-அடி
மேலைக் கடல்முழுதும் கப்பல் விடுவோம்
பள்ளித்தலமனைத்தும் கோயில் செய்குவோம்-
[எங்கள்
பாரத தேசமென்று தோள்கொட்டுவோம்.

(2) முத்துக் குளிப்பதொரு தென்கடலிலே
மொய்த்து வணிகர் பல நாட்டினர் வந்தே
நத்தி நமக்கினிய பொருள் கொணர்ந்து
நம்மருள் வேண்டுவது மேற்கரையிலே

(3) கங்கை நதிக்கரையின் கோதுமைப் பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்ளுவோம்
சிங்க மராட்டியர்தம் கவிதை கொண்டு
சேரத்து தந்தங்கள் பரிசளிப்போம்.

(4) ஆயுதம் செய்வோம் நல்ல காயிதம் செய்வோம்.
ஆலைகள் வைப்போம் கல்விச் சாலைகள்
[வைப்போம்
ஓயுதல் செய்யோம் தலை சாயுதல் செய்யோம்
உண்மைகள் சொல்வோம் பல வண்மைகள்
[செய்வோம்

—பாரதியார்

பனிமலை மேலைக்கடல் பள்ளித்தலம் தென்கடல்
மொய்த்து நத்தி மாறுகொள்வோம் ஆலை
சேரத்து தந்தங்கள் வண்மைகள்

கேள்விகள்

1. பாரதியார் நம் தேச மக்களது வலிமையை எங்ஙனம் புகழ்கிறார் ?
2. தென் கடலிலும், மேற்கரையிலும் நடந்த சம்பவங்கள் என்ன ?

3. சேரத்து தந்தங்களை எதற்கு பரிசளிப்பது?

4. நம் நாட்டார் எவைச் செய்வோம் என்கிறார்கள்? எவைகளைச் செய்யோம் என்கிறார்கள்?

5. செய்வோம், செய்யோம், இந்த இரண்டு வார்த்தைகளுக்கும் உள்ள பொருள் வேறுபாடு என்ன?

குறிப்புரை: வெள்ளிப் பனிமலை = இமயமலை. (2) மேலைக் கடல் = மேற்குப் பக்கத்தில் உள்ள அரபிக்கடல். தென்கடல் — இந்துமகா சமுத்திரம். மொய்த்து = நெருங்கி. நத்தி = மாறு. கொள்வோம் = பண்டமாற்று செய்வோம். சேரத்து தந்தங்கள் = சேரநாட்டில் (மலையாள நாட்டில்) கிடைக்கும் யானைத்தந்தங்கள், சேர நாட்டில் யானைகள் அதிகம். ஆலை = கரும்பாலைமுதலியன.

---

7. எல்லாம் நன்மைக்கே

அளகாபுரி என்ற அழகிய நகரத்தை அனங்கபாலன் என்ற அரசன் ஆண்டு வந்தான். இம்மன்னனுக்கு மதிவாணன் என்ற மந்திரி ஒருவன் இருந்து வந்தான். மதிவாணனிடம் மன்னனுக்கு மிகுந்த மதிப்பிருந்தது. மதிவாணனைக் கேட்காமல் அனங்கபாலன் ஒரு காரியமும் செய்வதில்லை.

ஆனால், மதிவாணன் என்ற அமைச்சனிடம் ஒரு விசேஷ குணம் இருந்தது. எப்பொழுதும் "எல்லாம் நமது நன்மைக்கே" என்று கூறி வந்தான். மன்னனுக்கு ஏதாவது கஷ்டம் வந்த காலத்திலும்கூட மதிவாணன் "எல்லாம் நமது நன்மைக்கே" என்று கூறிவருவான். அரசனுக்கு இது விளங்கவில்லை. அமைச்சனுக்குக் கொஞ்சம் பைத்தியம் பிடித்திருக்கிறது என்று எண்ணி வந்தான்.

நிற்க, ஒரு நாள் நகர மக்கள் நரபதியை அணுகி "அரசே கானகத்து விலங்குகளால் நாங்கள் பெரிதும்

வருந்துகிறோம். ஆகவே, கொடிய விலங்குகளின் தொந்தரவிலிருந்து எங்களை விடுவிக்க வேண்டும்" என்று குறையிரந்து வேண்டினர். அரசனும் "அவ்வண்ணமே யாகுக" என்று சொன்னான்.

அச்சமயத்தில் ஒரு முனிவர் அரசனைக் காணவந்தார். அவர் அருமையான மாங்கனி ஒன்றை அரசனுக்கு அளித்தார். அனங்கபாலனுக்கு மாங்கனியின்மீது அளவிறந்த ஆசையுண்டு. ஆகவே, தான் வேட்டைக்குப் போகுமுன் அந்த மாங்கனியை அரிந்து உண்ண வேண்டும் என்று எண்ணி, அக்கனியை ஒரு கத்தியால் நறுக்க ஆரம்பித்தான். கத்தி மிகவும் கூர்மையாக இருந்தமையின், அக்கத்தி அரசனுடைய இடது கைச் சுண்டுவிரலை நறுக்கென்று சீவிச் சென்றது. விரல் நுனியை இழந்த அரசன் வலி பொறுக்கமாட்டாமல் வருந்தினான்.

அப்பொழுது அருகில் இருந்த அமைச்சன் "அரசே, இதுவும் ஒரு நன்மைக்குத்தான்" என்று நவின்றான். அரசனுக்கு கோபம் பொங்கி எழுந்தது. "அமைச்ச, நீ சொல்வது நனி யன்று. யான் விரலிழந்து, வேதனையடையும்போது,இதுவும் நன்மைக்கு என்கிறாயே என்றான்.

"இது எனக்கு என்ன நன்மை பயக்கும்?" என்று அரசன் கண்களில் கோபக் கனல் எழக் கேட்டான். இதைக் கேட்ட அமைச்சன் அரசனை நோக்கி "மன்னர் மன்ன, நமது வாழ்க்கையில் நடக்கும் நிகழ்ச்சிகள் யாவும் நமக்கு நலத்தையே கொடுக்கும் என்பது எனது துணிபு" என்று சொன்னான். இதைக் கேட்ட அரசன் "இம்மதி கெட்ட மந்திரியைச் சிறை செய்யுங்கள்" என்று உத்தரவிட்டான். கொற்றவன் ஏவற்படி ஏவலாட்கள் அமைச்சனைச் சிறையிட்டனர்.

பிறகு அரசன் குடிகளின் வேண்டுகோளின்படி வேட்டையாட வனத்திற்குச் சென்றனன். அரசன்

மும்முரமாக வேட்டை யாடுகையில் தனது பரிவாரங்களை விட்டுப் பிரிந்து தன்னந்தனியே அந்த அடவிக்குள் போனான்.

நாழிகையாயிற்று. அரசன் தன் பரிசனங்களைச் சந்திக்கும் பொருட்டு அங்கும் இங்கும் தேடியலைந்தான். திடீரென்று ஒரு கொள்ளைக் கூட்டத்தார் அரசனை வளைத்துக் கொண்டனர். அரசனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அப்பொழுது அத்திருடர்களின் தலைவன் தனது ஆட்களை நோக்கி "நண்பர்களே இவனைப் பிடித்து கை கால்களைப் பிணியுங்கள். நமது தெய்வமாகிய காளி தேவிக்கு இவனே ஏற்ற பலியாவான். இவ்வருடம் நமது காளி "இப்பலியால் மனம் மிக மகிழுவாள். நம் தொழிலில் நமக்கு நல்ல வருவாய் கிடைக்கும். நேரமாகிறது, சீக்கிரம் இவனை கோவிலுக்குக் கொண்டு போங்கள்" என்றான்.

அச்சமயத்தில் ஒரு கள்வன் அரசனின் இடதுகையில் சிறுவிரல் குறைந்திருப்பது கண்டு மனம் வருந்தி, இதைக் கள்வன் தலைவனிடம் தெரிவித்தான். கள்வன் தலைவன் "ஐயே, இம்மனிதன் இவ்வளவு அழகாய் இருக்கின்றான் என்று மனம் மகிழ்ந்தேன். இப்பொழுது இவன் உறுப்பு ஒன்று குறைந்தவனாகப் போய்விட்டானே என் செய்வது. ஆகையால், இவன் நமது காளி தேவிக்கு பலியாகத் தகுந்தவன் இல்லை. இவனை விட்டுவிடுங்கள். வேறொரு மனிதனைப் பார்ப்போம்" என்று சொன்னான். அரசன் விடுதலை அடைந்தான்.

அரசன் தன் அரண்மனைக்கு வந்தவுடன் மந்திரியை அழைத்துவரக் கட்டளையிட்டான். மந்திரியும் அரசன் முன்னர் வந்து பணிந்தான். அரசன் மந்திரியை நோக்கி "மந்திரி நீ சொன்னது உண்மையாயிற்று. இன்று நான் என் சிறு விரலை இழக்காதிருந்தால் இந்நேரம் நான் காளி தேவிக்கு பலியாகி யிருப்பேன்" என்று காட்டில் நடந்

தையெல்லாம் விவரித்துக் கூறினன். மந்திரியும் மகிழ்ச்சி யடைந்தான். பிறகு அமைச்சன் அரசனை நோக்கி "வேந்தே, நீர் என்னைச் சிறை செய்ததும் எனக்கு நலமாய் முடிந்தது. நான் சிறை செய்யப்படாமலிருந்தால் நானும் உம்மோடு வேட்டையாட வந்திருப்பேன். என் தேகத்தில் ஒரு ஊனமும் இல்லாதபடியால், அக்கள்வர்கள் என்னை நிச்சயமாக பலிகொடுத்திருப்பார்கள். ஆகையால் நம் வாழ்நாளில் நடக்கும் நிகழ்ச்சிகள் எல்லாம் நமது நன்மைக்கே யாகும்" என்று கூறினன். இதைக் கேட்ட அரசன் அமைச்சன் சொல்வது உண்மை. அவன் சிறந்த புத்திமான் என்று அறிந்து அமைச்சனுக்கு மிகுந்த சிறப்புகள் செய்தான்.

"மந்திரிக்கழகு வரும்பொருள் உரைத்தல்."

நகரம்	நவின்றுன்	மும்முரம்
மன்னன்	பொங்கி	பரிவாரம்
அமைச்சன்	நனிநன்று	தன்னந்தனியே
நரபதி	வேதனை	அடவி
நணுகி	கோபக்கனல்	பிணியுங்கள்
கானகம்	நிகழ்ச்சிகள்	பலி
குறையிரந்து	துணிபு	வருவாய்
அவ்வண்ணம்	மதிகெட்ட	உறுப்பு
முனிவர்	சிறை	விவரித்து
மாங்கனி	கொற்றவன்	ஊனம்
அளவிறந்த	ஏவலாட்கள்	சிறப்புகள்
நறுக்கென்று	வேண்டுகோள்	வரும்பொருள்

கேள்விகள்

1. அளகாபுரியை ஆண்டுவந்த அரசன் யார்? அவன் மந்திரியின் பெயர் என்ன?
2. அரசன் ஏன் காட்டிற்குப் போகவேண்டியதாயிற்று?

3. அரசன் சிறுவிரலை எவ்வாறு இழந்தான் ?
4. மந்திரி சிறை சென்றதற்குக் காரணம் என்ன ?
5. கானகத்தில் அரசனுக்கு ஏற்பட்ட விபத்து என்ன ?
6. இக்கதையினால் நாம் அறிந்துகொண்டது என்ன ?

அப்பியாசம்

1. காடு என்ற பொருளையுடைய மூன்று வார்த்தைகளை எழுதுக.

2. அரசன் என்பதற்கு வேறு மூன்று வார்த்தைகள் கூறுக. பின்வரும் வார்த்தைகளை வாக்கியங்களில் அமைக்க.

(1) நறுக்கென்று (2) அரற்றினான் (3) அரிந்து (4) குறையிறந்து (5) வருந்துகிறோம் (6) கூர்மையாக (7) நவின்றான் (8) வேதனை (9) அளவிறந்த (10) மும்முரமாக (11) தன்னந்தனியாக (12) வருவாய் (13) அங்குமிங்கும்.

பின்வரும் வார்த்தைகளில் உள்ள பெயர்ச் சொற்களையும், வினைச் சொற்களையும் தனித்தனி எழுதுக.

அரசன்	சென்றது
அமைச்சன்	கத்தி
இருந்தான்	மாங்கனி
விளங்கவில்லை	எழுந்தது
நகரமக்கள்	குடிகள்
சொன்னான்	போனான்
விலங்குகள்	அடவி
வேண்டினர்	

8. ஔவையார்

ஆத்திசூடி, கொன்றை வேந்தன் முதலிய நூல்களை இயற்றிய ஆசிரியர் பெயர் ஔவையார். இவர் முன் காலத்தில் தமிழகத்திலே இருந்துவந்த பெண் புலவர்களில் ஒருவர். இவர் தமிழில் மிக வல்லவர் என்பது இவருடைய பாக்களே நன்கு விளக்கும். 'ஔவை' என்ற பதத்திற்குக்

கிழவி என்று பொருள். அவர் பல்லாண்டுகள் வாழ்ந்திருந்த கிழவியாதலால் அவருக்கு இப்பெயர் வந்தது.

இவரைப்பற்றிப் பல வரலாறுகள் நம் தமிழகத்தே வழங்குகின்றன. பகவன் என்ற அந்தணனுக்கும், ஆதி என்னும் புலைமாதுக்கும் பிறந்த பல குழந்தைகளில் ஔவையாரும் ஒருவர். ஒவ்வொரு குழந்தையும் பிறந்த உடன் அந்த இடத்திலேயே விட்டுச்செல்ல வேண்டும் என்ற ஏற்பாட்டின்படி, ஒவ்வொரு குழந்தையும் அதது பிறந்த இடத்திலேயே விடப்பட்டது. அக்குழந்தைகளில் ஔவையாரும் ஒருவர். இது கன்ன பரம்பரையாக நாம்



கேட்கின்ற செய்தி. மேலும், ஒவ்வொரு குழந்தையும் பிறந்தவுடன் தங்களது பெற்றோரை நோக்கி ஒவ்வொரு செய்யுள் பாடியதாகவும் நாம் கேள்விப்படுகிறோம். அவ்வாறு நம் ஔவையாரும் ஒரு அருமையான செய்யுள் ஒன்றைப் பாடியதாகத் தெரிகிறது. அச்செய்யுள் வருமாறு:

" இட்டமுட னென்தலையில் இன்னபடி என்றெழுதி
விட்டசிவ னுஞ்செத்து விட்டானோ—முட்டமுட்டப்
பஞ்சமே யானாலும் பாரமவனுக் கன்னாய்
நெஞ்சமே யஞ்சாதே நீ என்பது

இச்செய்யுளைக்கேட்ட இவர் பெற்றோர் மனம் தெளி வடைந்து குழந்தையை ஒரு சாவடியில்விட்டுச் சென்றனர். பிறகு பாணன் ஒருவனுல் கண்டெடுக்கப்பெற்று வளர்க்கப் பட்டு வந்தது.

நம் ஔவையார் அநேக ஆண்டுகள் வாழ்ந்திருந்தார் என்று நாம் அறிகிறோம். அதற்கு ஒரு சான்று உள்ளது. ஔவையார் காலத்து அதிகமான் என்ற அரசன் ஒருவன் இருந்தான். இந்த அதிகமானும் ஔவையாரும் மிகநெருங் கிய நண்பர்கள். ஒருசமயம் ஔவையார் அதிகமானைப் பார்க்கும் விருப்புடையராய் அதிகமான் இருக்கும் இடத் திற்குச் சென்ருர். அச்சமயத்து அதிகமான் அரண்மனை யில் இல்லாது கானகத்திற்கு வேட்டையாடும் நிமித்தம் சென்றிருந்தான். பிறகு அதிகமான் அடவியிலிருந்து திரும்பி வந்தான். தனக்காக காத்துக்கொண்டிருக்கும் ஔவையாரைக் கண்டு மகிழ்ந்தான். அச்சமயம் காட்டி லிருந்து கொணர்ந்த ஒரு அருமையான நெல்லிக்கனி யொன்று அவனிடம் இருந்தது. அக்கனியை உண்டால் அநேக ஆண்டுகள் வாழ்வார்களென்பது அதிகமானுக்குத் தெரியும். ஆகவே, தன் நண்பராகிய ஔவையார் இவ்வுல கில் பல வருடங்கள் வாழவேண்டும் என்ற எண்ணத்தினுல் அக் கனியை அதிகமான் ஔவையாரிடம் கொடுத்தான். அதிகமானின் ஒப்பரிய இக்கொடையை பலவாருகப் புகழ்ந்தார். அற்புதமான இந்நெல்லிக்கனியை உண்டதால் ஔவையார் அநேக ஆண்டுகள் வாழ்ந்தனர் என்பர்.

ஔவையார் அதிகமானை எவ்வாறு புகழ்ந்து பாடி னரோ, அவ்வாறே அவர் பாரி என்ற மன்னனைப் பற்றிப் பாடி இருக்கிருர். பாரி இறந்த பிறகு அவன் புதல்விக ளான அங்கவை, சங்கவை என்ற இருபெண்களும் வறுமை யடைந்தார்கள். ஒருசமயம் ஔவையார் இப்பெண்க ளிடம் சென்ருர். அவர்கள் இவரை நன்கு வரவேற்று

உபசரித்தார்கள். தாங்கள் உண்ட அற்பமான கீரை உணவில் கொஞ்சம் கொடுத்தார்கள். உள்ளன்பினால் இட்ட உணவு சாதாரணமாய் இருந்தாலும், அது சிறந்தது. இம்மகளிரது உள்ளங்குளிர்ந்து கொடுத்த கொடையை ஔவையார் வியந்து பாடினார். அது வருமாறு:

வெய்தாய் நறுவிதாய் வேண்டளவும் தின்பதாய்
நெய்தா னளாவி நிறையிட்டு—பொய்யே
அடகென்று சொல்லி அமுதத்தை யிட்டாள்
கடகம் செறியாதோ கைக்கு.

என்று பாடினர். பிறகு இந்த இருமகளிரும் இரு அரசர்களை மணந்து சௌக்கியமாய் இருந்தார்கள்.

ஔவையாரை சரசுவதியின் அவதாரம் என்று சொல்லுவதுண்டு. ஏனெனில், நம் ஔவையார் பரந்த புலமை உடையவர். இவர் பாடிய பாட்டுகள் புறநானூறு முதலியன. சங்கநூல்களில் நிறைய இருக்கின்றன. ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி முதலிய நூல்களை ஔவையார் எழுதினதாக அநேகர் சொல்லுகின்றார்கள்.

நம் தமிழ் நாட்டில் ஔவையாரைப்பற்றி அநேக சரித்திரங்கள் வழங்குகின்றன. எது உண்மையாக இருப்பினும், ஔவையார் தமிழகத்தே வாழ்ந்த பெண்பாற் புலவர்களில் ஒருவர் என்றும், இவர் தமிழ்மொழிக்கு அரிய தொண்டு செய்துள்ளார் என்பதையும் யாரும் மறுக்க முடியாது.

இயற்றிய	சாவடி	வரவேற்று
ஆசிரியர்	பாணன்	உபசரித்து
பாக்கள்	சான்று	கீரை
பல்லாண்டு	நெருங்கிய	உள்ளம் குளிர்ந்து
வரலாறு	விருப்பு	வியந்து
புலமாது	நிமித்தம்	வெய்தாய்

சந்தேகம்	நெல்லிக்கனி	நறுவிதாய்
கன்ன பரம்பரை	ஒப்பரிய	அளாவி
செய்யுள்	கோடை	அடகு
நெஞ்சம்	பலவாறுக	கடகம்
அஞ்சாதே	புதல்விகள்	சரசுவதி
தெளிவடைந்து	வறுமை	அவதாரம்

கேள்விகள்

1. ஔவையார் இயற்றிய நூல்களில் சிலவற்றைக் கூறு ?
2. இவரைப்பற்றி வழங்கும் வரலாறுகளில் ஒன்றைக்கூறுக.
3. ஔவை எவ்வாறு பலவாண்டுகள் வாழ்ந்திருந்தார் ?
4. ஔவை, அதிகமான் நாட்டைப்பற்றிக் கூறுக.
5. பாரிமகளிர்கள் ஔவைக்கிட்ட விருந்தைப்பற்றி எழுதுக.

அப்பியாசம்

பகவன் என்ற பெயர்ச்சொல் ஆண்பால். ஏனென்றால், பகவன் என்றது ஒரு ஆண் பிள்ளையின் பெயர். ஆதி என்ற பெயர்ச் சொல் பெண்பால். அவன் என்பது ஆண்பால் பெயர்ச்சொல். அவள் என்பது பெண்பால் பெயர்ச்சொல். ஆண் வகுப்பைக் குறிக்கும் சொற்கள் எல்லாம் ஆண்பால். பெண்வகுப்பைக் குறிக் கும் சொற்களெல்லாம் பெண்பால்.

கீழ்க்கண்ட ஆண்பாற் பெயர்களுக்குத் தகுந்த பெண்பாற் பெயர்களைக் கூறுக. பெண்பாற் பெயர்களுக்கேற்ற ஆண்பால் கூறுக.

அவன்	=	அரசி	=
குருடன்	=	பிச்சைக்காரி	=
அப்பா	=	பாட்டி	=
தம்பி	=	நல்லவள்	=
அண்ணன்	=	பேத்தி	=
மாமன்	=	இராணி	=
சிறுவன்	=	தாயார்	=
வேலைக்காரன்	=	அவள்	=

அப்பியாசம்

அரை—அறை கிளி—கிழி
உரை—உறை அழி—அளி
அரிந்தான்—அறிந்தான் இரங்கி—இறங்கி
குளி—குழி கூரிய—கூறிய.

மேற்காட்டிய வார்த்தைகளில் பொருள் எவ்விதம் மாறுகிறது?

கீழ்க்கண்ட வார்த்தைகளை அமைத்து வாக்கியங்கள் எழுதுக.

பல்லாண்டு	சான்று	உள்ளன்பு
அருமையான	பலவாறாக	உபசரித்து
சங்கேதம்	வரவேற்று	புலமை
தெளிவடைந்து	வியந்து	மறுக்கமுடியாது

9. வீரத்தாதி

நமது இந்தியா தேசத்தை இரு பெறும் பிரிவுகளாக பிரிக்கலாம். அவை, வட இந்தியா என்றும் தென்னிந்தியா என்றும் பெயர் பெறும். வட இந்தியாவைப் பல் வேறு வமிசத்து அரசர்கள் அரசாண்டு வந்தனர். ஒரு சமயம் வட இந்தியாவானது அநேக பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அப் பிரிவுகளை எல்லாம் இராஜபுத்திரர் என்ற வமிசத்து அரசர்கள் முறைப்படி அரசாண்டு வந்தனர். இராஜபுத்திரர்கள் எல்லோரும் ஒரே குலமாயினும் அவர்களுக்குள் ஒற்றுமை கிடையாது. அவர்கள் தங்களுக்குள்ளேயே எப்பொழுதும் சண்டையிட்டுக்கொள்வார்கள்.

இராஜபுத்திரர்கள் சிறந்த வீரர்கள். பிறருக்கு உதவி செய்ய தங்கள் உயிரையும் அர்ப்பணம் செய்வார்கள். ஆண்கள் எவ்வளவு வீரமுள்ளவர்களோ அஃதே போல் பெண்களும் வீரம் வாய்ந்தவர்கள். பகைவர்களுக்குக் கொஞ்சமும் அஞ்சமாட்டார்கள். ஒருகால் தாம் பகைவர் கையில் சிக்கினலும் தங்கள் உயிரைவிடுவார்களே

யன்றி அடிமை வாழ்வு வாழமாட்டார்கள். தங்கள் தேசத்திற்காக எவ்விதமான தியாகத்தையும் செய்ய இராஜ புத்திரர்கள் சித்தமாயிருந்தார்கள்.

மீவார் என்ற ஒரு நாட்டை விக்ரமஜித் என்ற ஒருவன் ஆண்டு வந்தான். இராஜபுத்திர அரசர்கள் எல்லாருக்கும் ராணு என்று பெயர். ராணு விக்ரமஜித் மீவார் நாட்டை மனுநீதி தவருமல் செங்கோல் ஒச்சி வந்தான்.

ராணு விக்ரமஜித்தினிடம் ஒரு சேனுதிபதி இருந்தான். அவன் பெயர் வனவீரன் என்பது. இந்த சேனுதிபதி நயவஞ்சகமாய் மீவார் நாட்டைத் தான் கைப்பற்ற எண்ணினுன். தக்க சமயம் வர, இந்த கொலை அஞ்சாப் பாதகன் விக்ரமஜித்தை வானுலகுக்கு அனுப்பினுன். மீவார் நாட்டைக் கைப்பற்றிக் கொண்டான்.

இக் கயவன் மனம் இதோடு சந்தோஷம் அடையவில்லை. விக்ரமஜித்தின் வமிசம் உள்ளவரையில் தான் பயமில்லாமல் அரியணையில் அமர்ந்திருக்க முடியாது என்று அறிந்தான். ஆகவே, விக்ரமஜித்தின் வமிசத்தை அடியோடு ஒழிக்க எண்ணினுன். ஒருவர் பின் ஒருவராக, விக்ரமஜித்தின் உறவினரையெல்லாம் தன் வாளிற்கு இரையாக்கினுன்.

விக்ரமஜித்துக்கு ஒரு தம்பி இருந்தான். அவன் பெயர் உதயசிங். விக்ரமஜித் இறக்கும்போது, உதயசிங் பச்சிளங் குழவியாயிருந்தான். பன்ணு என்ற தாதியால் உதயசிங் வளர்க்கப்பட்டு வந்தான்.

பன்ணு, உதயசிங்கை தான் பெற்றெடுத்த குழவியினும் அருமையாக வளர்த்து வந்தாள். வனவீரன் உதயசிங்கைக் கொல்வதற்குக் காத்திருக்கிருன் என்பதை பன்ணு நன்கு அறிவாள். ஆகையால், எப்பாடுபட்டேனும் உதயசிங்கைக் காப்பாற்ற முயன்ருள், விக்கிரமஜித்தினிடம் வேலைபார்த்து வந்த நம்பிக்கையுள்ள வேலையா

ளின் உதவியால் உதயசிங்கை இரகசியமாக வைத்திருந் தாள். ஆனால், உதயசிங்கை இராஜ்யத்தைவிட்டு வெளியே கொண்டுபோக முடியவில்லை.

சின்னாட்கள் சென்றன. திடீரென்று ஒருநாள் நள்ளிரவில் வேலைக்காரன் பன்னாவிடம் ஓடி வந்தான். "அம்மா, பெரிய விபத்து விளைந்துவிட்டது. இதிலிருந்து உய்யும் வழி என்ன! வனவீரன் உருவிய கத்தியோடு உதயசிங் உயிரை வாங்க விரைந்து வருகிறான்" என்று பயத்தினால் நடுநடுங்கிக் கதறினான். இதைச் செவியுற்ற பன்னா இடியோசை கேட்ட நாகம்போல் ஆனாள். சிறிது நேரம் கழித்து, பன்னா ஒரு கூடையில் குழந்தை உதயசிங்கை வைத்து அதன்மீது பழங்களையும் இலைகளையும் போட்டு வேலைக்காரனிடம் கொடுத்து வெளியே அனுப்பினாள். கோட்டைக் காவலாளிகள் பழக்கூடைதான் வெளியே போகிறது என்று எண்ணி, வேலைக்காரனை வெளியே அனுப்பினார்கள். இவ்வாறாக உதயசிங் காப் பாற்றப்பட்டான்.

வேலைக்காரன் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம், வனவீரன் பன்னாவிடம் வந்தான். வனவீரன் உள்ளே வருவதற்கு முன்னமேயே, பன்னா தன் குழந்தையை உதயசிங் படுத்திருந்த தொட்டிலிற் கிடத்தி வைத்திருந் தாள். பம்பீர் உள்ளே வந்தவுடன் பன்னாவை அச்சுறுத்தி உதயசிங்கைக் காட்டும்படி கூறினான். பன்னா வாயைத் திறக்கவேயில்லை. ஆனால், இமை கொட்டாது தொட்டிலில் உள்ள குழந்தையை நோக்கிய வண்ணமாயிருந்தாள். வனவீரன் தொட்டிலில் கிடக்கும் குழந்தை உதயசிங் என்று எண்ணினான். உடனே, கொஞ்சமும் இரக்கமில்லாமல் அக் குழந்தையைத் தன் வாளால் போழ்ந்தான். ராஜகுமாரனைக் காப்பாற்ற தன் குழந்தை இறந்ததற்காக, பன்னா இறையளவும் வருத்தப்படவில்லை. என்னே இத்தாதியின் வீரம்.

வேலைக்காரனுல் வெளியேற்றப்பட்ட உதயசிங், ஒருவரும் அறியாமல் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக வளர்ந்தான். படைக்கலங்களில் எல்லாம் சிறந்த பயிற்சி பெற்ருன். தனது வரலாற்றையெல்லாம் அறிந்தான். உடனே ஒரு பெரிய சேனையைத் திரட்டி மீவாரைப் படையெடுத்தான். வனவீரனைப் போரில் தோற்கடித்துக் கொன்று, அரசனுனன். தான் ஈன்ற பிள்ளையைத் தியாகம் செய்து தன்னைக் காப்பாற்றிய பன்னுவைத் தேடிப் பிடித்து, அவளைத் தன் அன்னையினும் அருமையாகப் பாராட்டி வந்தான். பன்னுவே வீரத்தாதி.

இந்தியா	கயவர்	நாகம்
பெரும்பிரிவு	அரியணை	கோட்டை
பல்வேறு	அமர்ந்திருக்க	காவலாளிகள்
இராஜபுத்திரர்	இறையாக்கி	கிடத்தி
வமிசம்	இறக்கும்போது	அச்சுறுத்தி
ஒற்றுமை	பச்சிளங்குழவி	இமைகொட்டாது
வாய்ந்தவர்கள்	தாதி	நோக்கியவண்ணம்
அஞ்சமாட்டார்கள்	எப்பாடு	இரக்கம்
சிக்கினுலும்	நம்பிக்கை	போழ்ந்தான்
தியாகம்	இரகசியம்	ராஜகுமாரன்
சித்தம்	சின்னுட்கள்	இறையளவு
ராணு	விபத்து	நாளொருமேனி
செங்கோல்	விளைந்து	பொழுதொருவண்ணம்
ஒச்சி	உருவிய	படைக்கலம்
சேனுதிபதி	விரைத்து	சேனை
நயவஞ்சகம்	குழறினுன்	ஈன்ற
கைப்பற்ற	செவியுற்ற	அன்னை
வானுலகு	இடியோசை	

கேள்விகள்

1. இராஜபுத்திரர்கள் யாவர்? அவர் குணங்களில் சிலவற்றைக் கூறுக?

2. மீவார் தேசத்தையாண்ட ராணுவின் பெயர் என்ன?

3. உதயசிங்கை வளர்த்தவள் யார்?

4. பம்பீரின் வருகையைக் கேட்டதும் பன்னு எவ்வாறு உதயசிங்கை வெளியேற்றினுள்?

5. உதயசிங் எவ்வாறு மீவார் ராணுவானுன்? பன்னுவிற்கு அவன் என்ன செய்தான்?

அப்பியாசம்

சைக்கிள் பந்தய விளைவு

ஒருவருக்கு பலமான காயம்

உயிருக்கு மோசமில்லை.

புதுக்கோட்டை நவம்–8.

இன்று மாலை 4-மணிக்கு வருஷா வருஷம் நடக்கும் சைக்கிள் பந்தயம் நடைபெற்றது. இதைக்காண ஜனங்கள் சுமார் ஆயிரம்பேர் வந்திருந்தனர். பந்தயத்தை ஒழுங்காக நடத்தும் பொருட்டு அநேக போலீஸ் சேவகர்கள் வந்து கவனித்தனர். இப்போட்டியில் பதின்மர் கலந்து கொண்டனர். குறித்த நேரத்தில் அவர்கள் கிளம்பினர். பந்தய ரவுண்டு $\frac{1}{2}$ மைல் சுற்றளவுள்ளது. அதை ஐந்து தடவை சுற்றி யார் முதலில் வருகிருர்களோ, அவர்களுக்கு ஒரு வெள்ளிக் கோப்பை பரிசாக வழங்கப்படும். மூன்று சுற்றுகள் வரையில் பதின்மரும் சைக்கிளில் போனுர்கள். அதன் பிறகு ஆறு பேர் தங்களால் முடியாது என்று கீழே இறங்கிவிட்டனர். நான்காவது சுற்று வருகையில் ஒருவர் முடியாமல் கீழே விழுந்துவிட்டார். ஓடிப்போய் அவரைப் பார்க்கையில் அவர் பிரக்ஞை யற்றுக் கிடந்தார். முழங்காலில் எலும்பு முறிந்துவிட்டது. டாக்டர் கிருஷ்ணராவ் பார்த்து வருகிருர். உயிருக்கு மோசமில்லை என்று

அவர் கூறுகிறார். கடைசியில் இவ்வூர் சாண்டோ நடேச பிள்ளை என்பவர் வெற்றி பெற்றார். இவ்வூர் திவான் வெள்ளிக் கோப்பையை அவருக்கு வழங்கினார்.

(ந—நி).

மேலே சொன்ன விஷயத்தை நகரதூதன் பத்திரிகையில் 1939-ம் ஆண்டு நவம்பர் 10-ம் தேதி பிரசுரித்திருந்தார்கள். இதைப் படித்த பிறகு கீழ்க்கண்ட கேள்விகளுக்கு விடை எழுதுக.

1. சைக்கில் பந்தயம் எந்த ஊரில் நடந்தது ?
2. பந்தயத்தில் எத்தனை பேர் கலந்துகொண்டனர் ?
3. பந்தயத்தின் நிபந்தனைகள் என்ன ?
4. பந்தயத்தில் ஒருவருக்கு நேர்ந்த விபத்து என்ன?
5. பந்தயத்தில் வெற்றி பெற்றவர் யாவர்?
6. அவருக்கு அளித்த பரிசு என்ன ?
7. அப் பரிசை வழங்கினவர் யாவர் ?

(ந-நி) என்ற குறிப்பிற்கு என்ன பொருள் ?

இரண்டு மல்லர்கட்கு குஸ்திப் பந்தயம் நடந்ததாக நினைத்துக் கொள். அதைப் பற்றிச் சில வரிகள் எழுதுக.

10. தாஜ்மஹால்

நமது பாரத தேசத்தை எண்ணிறந்த அரசர்கள் ஆண்டுவந்திருக்கிறார்கள். அவர்கள் யாவரும் தத்தம் வாழ்நாளில் தங்கள் ஞாபகார்த்தமாக அநேக அபூர்வ காரியங்களைச் செய்துள்ளார்கள். நமது புண்ணிய பூமியாகிய இந்தியாவை ஆண்டவர்களில் மொகலாயர்கள் என்ற வமிசத்தாரும் ஒருவர். அவ்வமிசத்தார் முதன் முதலில் இந்தியாவில் உள்ள தங்கள் பகைவர்களின் பொருள்களை முதலில் அழித்தாரேனும், அவர்கள் பிற்பாடு மிக அழகான மாளிகைகளைக் கட்டினார்கள்.

நிற்க, இந்நிலவுலகில் மாந்தர்க்கு இன்பம் ஊட்டுவதில் மிகவும் சிறந்தன என்று கருதப்படுவன ஏழு பொருள்

களேயாம். இவைகளை உலகத்தின் ஏழு அதிசயங்கள்என்று மக்கள் கூறுவர். இந்த ஏழு அதிசயங்களில் தாஜ்மஹால் என்பது ஒன்று. ஆகவே, உலகத்தில் உள்ள அதிசயங்கள் ஏழுள், நம் இந்தியாவும் ஒன்றை அடைந்துள்ளது. ஆகவே, தாஜ்மஹாலின் வரலாற்றை நோக்குவோம்.

தாஜ்மஹால் என்னும் எழில்மிக்க கட்டிடத்தைக் கட்டிய அரசர் ஷாஜஹான் என்பவர். இவர் தந்தை



பெயர் ஜஹாங்கீர். இந்த ஷாஜஹான், மொகலாய அரசரில் மிகவும் புகழ்பெற்ற அக்பர் சக்கரவர்த்தியின் பேரன். மொகலாயர்களால் நம்மிந்திய நாடு எவ்வளவோ நன்மைகளை அடைந்துள்ளது. மொகலாய மன்னர்கள் மிகவும் அழகான கட்டிடங்களால் நம்மிந்தியாவை அலங்கரித்துள்ளார்கள். எனினும் அவைகளில் சாலச் சிறந்து விளங்குவது ஷாஜஹான் கட்டிய தாஜ்மஹாலேயாகும்.

ஒரு சமயம் ஷாஜஹான், ஆக்ரா நகரில் கூடியுள்ள ஒரு சந்தைக்குச் சென்றார். அங்கு விசித்திரமான பொருள்கள் விற்பனைக்கு இருந்தன. அங்கு ஷாஜ ஹான் ஒரு பெண்ணைக் கண்டு அவளது அழகில் ஈடுபட்டார். அவளது சௌந்தரியத்தில் ஈடுபட்ட அவர், அப்பெண்ணை மணக்க விரும்பினார். அரசர் விரும்பினால், ஆகாத காரியமும் உண்டோ? உடனே ஷாஜஹான் மிகவும் அழகுள்ள அப்பெண்ணைக் கலியாணம் செய்து கொண்டார்; பிறகு அப்பெண்ணிற்கு மும்தாஜ்மஹால் என்று பெயரிட்டார். இப்பெயருக்கு "அரண்மனையில் சிறந்தவள்" என்று பொருள். ஷாஜஹான் இவளைத் தன் உயிரினும் சிறந்ததாக எண்ணி நேசித்து வந்தார்.

அநேக நாட்கள் ஷாஜஹான் மும்தாஜ்மஹாலோடு சுகமாகக் காலம் கழித்துவந்தார். ஆனால், திடீரென்று மும்தாஜ்மஹால் நோய் வாய்ப்பட்டாள். எவ்வளவோ பொருட்செலவு செய்தும் வியாதி குணமாகவில்லை. அச்சம யம் மும்தாஜ்மஹால் தன் கணவனை அருகில் அழைத்து இரண்டு வரங்கள் கேட்டாள். அவை, தான் இறந்த பிறகு சக்கரவர்த்தி வேறொரு மாதையும் மணம்செய்து கொள்ளக் கூடாது. தன்னைப் புதைத்த இடத்தின்மேல் ஒரு கோரி கட்டவேண்டும் என்பனவாம். ஷாஜஹானும் தன் ஆரு யிர்க் காதலி கேட்ட வரங்களைப் பூர்த்தி செய்வதாக வாக் களித்தார்.

சின்னாட்களில் மும்தாஜ்மஹால் இறந்தாள். ஷாஜ ஹான் அவளை ஆக்ரா நகரத்தில் யமுனை நதிக்கரையில் புதைத்து, அதன்மேல் உலகப் புகழ்பெற்ற தாஜ்மஹால் என்ற சிறந்த கட்டிடத்தைக் கட்டினார். பிறகு தான் கொடுத்த வாக்குறுதியின்படி ஷாஜஹான் வேறு மாது ஒருவரையும் மணக்கவில்லை.

தாஜ்மஹாலைப்போல் அழகுள்ள கட்டிடம் இவ்வுலகி லேயே இல்லை என்று அறிந்தோர் கூறுகின்றனர். இது

யமுனை நதிக்கரையில் பெரியதோர் சோலையின் நடுவே அமைக்கப்பட்டுள்ளது.

இக்கோரி முழுதும் தூய சலவைக் கற்களாலேயே கட்டப்பட்டுள்ளது. இதன் சுவர்களில் எல்லாம் பல நிற முள்ள இரத்தினங்கள் வைத்து இழைக்கப்பட்டிருக் கின்றன. தாஜ்மாஹாலின் முக்கிய கோரி 186 சதுர அடி விஸ்தீரணம் உள்ளது. ஒரு அழகிய சிகரம் இக்கட்டிடத் தின்மீது நின்று, காண்போர் மனதைக் கவர்கின்றது. $18\frac{1}{2}$ அடி உயரமுள்ள ஒரு மேடையின் நான்கு மூலைகளி லும் நான்கு உயர்ந்த ஸ்தூபிகள் உண்டு.

தாஜ்மஹாலில் காணப்படும் வாயில்கள் எல்லாம் வில் வளைவு வாயில்கள். இவ்வளைவுகளிலும், மேற்றளம், சுவர், பலகணி முதலிய இடங்களிலும் இயற்கை அன்னையின் எழிலை, விளக்கும் செடி, கொடி, மலர்கள் முதலிய பளிங்கி லேயே சித்திரிக்கப்பட்டிருக்கும்.

தாஜ்மஹாலின் மத்தியில் எட்டு மூலைச் சலவைக்கல் மண்டபமொன்று இருக்கிறது. இதில்தான் மும்தாஜ் மஹாலும், ஷாஜஹானும் அடக்கம் செய்யப்பட்டிருக்கின் றனர். இம்மண்டபத்தின் சுவர்களில்தான் இரத்தினங்கள் பதிக்கப்பட் டிருக்கின்றன. திருக்குரானில் உள்ள சிறந்த வாக்கியங்கள் சுவரில் பொறிக்கப்பட் டிருக்கின்றன.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த இந்த சிறந்த கட்டிடத் தைக் கட்டுவதற்கு முப்பது ஆண்டுகள் சென்றன. முப்பது லட்ச ரூபாய்கள் செலவாயின. எனவே, கட்டடம்எவ்வளவு நேர்த்தியாய் இருக்கும் என்பதை, நாம் மனத்தால் உணர லாம். மேலும் இது நமது தேசத்து நதிக்கரையில், எழில் மிக்க பூங்காவினிடையே இலங்குகின்ற இக்கட்டிடம் பார்ப்பதற்கு தேவலோகம்போல் தோன்றுகிறது. இக் கட்டிடம் முழுமையும் நமது தேசத்து சிற்பசாஸ்திரிகளின் கைவன்மையைத் தெள்ளிதன் விளக்குகின்றது.

எண்ணிறந்த	சந்தை	தெள்ளிதின்
தத்தம்	விசித்திரம்	சோலை
ஞாபகார்த்தம்	விற்பனை	சலவைக் கற்கள்
அபூர்வ	இடுபட்டு	இரத்தினம்
மொகலாயர்கள்	சௌந்தரியம்	இழைக்கப்பட்டு
மாளிகை	மணக்க	விஸ்தீரணம்
நில்வுலகு	கலியாணம்	சிகரம்
மாந்தர்	நேசித்து	கவர்கின்றது
ஊட்டுவதில்	அருகில்	ஸ்தூபிகள்
அதிசயம்	வரம்	வில்வளைவு
நோக்குவோம்	மாது	வாயில்கள்
பேரன்	கோரி	பலகணி
சாலச்சிறந்து	ஆருயிர்	இயற்கை
இத்துணை	காதலி	பளிங்கு
ஆண்டுகள்	பூர்த்தி	அடக்கம்
சிற்பசாஸ்திரி	வாக்குறுதி	மண்டபம்
நேர்த்தி	இலங்குகிறது	குருன்
சமைக்கப்பட்டது	தேவலோகம்	பொறிக்கப்பட்டு
பூங்கா	கைவன்மை	

கேள்விகள்

1. தாஜ்மஹாலைக் கட்டிய அரசர் யாவர்? அவர் எந்த வமிசத்தைச் சேர்ந்தவர்?

2. ஷாஜஹான் ஆக்ராச் சந்தையில் யாரைக் கண்டார்? பிறகு என்னவாயிற்று?

3. ஷாஜஹானுக்கு ஏற்பட்ட துக்ககரமான சம்பவங்கள் என்ன?

4. மும்தாஜ்மஹால் என்பவள் யார்? அவள் ஷாஜஹானிடம் கேட்ட இரு வரங்கள் என்ன?

5. தாஜ்மஹாலைப்பற்றி 20 வரிகள் எழுதுக.

அப்பியாசம்

கீழ்க்கண்ட ஒருமை எண்களுக்குப் பன்மை எண்கள் எழுதுக.

ஒருமை	பன்மை	ஒருமை	பன்மை
ஒருவர்	———	சாஸ்திரி	———
மனிதன்	———	பளிங்கு	———
கட்டடம்	———	விஷயம்	———
இவன்	———	சிறுமி	———
கல்	———	சேவகன்	———

கீழ்க்கண்ட பன்மை எண்களுக்கு, ஒருமை கூறுக.

பன்மை	ஒருமை	பன்மை	ஒருமை
கற்கள்	———	இவை	———
பற்கள்	———	அதிசயங்கள்	———
காரியங்கள்	———	மன்னர்கள்	———
அவர்கள்	———	பொருள்கள்	———
நீங்கள்	———	நாட்கள்	———
அவை	———		

மேற்பாடத்தில் உள்ள வினைச்சொற்களில் ஐந்தை எழுதுக.

மேற்பாடத்தில் உள்ள ஆண்பாற் பெயர்களில் இரண்டும், பெண்பாற் பெயர்களில் இரண்டும் கூறுக.

---

11. குயில் (பாட்டு)

1. பாடித்திரிந்துவந்த கருங்குயிலே—உன்
   பாட்டையறியவந்தேன்—கருங்குயிலே.
2. காதுகுளிரப்பாடுங் கருங்குயிலே—உன்னைக்
   காக்கை வளர்ப்பதுண்டோ—கருங்குயிலே.

3. மாமரச் சோலைதனில்—கருங்குயிலே வந்து
மறைந்து மிருப்பதேனோ—கருங்குயிலே.

4. இனிமையாய்ப் பாடுகிறாய் கருங்குயிலே—அதை
எவரிடங் கற்றுவந்தாய்—கருங்குயிலே.

5. வானகமோ மண்ணகமோ கருங்குயிலே—நீ
வாழுமிடமேது சொல்வாய்—கருங்குயிலே.

நா. கனகராஜையர், B. O. L.

அரும்பதவுரை:

காதுகுளிர = காதுக் கினிமையாக
வானகம் = தேவலோகம்
மண்ணகம் = பூலோகம்

கேள்விகள்

1. குயில் எவ்விதம் பாடுகிறது?
2. குயில் எங்கு மறைந்திருக்கிறது?
3. குயிலை அடைகாத்து வளர்ப்பது எது?

12. ஒற்றுமை

ஒற்றுமை என்ற பதத்திற்கு ஒன்றுபட்டிருத்தல் அல்லதுசேர்த்திருத்தல்என்பதுபொருள். ஒருவர் ஆற்றவியலாத ஒரு காரியத்தை பலர் ஒருங்குசேரின் அச்செயலைச் சீக்கிரத்தில் சுலபமாகச் செய்து விடலாம். உதாரணமாக, ஒரு சிறிய சுள்ளியை எளிதில் முறித்து விடலாம். ஆனால் பல சுள்ளிகள் சேர்த்த ஒரு கட்டை நம்மால் ஒடிக்க முடியாது. குச்சி ஒன்றாயிருக்கும் பொழுது அது வலிமையற்று இருக்கிறது. ஆனால், பல குச்சிகள் ஒன்று சேர்ந்தவுடன் அக்கட்டு, மிகுந்த ஆற்றலை அடைகிறது. அதைப்போலவே நாம் தனியாக இருந்தால் நம்மை எவரும் எளிதில் வென்று விடுவர். ஆனால், நம்மோடு பலர் ஒற்றுமையாய் இருந்தால் நம் பகைவர்கள்கூட நம்மை வெல்ல இயலாது. ஆகவே,

ஒற்றுமையே பலம். நம்மில் ஒற்றுமை குலேந்தால் நாம் நாசம் அடைவது திண்மை. ஒற்றுமையால் எய்தாத காரியம் இல்லை. இதை விளக்க, பஞ்சதந்திரம் என்னும் பழைய பனுவ நூலிலிருந்து ஒரு கதை கூறுவோம்.

பறவைகளைப் பிடிக்கும் வேடனொருவன் ஒரு நாள் தன் கண்ணியை விரித்து பல தானியமணிகளை அதன் மேல் இறைத்து விட்டு ஒரு புறம் மறைந்திருந்தான். அப்போது அருகில் உள்ள பெரிய ஆச்சா மரத்தின் மேல் ஒரு புருக்கூட்டம் வந்து தங்கியது. புருக்கள், கீழே இறைக்கப் பட்டிருந்த தானியங்களைத் தின்ன விழைந்தன? அதையறிந்த புருக்களின் அரசன் தன் பரிவாரங்களை நோக்கிப் "அன்பர்களே மனித சஞ்சாரம் அற்ற இந்த அடவியில் இதுபோன்ற தானியங்கள் எங்கிருந்து வரும். இதை நோக்கும் பொழுது நம்மை ஏமாற்றிப் பிடிப்பதற்காக ஒரு வேடன் இவ்வாறு வஞ்சகமாய் தந்திரம் ஏதோ செய்திருக்கிறான். ஆகையால் நாம் ஒரு காரியத்தை நன்றாய் ஆராய்ந்த பின்னரே செய்தல் வேண்டும். ஆராயாது செய்த காரியம் ஆபத்தை விளைவிக்கும்" என்று சொல்லிற்று.

ஆனால் புருக்களின் அரசனாகிய சித்திரக் கிரீவன் கழறிய புத்திமதிகளை மற்றப்புருக்கள் கேட்கவில்லை. அவைகள் உடனே கீழே இறங்கி தானியங்களைத் தின்ன ஆரம்பித்தன. அதனால்வேடன் விரித்த கண்ணியில் சிக்கி வெளியேற முடியாமல தத்தளித்தன. இதைக் கண்ணுற்ற சித்திரக்கிரீவன் மனம் மாழ்கிற்று. "அந்தோ, என்னினம் கண்ணியிற் கட்டுண்டு அல்லற்பட யான் மாத்திரம் தனித்து உயிர் வாழ்வது ஏன்" என்று சொல்லி வலையில் விழுந்து சிக்கியது.

இவற்றையெல்லாம் மறைவில் இருந்து பார்த்த வேடன் மனம் மிக மகிழ்ந்தான். மிகுந்த ஆவலோடு புருக்

களைப் பிடிக்க விரைந்துவந்தான். அதுபொழுது சித்திரக்கிரீவன் புருக்களை நோக்கி, “சிநேகிதர்களே, தம்முள் ஒற்றுமை இருந்தால் இந்த பிராணபத்திலிருந்து விடுபடலாம். நமக்குள் ஒற்றுமை அற்றதாயின் நாம் யாவரும் வேடன் கையிற் சிக்கி உயிரிழப்பது திண்ணம். ஆகையால் நான் ஒரு உபாயம் சொல்லுகிறேன். அதனைச் செவிசாய்த்துக் கேளுங்கள். நாம் எல்லோரும் ஒரு முகமாய் வேடன் விரித்த கண்ணியைத் தூக்கிச் செல்வோம். வாருங்கள்” என மொழிந்தது.

இந்த அறிவுரைகளைக் கேட்டவுடன் மற்றைய பறவைகளும் சரி என்று ஒப்புக்கொண்டது. உடனே எல்லாப் பறவைகளும் ஒன்றுசேர்ந்து வேடன் விரித்த வலையைத் தூக்கிக்கொண்டு ஆகாய மார்க்கமாகப் பறந்துபோயிற்று.

வேடன் இந்த அதிசயத்தைக் கண்டதும் அப்படியே பிரமித்துப் போனான். சிறிதுநேரம் அவன் புருக்களின் பின்னே ஓடினான். ஆனால் பயனில்லை. மனம் நொந்து தன் இல்லம் திரும்பினான். பிறகு சித்திரக்கிரீவன் தன் பரிவாரத்தோடு காட்டைக் கடந்து தன் நண்பனாகிய இரணியன் என்னும் எலியரசனிடம் சென்றது. தனது உயிரினுஞ் சிறந்த நண்பனின் இடுக்கண்ணைக் கண்டதும்

இரணியன் மிகுந்த வருத்தமடைந்து தனது கூரிய பற்களால் கண்ணியைக் கடித்து புருக்களை எல்லாம் விடுதலை செய்தது.

முதன் முதலில் புருக்கள் ஒன்று படாததினால் அவைகள் கண்ணியிற் சிக்கிக் கொண்டது. பிறகு அவைகள் ஒன்றுசேர்ந்ததால் வலையோடுகூடப் பறந்து சென்றன. இதனால் ஒற்றுமையின் இன்றியமையாமை இனிது புலனாகும்.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே--நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே"
"சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை"

ஒற்றுமை	தானியமணி	அல்லற்பட்டு
ஆற்றவியலாத	இறைத்து	ஆவல்
சேரின்	விழைந்தன	பிராணபத்து
சுலபம்	பரிவாரம்	செவிசாய்த்து
உதாரணம்	சஞ்சாரம்	அறிவுரை
முறித்து	ஏமாற்றி	மார்க்கம்
வலிமையற்று	தந்திரம்	பிரமித்து
ஆற்றல்	ஆய்ந்தபின்	நொந்து
வெல்ல	புத்திமதி	இல்லம்
சூழ்ந்தால்	கழறிய	இடுக்கண்
பழைய	சிக்கி	இன்றியமையாமை
பனுவல்	தத்தளித்தன	புலனாகும்
கண்ணி		

கேள்விகள்

1. ஒற்றுமையினால் விளையும் நன்மைகள் என்ன?

2. வேடன் செய்த காரியம் என்ன?

3. சித்திரக்கிரீவன் தன் பரிவாரத்திற்குக் கூறிய புத்திமதிகள் என்ன?

4. புருக்கள் ஒற்றுமையோடு செய்த காரியம் என்ன ?

5. புறுக்களைக் கண்ணியினின்றும் விடுதலைசெய்தவன் யார்?
6. இக்கதையினால் அறிந்துகொண்ட நீதி என்ன?

அப்பியாசம்

கோடிட்ட இடங்களில் ஏற்ற வார்த்தைகளை அமைக்க.

1. ஒற்றுமை என்ற பதத்திற்கு——— அல்லது ——— என்பது பொருள்.

2. பல சுள்ளிகள் சேர்ந்த ஒரு——— நம்மால் ———

3. பறவைகளைப் ——— ——— ஒருவன் ஒருநாள் ——— விரித்து பல தானியங்களை இறைத்து வைத்தான்.

4. நம்மில் ஒற்றுமை ——— ——— அடைவது திண்ணம்.

5. நாம் ஒரு ——— நன்றாக ——— பின்னரே அதைச் ——— வேண்டும்.

புறுக்கள் தானியங்களைத் தின்றன.

புறுக்கள் தானியத்தைத் தின்கின்றன.

புறுக்கள் தானியத்தைத் தின்னும்.

இந்த மூன்றிற்கும் வேறுபாடு என்ன?

தின்றன, தின்கின்றன, தின்னும் இம்மூன்றும் தொழிலை நடத்துவதால் இவைகளுக்கு வினைச்சொல் என்று பெயர். இதை நீங்கள் முன்னமேயே அறிவீர்கள்.

இனி

தின்றன = என்பது முன் நடந்த தொழிலைக் குறிக்கின்றன— இறந்தகாலம்.

தின்கின்றன = என்பது இப்பொழுது நடக்கின்ற தொழிலை உணர்த்துகிறது—நிகழ்காலம்.

தின்னும் = என்பது இனிமேல் நடக்கும் தொழிலைக் குறிக்கும் —எதிர்காலம்.

ஆகவே, வினைச்சொல் காலத்தைக் காட்டும். அக்காலம்மூன்று வகைப்படும். (1) இறந்தகாலம் (2) நிகழ்காலம் (3) எதிர்காலம்.

இரணியன் தன் கூரிய பற்களால் கண்ணியைக் கடித்தது. இதில் கடித்தது என்பது வினைச்சொல். அது முன் நடந்த தொழிலைக் காட்டுவதால் அது இறந்தகாலம். கடிக்கின்றது என்ருல் அது நிகழ்காலம் எனப்படும். கடிக்கும் என்பது இருந்தால் எதிர்காலம் எனப்படும்.

---

13. புகை வண்டித்தொடர்

முற்காலத்தில் மனிதர்கள் மாட்டு வண்டிகளிலும், குதிரை வண்டிகளிலும், ஒட்டகங்களின்மேலும் பிரயாணம் செய்து வந்தனர். சிலர் ஒரு ஊரிலிருந்து மற்ெருரு ஊருக்குச் செல்ல விரும்பின் குதிரையின்மீது இவர்ந்து செல்வார்கள். பெரிய பிரபுக்களும், வேந்தர்களும் இரதங்களில் அமர்ந்து சென்றனர். ஆனல், மேற் சொல்லியவையெல்லாம் தற்போதுள்ள மோட்டார் வண்டிகளேயும், புகை வண்டித் தொடர்களேயும்போல் அவ்வளவு துரிதமாகச் செல்லக் கூடியவையல்ல. பண்டைக் காலத்தில் பிரயாணம் செய்வதற்கு வெகு காலம் பிடிக்கும். தற்காலத்தில் அதே பிரயாணத்தை வெகு விரைவில் செய்து முடிக்கலாம். மேலும், முற்காலத்தில் பிரயாணம்செய்வோர்க்கு இடைஞ்சல்கள் பல இருந்தன. செல்லும் வழியில் அடர்ந்த காடுகளும், சதுப்பு நிலங்களும், வறண்ட பாலேவனங்களும் இருக்கும். இவற்றையெல்லாம் கடந்து செல்வது எளிதல்ல. மேலும், போகும் மார்க்கத்தில் கள்வர் பயமும், கொடிய விலங்குகளின் இம்சையும் அதிகம் உண்டு. ஆனல், இந்நவீன காலத்தில் இத்தகைய அல்லல்கள் யாதொன்றும் கிடையாது.

தற்காலத்து இருக்கின்ற ஊர்திகளில் மக்களுக்கு மிகவும் சௌகரியமானது புகைவண்டித் தொடரே. இதில் நூற்றுக்கணக்கான மனிதர்கள் ஒரே சமயத்தில் பிரயாணம் செய்யலாம். இவ்வண்டி புறப்படும்போது புகையை

வெளியே கக்குவதால் இது புகைவண்டி யென்று அழைக்கப்படுகிறது. மேலும், அநேக வண்டிகள் ஒன்றன்பின் ஒன்ருய்த் இணைக்கப்பட்டு ஒரு தொடராய் இருப்பதால் புகைவண்டித்தொடர் என்று ஜனங்கள் இதை அழைக்கின்றனர்.

இப்புகைவண்டித் தொடருக்கும், இதர வண்டிகளுக்கும் சில வித்தியாசங்கள் உண்டு. வண்டிகளும் மோட்டார்களும் செல்லும் சாதாரணப் பாதையில் புகை வண்டித் தொடர் செல்வதில்லை. இது பிரத்தியேகமாக இரும்பினுல் செய்யப்பட்ட தண்டவாளங்கள்மீதே செல்லும். இது இருப்புப் பாதைமீது செல்வதால் இதற்கு இருப்புப்பாதை வண்டி அல்லது ரயில் வண்டி என்று அழைக்கப்படும். இவ்



வண்டி நீராவியின் சக்தியினுல் இழுக்கப்படுகின்றது. இதர வண்டிகள் எண்ணெயின் உதவியாலும் வேறு சில வற்றினுலும் இழுக்கப்படுகின்றன.

நீராவியின் வல்லமையைக் கண்டுபிடித்தவர் ஜேம்ஸ் வாட் என்ற பெரியார். இவர் கிரீனிச்சு நகரத்தில் பிறந்தார். இவர் ஒருநாள் அடுப்பின்மீது வைக்கப்பட்டிருந்த பாத்திரத்தைக் கவனமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தார். பாத்திரத்தில் உள்ள தண்ணீர் நெருப்பின் உஷ்ணத்தினுல் தளதள வென்று கொதிக்க ஆரம்பித்தது. சிறிது நேரம் சென்றதும் அந் நீராவியானது பாத்திரத்தை மூடியுள்ள

தட்டைத் தட தட வென அசைத்தது. இதைக் கண்ட இவருக்கு நீராவியானது தட்டை அசைக்கும் வன்மையுள்ளது என்பதை அறிந்தார். பிறகு ஒரு கனமான மூடியொன்றால் பாத்திரத்தை மூடினார். நீராவி அதையும் அசைத்துக் கீழே தள்ளியது. ஆகையால், அதிகமான நீராவியை உபயோகித்தால் மிகப் பாரமான பொருளையும் அசைக்க முடியும் என்பதை ஜேம்ஸ் வாட் உணர்ந்தார். அதன் பின் அவர் பல சோதனைகள் செய்து நீராவி இயந்திரம் ஒன்றை அமைத்தார்.

இவருக்குப் பின்னால் ஜார்ஜ் ஸ்டீவன்சன் என்பவர் நீராவி இயந்திரங்களைத் தண்டவாளத்தின்மேல் ஓட்டும் விதத்தைக் கண்டுபிடித்தார். பிற்காலத்திய இருப்புப் பாதை வண்டிகளைக் கண்டுபிடித்த பெரியார் ஜார்ஜ் ஸ்டீவன்சன் என்றே நாம் உறுதியாய்க் கூறலாம். இவர் 1825-ம் ஆண்டு முதன் முதலில் இங்கிலாந்து தேசத்தில் 38 மைல் நீளமுள்ள இருப்புப்பாதை யொன்றை அமைத்தார். நீராவி இயந்திரத்துடன் 34 வண்டிகளைச் சேர்த்துத் தாமே ஓட்டிக் காட்டினார். அந்த இயந்திரம் மணிக்கு 12 மைல் வேகம் ஓடியது. இப்போது நீராவித்தொடர் வண்டிகள் மணிக்கு 80 மைல் வேகம் கூடச் செல்லுகிறது.

இந்தியாவில் முதன் முதல் பம்பாயில் இருப்புப் பாதை ஏற்பட்டது. பின் சென்னையிலும் இதர இடங்களிலும் இருப்புப் பாதைகள் அமைக்கப்பட்டன. இப்போது அநேகமாய் எல்லா இடங்களிலும் இருப்புப் பாதைகளைக் காணலாம். நீராவித் தொடர் வண்டிகள் நமக்கு அநேக வழிகளில் பயன்படுகின்றது. அதிக தூரமான இடங்களுக்கு வெகு சீக்கிரத்திற் செல்லலாம். பெரிய சாமான்களையும் இவ்வண்டிகள் ஏற்றிச் செல்லுகின்றன. நீராவித் தொடர் வண்டிகள் வந்த பிறகு பெரிய ஆறுகளில் எல்லாம் பாலங்கள் கட்டியிருக்கிறார்கள்.

புகைவண்டித் தொடர்	நவீனகாலம்	பாத்திரம்
ஒட்டகம்	ஊர்தி	பாரமான
இவர்ந்து	நூற்றுக்கணக்கான	சோதனைகள்
வேந்தர்	கக்குவதால்	இயந்திரம்
இரதங்கள்	ஒன்றன்பின்ஒன்று	இருப்புப்பாதை
தற்போது	இணைக்கப்பட்டு	உறுதி
துரிதமாக	வித்தியாசங்கள்	இதர
பண்டைக்காலம்	தண்டவாளம்	தூரமான
பிரயாணம்	நீராவி	சீக்கிரம்
சதுப்பு நிலம்	இயக்கப் படுகின்றன	சாமான்கள்
பாலை வனம்	வல்லமை	பாலங்கள்
இம்சை, தொடர்		

கேள்விகள்

1. முற்காலத்தில் ஜனங்கள் எவ்விதம் பிரயாணம் செய்து வந்தார்கள் ?

2. புகை வண்டித் தொடர் என்ற பெயருக்குக் காரணம் என்ன ?

3. புகை வண்டித் தொடருக்கும் இதர வண்டிகளுக்கு முள்ள வித்தியாசங்கள் என்ன ?

4. நீராவியின் சக்தியைக் கண்டுபிடித்தவர் யார் ? அவர் எவ்விதம் கண்டு பிடித்தார் ?

5 இந்தியாவில் முதன் முதலில் நீராவித் தொடர் வண்டி எங்கு ஏற்பட்டது?

6. புகை வண்டித் தொடரினால் நாம் அடைந்த நன்மை என்ன ?

அப்பியாசம்

பின்வரும் வார்த்தைகளைச் சேர்த்து எழுதுக.

புகைவண்டி + தொடர் =

ஊரில் + இருந்து =

தள தள + என்று =

கொதிக்க + ஆரம்பித்தது =

வன்மை	+ உள்ளது	=
அசைக்க	+ முடியும்	=
உறுதியாய்	+ கூற	=
இரும்	+ பாதை	=
ஏற்றி	+ செல்லுகின்றன	=
இருப்புப்பாதை	+ ஒன்றை	=

கீழே எழுதியுள்ள இறந்தகால வினைச்சொற்களின் நிகழ் காலம், எதிர்காலம் இவைகளை எழுதுக.

இறந்தகாலம்	நிகழ்காலம்	எதிர்காலம்
பிடித்தான்	பிடிக்கின்றான்	பிடிப்பான்
செய்தான்	————	————
புறப்பட்டான்	————	————
பார்த்தான்	————	————
எழுதினான்	————	————
படித்தேன்	————	————
பாடினாள்	————	————
பிறந்தது	————	————
நடந்தார்கள்	————	————
பறந்தன	————	————

14. சமயோசித புத்தி

யமுனை நதிக்கரையின் பக்கங்களில் எல்லாம் செழுமை யான மரங்கள் அடர்ந்திருக்கின்றன. அத்தருக்கள் இனிய பழங்களைத் தருவதால் அம்மரங்களில் எப்பொழுதும் குரங்குகள் கூட்டங் கூட்டமாய் வாசம் செய்துகொண் டிருக்கும். சுபுத்தி என்ற குரங்கொன்று ஒரு பெரிய நாவல் மரத்தில் வசித்து வந்தது.

யமுனை நதியில் ஒரு முதலை தன் மனைவியோடு வாழ்ந்து வந்தது. இம்முதலை அடிக்கடி கரைப்பக்கம் வரும். நாளடைவில் சுபுத்தி என்ற குரங்கும் இம்முதலையும் மிக

நெருங்கிய நண்பர்கள் ஆயினர். பிரதி தினமும் குரங்கு தனக்குக் கிடைக்கும் நாவற்பழங்களில் முதலைக்கும் கொஞ்சம் கொடுக்கும். முதலை அதனைக் களிப்போடு உண்ணும்.

இவ்வாறு இருக்கையில் நாவற்பழங்கள் அதிகமாகப் பழுத்தது. குரங்கும் முதலையும் வயிறார தின்றது. ஆயினும் நாவற்பழங்கள் இன்னும் அதிகமாக இருந்தன. ஆகவே முதலை தான் தின்ற மீதியை தன் மனைவியிடம் கொடுத்தது. நாவற்பழங்களை தின்ற பெண் முதலை ஆண் முதலையை நோக்கி "நாதா, தேவாமிருதம் போன்ற இனிமையான இப்பழங்கள் உமக்கு எங்கிருந்து கிடைத்தன" என்று ஆவலோடு வினவியது. அதற்கு ஆண் முதலை, "பெண்ணே எனது உயிரினும் இனிய நண்பன் ஒருவன் கரையில் உள்ள நாவல் மரத்தில் வசிக்கிறான். சுபுத்தி என்பது அவன் பெயர். அவன் இப் பழங்களை எனக்குக் கொடுத்தான்; நான் எஞ்சியதை உனக்குக் கொஞ்சம் கொணர்ந்தேன்" என்றது.

இதைக் கேட்ட பெண் முதலை "நாதா, இதுபோல் தேனினும் இனிய பழங்களை உமது நண்பன் தினம் தோறும் புசிக்கின்றார், என்கிறீரே, ஆதலால் அவரது ஈரல் மிகவும் ருசியாய் இருக்கும். அத்தன்மையான உமது நண்பன் ஈரலை நான் உண்ண விழைகின்றேன். நீர் எப்பாடு பட்டேனும் அதை எனக்குக் கொணர வேண்டும்" என்றது.

ஆண் முதலை மிகவும் வருந்திற்று. பெண் முதலைக்கு எவ்வளவோ புத்திமதிகள் இயம்பியது. ஆனால், அவையெல்லாம் 'விழலுக்கு இறைத்த நீர்போல்' வீணாயின. பெண் முதலை குரங்கின் ஈரல் கிடைக்காவிடின் உயிரை விட்டு விடுவேன் என்று ஒரே பிடிவாதமாய் இருந்தது. ஆண் முதலைக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. கடைசியாக தன் மனைவியின் வேண்டுகோளை நிறைவேற்றும்

பொருட்டு, தன் மனைவியிடம் குரங்கின் ஈரலைக் கொண்டு வருவதாக வாக்களித்தது.

பிறகு நேரே சுபுத்தியினிடம் வந்து மௌனமாக இருந்தது. தனது நண்பன் வாட்டமுற்றிருத்தலை கண்ட குரங்கு முதலையினிடம் சென்று "நண்பா நீ எப்பொழுதும் போல் மகிழ்ச்சியாய் இராமல் வாட்டமாயிருப்பதேன்? எனக்கு உன் வருத்தத்தைச் சொல். நான் என்னால் முடியுமானால் நிவர்த்தி செய்கிறேன்" என்றது.

ஆண் முதலை சுபுத்தியைப் பார்த்து, "நண்பா, நீ எனக்கு அளித்த பழங்களை என் மனைவியினிடம் கொடுத்தேன். அவள் மிகவும் மகிழ்ந்தாள். அவள் உன்னை அழைத்து உனக்கு விருந்திட வேண்டும் என்று ஆசைப் படுகிறாள். உன்னை விருந்திற்கு அழைத்து வரச் சொன்னாள்" என்றது.

"நண்பா, நான் மிகவும் மகிழ்கிறேன். உன் மனைவியைக் கண்டு நான் சிநேகம் செய்து கொள்ள விரும்பு

கிறேன். ஆனல் இதில் ஒரு இடைஞ்சல்தான் இருக்கிறது. என்னல் தண்ணீரில் வர முடியாதே. அதற்கென்ன செய்வது" என்று குரங்கு சொல்லிற்று.

"இது என்ன பெரிய இடைஞ்சல். நான் உன்னை பத்திரமாக என் முதுகின் மேல் ஏற்றிச் செல்லுகிறேன். இதைப் பற்றி நீ எள்ளளவும் கவலைப் படாதே" என்றது.

உடனே குரங்கு முதலையின் முதுகின்மேல் ஏறிக் கொண்டது. முதலையும் நீந்த ஆரம்பித்தது. நட்டாற்றில் வந்த பிறகு, முதலை, தன் நண்பன் இனிமேல் தப்ப வழியில்லை என்று அறிந்து "நண்பா என் மனைவி உன் ஈரலைத் தின்ன மிகவும் ஆசைப்படுகிருள். அதற்காகவே உன்னை நான் அழைத்து செல்கிறேன். உயிரைவிடச் சித்தமாயிரு" என்று சொல்லிற்று.

குரங்கிற்கு மனம் திடுக்கிட்டது. முதலையின் நயவஞ்சகமான வார்த்தைகளை நம்பினதற்காக மிகவும் வருந்தியது. ஆயினும் குரங்கு தைரியத்தை கைவிடவில்லை.

தனது நுண்ணறிவினல் முதலையை ஏமாற்ற நினைத்தது; உடனே குரங்கு முதலையைநோக்கி "நண்பா என்ன முட்டாள் தனமான காரியம் செய்தாய். நீ இப்பொழுது சொன்ன விஷயத்தை என்னிடம் முன்னமேயே சொல்லியிருக்கக் கூடாதா. என் ஈரலை நாவல்மரத்தின் மேல் அல்லவா காயப் போட்டிருக்கிறேன். இதை நீ அங்கேயே சொல்லி யிருந்தால் நான் என் ஈரலைக் கொண்டு வந்திருப்பேனே. உன் மனைவிக்கு உபயோகப்படாத ஈரல் எனக்கு எதற்கு வேண்டும். இப்பொழுது என் உடலில் ஈரல் இல்லாததால் நான் உன் மனைவியிடம் வந்தும் பயனில்லை" என்றது.

இதைக் கேட்ட முதலை வருந்தி "அன்பா இப்போது இதற்கு என்ன செய்யலாம்" என்று கேட்டது. உடனே

குரங்கு "செய்ய வேண்டியதென்ன. என்னை மறுபடியும் கரைக்கு கொண்டு விடு. நாவல் மரத்தின் மேல் இருக்கும் ஈரலை எடுத்து வருகிறேன். பிறகு நீ என்னை முதுகில் ஏற்றிக்கொண்டு உன் மனைவியிடம் செல்" என்று கூறியது.

புத்தியில்லாத முதலை "சரி. நீ சொல்வது உண்மை தான்" என்று சொல்லி சுமுகனை மறுபடியும் கரைக்குக் கொண்டுவிட்டது. சுமுகன் ஒரே தாவில் நாவல் மரத்தின் மேல் ஏறிக் கொண்டது. "அப்பா, இன்று எமன் வாயினின்று மீண்டோம்" என்று நினைத்து மகிழ்ந்தது.

நெடுநேரமாகியும் குரங்கு கீழே வரக்காணாத முதலை "நண்பா மரத்தில் என்ன செய்கிறாய்? நாழிகை ஆகிறது. என் மனைவி ஈரலுக்காக காத்திருப்பாள்" என்றது. குரங்கு "மூடா உன்னைப் போல ஒரு நம்பிக்கை துரோகியை யான் எங்கனும் கண்டதில்லை. எவனாவது தன் ஈரலை எடுத்து வெளியே வைத்த பின் உயிரோடு இருக்க முடியுமா? இந்த அற்ப விஷயம் உனது மூளைக்கு எட்டாமற் போயிற்றே, உன் போன்ற வஞ்சகர் சிநேகம் எனக்குத் தேவையில்லை" என்று சொல்லிப் போயிற்று.

ஆண் முதலை பெண் முதலையின் கோபத்திற்காக பயந்து அங்கேயே தன் உயிரை விட்டது. பெண் முதலையும் குரங்கின் ஈரல் கிடைக்காமல் அதே ஏக்கமாக இறந்து போயிற்று.

ஆகையால், ஆபத்தில் மனந்தளராமல் சமயோசித புத்தியை உபயோகித்தால் நாம் அந்த ஆபத்திலிருந்து தப்ப முடியும்.

சமயோசிதம்	ஈரல்	எள்ளளவும்
நதிக்கரை	ருசியால்	நீந்த
செழுமையான	இயம்பியது	நட்டாறு

கூட்டங் கூட்டமாய்	விழல்	தப்ப
வாசம்	பிடிவாதம்	சித்தம்
நாவல் மரம்	நிறைவேற்றும்பொருட்டு	தைரியம்
நாளடைவில்	வாக்களித்தது	நுண்ணறிவு
பிரதி தினம்	மௌனம்	ஏமாற்று
வயிறூர	வாட்டமுற்று	முட்டாள்தனம்
தேவாமிருதம்	நிவர்த்தி	எமன்
எஞ்சியதை	விருந்து	நம்பிக்கை துரோகி
புசிக்கின்றூர்	இடைஞ்சல்	எட்டாமல்
எப்பாடு	அழைத்து	ஏக்கம்

கேள்விகள்

1. குரங்கும் முதலையும் எங்கு வசித்தன ?
2. பெண் முதலை ஆண் முதலையினிடம் என்ன கேட்டது?
3. முதலை என்ன சொல்லிக் குரங்கை தன்மேல் ஏற்றிச் சென்றது ?
4. குரங்கு தன் சமயோசித புத்தியால் எவ்விதம் முதலையினிடமிருந்து உயிர் தப்பியது ?
5. இப்பாடத்திறைல் நீங்கள் அறிந்த நீதி என்ன ?

அப்பியாசம்

பின் வார்த்தைகளை உபயோகித்து வாக்கியங்கள் எழுதுக :

(1) செழுமையான	(8) விழலுக் கிரைத்த நீர்போல்
(2) கூட்டங்கூட்டமாய்	(9) பிடிவாதமாய்
(3) பிரதி தினமும்	(10) வாக்களித்தது
(4) தேவாமிருதம்	(11) வாட்ட முற்று
(5) உயிரினுமினிய	(12) நட்டாற்றில்
(6) எப்பாடு பட்டேனும்	(13) நம்பிக்கை துரோகி
(7) மனந்தளராமல்	

அப்பியாசம்

கோடிட்ட இடங்களில் அடியிற் கொடுத்துள்ள வினை முற்றுக்களிலிருந்து சரியான வினைமுற்றை அமைத்து எழுதுக.

கொடுத்தார்.	குளித்தாயா.
படித்தான்	வைத்திருக்கிறேன்
வாங்கினான்.	உதித்தது.
தின்றான்.	எழுதுகிறேன்
உறங்கினேன்.	சென்றது.

(1) சூரியன் கிழக்கில்————

(2) நான் இரவு முழுமையும்————

(3) ராமன் கடையில் புத்தகம்————

(4) மருத்துவர் நோயாளிக்கு மருந்து————

(5) முதலை தண்ணீரில் நீந்திச் ————

(6) நான் காகிதத்தில் பேனாவால்————

(7) அவன் பாடத்தைப்————

(8) ராமன் பழத்தைத் ————

15. தேனீ

பிள்ளைகளே! நீங்கள் வீடுகளில் ஈக்களைப் பார்த்திருக்கிறீர்கள். அவற்றால் மனிதருக்குத் தீமை விளைகின்றதேயொழிய, நன்மையேற்படுவதில்லை. இனி மற்றொரு வகை ஈ உண்டு. அது பூக்களில் உள்ள தேனைச் சேகரிக்கின்றது. தேன் மிகவும் இனிப்பாயிருக்கும். இது நமக்கு மிகவும் உபயோகமான பொருள். தேனைச்சேகரிக்கும் ஈயைத் 'தேனீ' என்றழைக்கிறார்கள்.

தேனீயின் நாக்கு கம்பிபோல் நீளமாயிருக்கும். தேனீ அதைப் பூக்களிற் செலுத்தி, அவற்றில் உள்ள இரசத்தை உறிஞ்சும். இந்த இரசமே பிறகு தேனாக மாறுகின்றது. தேனீக்கள் கூடுகட்டி அதில் தேனைச் சேமித்து

வைக்கின்றன. தேன்கூட்டில் மிகச் சிறிய அறைகள் அமைந்திருக்கும் அச்சிறிய அறைகளில் தேனீக்கள் முட்டைகள் இடும். முட்டைகளிலிருந்து மூன்று நாட்களில் புழுக்கள் வெளிப்படும். நான்கு நாட்கள் வரை அவற்றிற்கு மற்றத் தேனீக்கள் ஆகாரம் கொடுக்கும். இதற்குள் புழுக்கள் பூரண வளர்ச்சியடையும். அச்சமயத்தில் தேனீக்கள் அச்சிறிய அறைகளின் வாயிலை மெழுகினுல் அடைத்துவிடும். புழுக்கள் பன்னிரண்டு நாட்கள் கழித்து ஈயாகமாறி வெளியே வரும்.

தேனீக்களை வேலைக்கார ஈ, சோம்பேறி ஈ, இராணி ஈ என மூன்று பிரிவாகப் பாகுபாடு செய்யலாம். பூக்கள்



தோறும் சென்று தேனைச் சேகரித்தல், தேன் கூடு கட்டுதல், முட்டைகளிலிருந்து வெளிப்படும் புழுக்களை வளர்த்தல், சத்துருக்களுடன் சண்டையிடுதல் முதலியன வேலைக்கார ஈக்களின் காரியமாகும்.

சோம்பேறி ஈக்கள் வேலைக்கார ஈக்களை விடச் சற்றுக் கறுப்பாயும், உருவத்தில் பெரியனவாயும் இருக்கும். இவைகள் வேலை செய்யமாட்டா. ஆனுல் தேன்கூட்டின் வெளியே வந்து மொய்த்துக் கொண்டிருக்கும். இவற்றின் வேலை சந்ததி விருத்தி செய்தல். இவைகள் வேலை செய்யாமல் கூட்டில் உள்ள தேனைக்குடித்துக் கொண்டிருக்கும். வேலைக்கார ஈக்கள் சில சமயங்களில் சோம்பேறி ஈக்களை வெளியே துரத்திவிடும்.

இராணி ஈ மிகவும் முக்கியமானது. இது வேலைக்கார ஈயைவிட இரண்டு மூன்று மடங்கு பெரியதாயிருக்கும்.

ஒரு கூட்டில் ஒரு இராணி ஈயே இருக்கும். இது ஒரு நாளில் முந்நூறு அல்லது நானூறு முட்டைகள் இடும். இம்முட்டைகளிலிருந்து வேலைக்கார ஈக்கள் பிறக்கும். சில சமயங்களில் இராணி ஈயும் பிறக்கும். இராணி ஈ பன்னிரண்டு அல்லது பதின்மூன்று நாட்களில் ஈயாக வெளிப்பட்டுவிடும். இது மற்ற ஈக்களைவிட வேகமாய்ப் பறந்து



செல்லும். இது தேன் சேகரிக்காமல், கூட்டினுள்ளேயே இருக்கும். இதற்கு மற்ற ஈக்கள் ஆகாரம் கொடுக்கும். இது மூன்று நான்கு வருடம் வரை ஜீவித்திருக்கும். புதிய இராணி ஈ பிறந்ததும் பழைய இராணி ஈ, அந்தக்கூட்டை விட்டுப் பறந்து போய்விடும். இதனுடன் வேலைக்கார ஈக்களின் சில சேர்ந்துகொண்டுபுதிதாகக்கூடுகட்டும். இராணி ஈ வயது முதிர்ந்ததாயிருக்குமானல், புதிய இராணி ஈ அதனைக் கொன்றுவிடும்.

வேலைக்கார ஈக்கள் இராணி ஈயினிடம் மிகுந்த விசுவாசம் உடையன. இராணி ஈ இல்லாத கூட்டில் வேலைக்கார ஈக்கள் வசிக்கமாட்டா. இராணி ஈயை எதிரிகள் கொன்றுவிடாதபடி, வேலைக்கார ஈக்கள் மிகுந்த ஜாக்கிரதையாகப் பாதுகாக்கும். இராணியைத் தனியே விட்டு வேறிடம் செல்லமாட்டா.

தேனீக்கள் கட்டும் கூடு மிக்க விநோதமானது. கூடுகளில் பல அறைகள் இருக்கும். ஒவ்வொரு அறைக்கும் ஆறு பக்கங்கள் உண்டு. கூட்டின் அடிப்பாகத்தில் இராணி ஈ வசிக்கும் பக்கங்களில் முட்டையிடுவதற்காக அறைகள் அமைந்திருக்கும். மேற்பாகத்தில் உள்ள அறைகளில் தேன் சேமித்து வைக்கப்படும்.

தேனீக்கள் தேனை இவ்வறைகளில் கொண்டுபோய்ச் சேர்த்த பின் வாயிலில் நின்றுகொண்டு தங்கள் சிறகுகளால் விசிறிக்கொண்டேயிருக்கும். அதனால் தேனிலுள்ள ஈரம் உலர்ந்து, தேன் சரியான பக்குவம் அடையும். பின் அவ்வறைகளை மெழுகினால் அடைத்துவிடும்.

ஒரு தேன் கூட்டில் உள்ள ஈக்கள் மற்றக்கூடுகளில் உள்ள ஈக்களைக் கண்டால் அவற்றுடன் சண்டையிட்டு அவைகளைத் துரத்திவிடும். இறந்த ஈக்களையும் அசுத்தங்களையும் கூட்டிலிருந்து உடனுக்குடன் அப்புறப்படுத்தும். தேனீக்கள் சேர்ந்துவாழும் இயல்புடையன. தங்கள் இனத்தின்மீது அபிமானம் உடையன. எவ்விடத்துச் சென்றாலும் தங்கள் கூட்டையே தேடிச் செல்லும். தேனீக்களிடமிருந்து நாம் பல நீதிகளைக் கற்றுக்கொள்ளலாம்.

தேனீ	தீமை	விளைகின்றது	ஒழிய
சேகரிக்கின்றது	கம்பி	நீளம்	செலுத்தி
சேமித்து	அறைகள்	புழுக்கள்	பூரண
வளர்ச்சி	உறிஞ்சும்	வாயில்	மெழுகு

பாகுபாடு	சத்துரு	மொய்த்து	மடங்கு
ஜீவித்திருக்கும்	விசுவாசம்	ஜாக்கிரதை	சிறகு
விசிறிக்கொண்டு	உலர்ந்து	அப்புறப்படுத்தும்	இயல்பு
இனம்	அபிமானம்	பக்குவம்	அசுத்தம்

கேள்விகள்

(1) தேனின் சுவை என்ன? தேனீ என்றதன் பெயர்க் காரணம் என்ன?

(2) தேனீக்கள் எவ்வாறு தேனைச் சேகரிக்கின்றன?

(3) தேனீக்களில் எத்தனை பிரிவுகள் உண்டு?

(4) வேலைக்கார ஈக்களுக்கும் இராணி ஈக்களுக்குமுள்ள தொடர்பை எழுதுக.

(5) தேனீயின் கூடு எப்படி இருக்கும்?

(6) தேனீக்களின் இயல்புகளைக் கூறுக.

அப்பியாசம்

எச்ச வினைகள்

(1) தேனீ அதைப் பூக்களிற் செலுத்தி அவற்றில் உள்ள ரசத்தை உறிஞ்சும்.

(2) தேனீக்கள் கூடு கட்டி அதில் தேனைச் சேமித்து வைக்கின்றன.

(3) தேனில் உள்ள ஈரம் உலர்ந்து தேன் சரியான பக்குவம் அடையும்.

செலுத்தி
உறிஞ்சும்
கட்டி
சேமித்து
வைக்கின்றன
உலர்ந்தது
அடையும்

} இவைகள் எல்லாம் வினைச்சொற்கள்.

இவைகளில் உறிஞ்சும், வைக்கின்றன, அடையும் முதலிய வினைச்சொற்களின் பொருள் முடிந்திருக்கின்றன. ஆகவே இவை அர்த்தம் முடிந்த வினைமுற்றுக்கள்

செலுத்து
கட்டி
சேமித்து
உலர்ந்தது

இந்த வினைச் சொற்களின் அர்த்தம் முடியவில்லை. ஆதலால் இவைகள் பொருள் முடியாத வினைகள் எச்சவினைகள் அல்லது வினையெச்சங்கள்.

கீழ்க்கண்ட வாக்கியங்களிலிருந்து வினைமுற்றுக்களையும் எச்சவினைகளையும் தனித்தனி பிரித்து எழுதுக.

1. கனவான் இளைப்பாறுவதற்காக மரத்தடியில் தங்கினார்.
2. நாய் கனவான் சென்ற வழியே ஓடி, குதிரையின் முன்னால் சென்று பல தடவை குரைத்தது வழியை மறித்தது.
3. நாய் தனக்குச்செய்த உபகாரத்தையே நினைத்து, தன் வாலை ஆட்டி, தன் நன்றியை வெளிப்படுத்தும்.
4. ஆற்று நீர் குளிக்க, குடிக்க, பயிர்களுக்கும் பாய்ச்ச உபயோகப்படுகிறது.
5. கற்களை யெடுத்து வீசினான்.
6. கூட்டைவிட்டுப் பறந்து போய்விடும்.

16. புறவும் எறும்பும்—பாட்டு

'முத்திநெறியறியாத' என்ற மெட்டு

ஓடைதனில் நீரருந்தி ஓடிவந்த எறும்பொன்று
தடுமாறி விழுந்ததினல் சாவுவரும் வேளைதனில்
கடைக்கண்ணல் பார்த்திருந்த காணப்புறு அக்கணமே
தடையின்றிக் கிளையொடித்துத் தலமதனிற் போட்டதுவே.

எறும்புமிக ஆனந்தம் எய்தியதாய்க் கரைசேர்ந்து
தருணத்தில் உதவிசெய்த புறுவதனை மறக்கவில்லை
வரும்விதிதான் எவருக்கும் வருமெனவே ஒருவேடன்
அருஞ்செய்கை செயலுற்ற புறுவதனை எய்தலுற்றான். 2

நன்மைசெய்த புறுதனக்குத் தீமைவரக் கண்டவுடன்
உண்மையில்தன் நன்றியதை உவப்புடனே காட்டவென்று
முன்பின்னய்க் கால்களையே முடக்கிக்குறி பார்க்கையிலே
மேன்மையுள்ள எறும்பதுதான் வேடன்குதி காலிடத்தே.

சுறீரென்று கடித்திடவும் திடுக்கிட்டான் வேடனங்கே
குறிகொண்ட அம்பதையும் குறிதவற விட்டுவிட்டான்
துரிதமுடன் செல்லுமம்பின் தொனிகேட்டுப் புறுவோட
சுறீரென்று கடித்தஇடம் கைகொண்டு தடவலானன். 4

இந்தவிதம் சின்னஞ்சிறு எறும்புநன்றி காட்டிற்று
இந்தவகை செய்நன்றி எப்பொழுதும் மறவாமல்
சிந்தையினில் பதித்ததற்குச் செம்மையுறப் பதில்நன்றி
இந்தமகா உலகதனில் இயற்றுவது மாண்புடைத்தே. 5

அரும்பதவுரை

ஓடை = மிகச்சிறிய ஆறு	உவப்பு = மகிழ்ச்சி
அருந்தி = குடித்து	முடக்கி = மடக்கி
காணப்புறு = காட்டுப்புறு	துரிதமுடன் = வேகமாக
தலம் = இடம்	தொனி = சத்தம்
எய்தி = அடைந்து	சிந்தை = மனதில்
தருணத்தில் = சமயத்தில்	மான்பு = மாட்சி

கேள்விகள்

1. எறும்பிற்கு நேர்ந்த ஆபத்து என்ன ?
2. எறும்பு எவ்வாறு ஆபத்திலிருந்து தப்பியது ?
3. எறும்பு தனக்கு உதவிசெய்த புறுவிற்கு எவ்வாறு பதில் உதவி செய்தது ?
4. இக்கதையினுல் நீ அறிந்த நீதி என்ன ?

இக்கதையைச் சுருக்கி 10 வரிகளில் எழுதுக.

---

17. இரட்டையர்

'இரட்டையர்' என்ருல் ஒரு தாய்க்கு ஒரே சமயத்தில் பிறந்த இருகுழந்தைகள் என்பது பொருள். இதை உலக வழக்கில் 'இரட்டை' என்று சொல்வார்கள். சில ஆண்டுகளுக்கு முன்னே நமது தமிழ் நாட்டில் இரண்டு புலவர்கள் இருந்தார்கள். தமிழ்நாடு செய்த தீவினையாலோ அல்லது இவர்கள் செய்த தீவினையாலோ இருவரும் அங்கவீனர்களாய் இருந்தார்கள். ஒருவர் பிறவிக்குருடராய் இருந்தார். மற்ருெருவர் இரண்டு கால்களும் முடமாகி நடக்க இயலாதவராய் இருந்தார்.

ஆயினும் இந்த இருபுலவர்களும் ஒரே தாய் வயிற்றில் பிறந்தவர்கள் அல்லர். இவர்களது இளமைப்பருவத்தே ஒருவர் மற்றொருவரைப் பார்த்திலர். ஆயினும் பிற் காலத்தில் இவர்கள் இருவரும் சேர்ந்தே வசித்து வந்தமை யால் மக்கள் இவர்களை **இரட்டையர்** என அழைக்கலாயினர். இவ்விரு புலவர்களும் காஞ்சிபுரத்துக்கு அருகில் உள்ள கிராமங்களில் பிறந்தனர். இவர்களுக்குக் கடவுளின் அருளால் மிக்க இளமைப்பருவத்திலேயே செய்யுள் இயற்றும் ஆற்றல் அமைந்திருந்தது.

ஆயினும் இவ்விரு புலவர்களும் வறுமை நோயால் மிகவும் வாடினார்கள். ஆகவே தங்களை நலியும் வறுமை யைக் களைய எண்ணி இவ்விரு புலவர்களும் பெரிய பிரபுக்க ளிடம் சென்று தங்கள் கவித்திறனைக் காட்டிப் பொருள் பெற்று வாழ்க்கையை நடத்திவந்தனர். நடக்கமுடியாத வர், அந்தகராகிய நண்பர் முதுகின்மேல் ஏறிக்கொள்வார். காலில்லாதவர் வழிகாட்ட அந்தப் புலவர் அவரைத் தூக் கிச் செல்வார். இவ்விரு புலவருக்கும் **இளஞ் சூரியர்** என்றும் **முது சூரியர்** என்றும் பெயர்.

இவ்விரு புலவர் சிரோன்மணிகளும் ஒருவர் மற்றொரு வரைச் சுமக்க ஒருவர் வழிகாட்ட, தமிழ்நாடெங்கும் சுற்றி னர். இவர்களின் புகழ் எங்கும் வீசியது; நொண்டிப் புலவர் தமது மனதில் தோன்றும் கருத்துக்களை அமைத்து ஒரு செய்யுளின் முன்னிரண்டடிகளாகப் பாடுவார். அந்த கக் கவிஞர் இவர் கருத்தை விளக்கி பின் இரண்டு அடிக ளாகப்பாடி முடிப்பார். ஆதலால் இவர் பாக்களை நாம் உற்று நோக்கின் அவை இருவர் பாடியனவாகத் தோன்றும்.

இவர்கள் ஒருசமயம் ஒரு தடாகத்தில் இறங்கி குளித் தார்கள். குருடர் துணியைக் கசக்கினர். நொண்டிப் புலவர் கரையில் உட்கார்ந்திருந்தார். அப்பொழுது

குருடர் கசக்கின துணி நீரில் அமிழ்ந்துவிட்டது. உடனே அவர் பின்வருமாறு பாடினர்,

அப்பிலே தோய்திட் டடுத்தடுத்து நாமதனைத்
தப்பினல் நம்மையது தப்பாதா—அப்படியே
ஆனாலுங் கந்தை அதிலுமோ ராயிரங்கண்
போனாற்போ கின்றது போ.

என்ற பாட்டைப்பாடினர்கள். இப்பாட்டில் முன்னிரண்டடிகள் ஒருவரும், பின்னிரண்டடிகள் மற்றொருவரும் பாடியது,

இதன் பொருள்:

"நீரில் நனைத்து துணியை விடாது நாம் அதை தப்பினல் (துவைத்தால்) நம்மை விட்டு அது ஒரு நாளைக்குத் தப்பி விடாதா" என்றார் ஒருவர். "அப்படியே துணி போனால் போகட்டும். அதிலோ ஆயிரம் துவாரங்கள் (கிழிசல்கள்) இருக்கின்றன. போனால் போகட்டும் அதைப் பற்றிக் கவலை இல்லை என்றனர்.

ஒரு சமயம் இவர்கள் மிக்க பசியோடு ஏதேனும் பிரசாதம் கிடைக்கும் என்ற எண்ணங்கொண்டு ஒரு கோவிலை யடைந்தனர். அக்கோவிலில் கொட்டும் முழக்கும் அதிகமாயிருந்ததேயன்றி, பிரசாதம் ஒன்றும் கிடைக்கவில்லை. பசியினல் மிகவருந்திய புலவர்களில் ஒருவர் மனங்கசித்து

தேங்கு புகழ் நாங்கூர்ச் சிவனேயல் லாளியப்பா
நாங்கள் பசித்திருக்கை ஞாயமோ என்றார் ஒருவர்.

இதைக்கேட்ட மற்றொரு புலவர், — போங்காணும் கூறுபங்கு தேரன்முரசு கொட்டோசை யல்லால் சோறு கண்ட மூளியார் சொல்லு என்றார்.

இதன் பொருள்

"நாங்கூரிலேயுள்ள சிவபிரானே, நீர் சாப்பிடும் போது நாங்கள் பசியாய் இருப்பது நியாயமோ என்று

ஒருவர் கேட்டார். இதைச் செவியுற்ற மற்றொரு புலவர் "அடே போங்காணும். சுவாமிக்குச் சாப்பாடு ஏது, எல்லாம் குருக்கள் வீட்டிற்குப் போய்விட்டது. கோயிலில் சங்கும், முரசும் முழங்குதேயன்றி இங்கு சோறு கிடையாது'' என்றார்.

இவ்விதமாக இவ்விரு புலவர்களும் எத்தனையோ. சிறந்த பாடல்களைப் பாடினார்கள். அப்பாடல்களை நீங்கள் மேல்வகுப்பில் விபரமாகப் படிப்பீர்கள்.

இரட்டையர்	**அந்தகர்**
உலகவழக்கு	**சிரோன்மணி**
அங்கவீனர்	**தடாகம்**
இளமைப்பருவம்	**அப்பு**
செய்யுள்	**தப்பினால்**
யற்று	**பிரசாதம்**
ஆற்றல்	**முழக்கு**
களைய	**கசித்து**
கவித்திறன்	**முரசு**

அப்பியாசம்

கீழ்க்கண்ட வினையெச்சங்களை சரியான இடங்களில் அமைத்து எழுதுக.

இரங்கி	எழுதி
வருந்தி	நினைந்து
மகிழ்ந்து	ஓடி
படித்து	தொடர்ந்து
திரும்பி	தூக்க

1. நாய் பணப்பையைத்————முயன்றது
2. கனவான் குதிரையினின்றும்————வந்தார்.
3. அவன் என்னைத்————ப்பார்த்தான்.
4. ராமன் தன் பாடங்களைப்———பரீட்சையில் தேறினான்

5. நான் என் தாயாருக்கு கடிதம்————க்கொடுத்தேன்.
6. கனவான் தான் செய்தகாரியத்திற்கு மனம்———— தார்.
7. குரங்கு————ப்போய் மரத்தின்மேல் ஏறிக்கொண்டது.
8. தாய் தன் இறந்த மகனை————ப்புலம்பினள்.
9. என் தந்தை மனம்——எனக்கு ரூபாய் கொடுத்தார்.
10. நாய் தன் எஜமானனைத்————சென்றது.

வந்த மனிதன்	இவைகளில் உள்ள வந்த, ஓடின பறக்கும்
ஓடின குரங்கு	இவைகளை எல்லாம் மனிதன் குரங்கு,
பறக்கும் பிராணி	பிராணி என்ற பெயர்ச் சொல்லைக்
	கொண்டு முடிவதால் இதற்குப் பெயர
	ரெச்சம் என்றுபெயர்.

---

18. வஞ்சகன் வஞ்சிக்கப்படுவான்

(நாடகம்)

காட்சி 1

இடம்: முனியன் வீடு] [நேரம்: காலை 9 மணி.

பாத்திரங்கள்: முனியன், வக்கீல் இரத்தின முதலியார்.

முனியன் (தனக்குள்ளே) நான் எத்தனையோ மனிதர்களிடம் கடன் வாங்கி இருக்கிறேன். ஆனால் ஒரு பைசாக் கூடத் திருப்பிக் கொடுத்தது கிடையாது. இந்தச் சரவணச் செட்டியாரிடத்தில் கடன் வாங்கி இன்னும் ஆறு மாதம் கூட ஆகவில்லை. அதற்குள் ஆயிரம் ரூபாய்க்கும் என் மீது பிராது போட்டுவிட்டானே? என்னை இலேசில் விட மாட்டான்போலிருக்கிறதே. இக்கஷ்டத்திற்கு என்ன செய்வது? இருக்கட்டும் செட்டியார் ஜம்பம் முனியனிடமா பலிக்கும். எதற்கும் எனது நண்பர் இரத்தினமுதலியாரை யோசனை கேட்போம். நல்ல வேளையாக அவரே என் வீட்டிற்கு வருகிறார்!

(வக்கீல் இரத்தினவேலு முதலியார் வருகிறார்.)

வாருங்கோ முதலியார்வாள். இப்பொழுதுதான் தங்கள் வீட்டிற்கு வரலாமென்றிருந்தேன். அதற்குள் தாங்களே வந்து விட்டீர்கள். என் மனம் தற்போது சஞ்சலப்படுகிறது. சீக்கிரத்தில் ஆயிரம் ரூபாய் கையைவிட்டுப் போகும்போ விருக்கிறது. என்ன செய்வது என்று புரியவில்லை. தாங்கள்தான் யோசனை சொல்ல வேண்டும்.

இரத்தின முதலியார்:—"என்ன விஷயம், சீக்கிரம் சொல். என்னால் இயன்ற வரையில் உதவி செய்கிறேன்."

முனியன்: "சரவணச்செட்டியாரிடம் ஆயிரம் ரூபாய் கடன் வாங்கியிருந்தேன். அதற்காக அவர் என்மீது நியாய ஸ்தலத்தில் வழக்குத் தொடர்ந்திருக்கிறார்."

இரத்தின முதலியார்: "கடன் வாங்கினால் கொடுக்க வேண்டியது நியாயம் தானே. அதற்கு வருந்துவதில் என்ன பயன். வேறு வழியில்லை. பணத்தைக் கொடுத்து விட வேண்டியதுதான்."

முனியன்: ஐயா, தாங்கள் இவ்வாறு சொல்லக் கூடாது. எல்லோரும் தங்களை மிகுந்த கெட்டிக்காரர்கள் என்று சொல்லுகிறார்கள். தாங்களே இவ்வாறு சொன்னால் நான் எங்கு போவது. நீங்கள் இதற்கு ஒரு உபாயம் சொல்ல வேண்டும்."

இரத்தின முதலியார். (சிறிது நேரம் ஆலோசித்து) முனியா, எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. நீ அதன்படி நடந்தால் நீ நிச்சயமாய் ஆயிரம் ரூபாயையும் இழக்கமாட்டாய். ஆனால் நீ எனக்கு நூறு ரூபாய் கொடுக்க வேண்டும், அதற்குச் சம்மதமா ?"

முனியன்: "சாமி, எனக்கு வெற்றி கிடைக்குமானால் நூறு ரூபாய்க்குமேல் தருகிறேன். ஆனால் வழக்கு ஜயமான பிறகுதான் கொடுப்பேன்."

இரத்தின முதலியார்: சரி, நான் கூறுவதைக் கவனமாய்க் கேள். நியாய ஸ்தலத்தில் யார் என்ன கேட்டாலும், பைத்தியக்காரன்போல் பாவனை செய்து "பாபா" என்று கத்தவேண்டும். வேறு ஒரு வார்த்தையும் அங்கு நீ சொல்லக்கூடாது."

முனியன்: "அதனல் என்ன பலன் உண்டாகும்?"

இரத்தின முதலியார்: "நியாயாதிபதி உன்னைப் பைத்தியக்காரன் என்று நினைத்து உன்மீது தொடரப்பட்டிருக்கும் வழக்கைத் தள்ளிவிடுவார்."

முனியன்: "ஐயா, அதுவே யான் வேண்டுவது. தங்கட்கு அநேக வந்தனம். போய் வருகிறேன்."

இரத்தின முதலியார்: முனியா, போய்வா. ரூபாய் நினைவிருக்கட்டும்."

காட்சி 2

இடம்: நியாயஸ்தலம்.] [நேரம்: காலை 11 மணி.

பாத்திரங்கள்: நியாயாதிபதி, வக்கீல்கள், முனியன், சரவணச் செட்டியார் முதலியோர்.

நியாயாதிபதி: "குமாஸ்தா, இன்று விசாரணைக்கு வேண்டிய வழக்கு யாது?"

குமாஸ்தா: "எஜமானே, இன்று இருபதாம் நம்பர் வழக்கு விசாரிக்கப்பட வேண்டும்."

நியாயாதிபதி: "உபயவாதிகள் யார்?"

குமாஸ்தா: வாதி-சரவணச்செட்டியார், பிரதிவாதி-முனியன்.

நியாயாதிபதி: "உபயவாதிகள் ஆஜர் தானு?"

குமாஸ்தா: "ஆம். எஜமான் அவர்கள் வெளியே நிற்கின்றனர்."

நியாயாதிபதி: "உபயவாதிகளைக் கூப்பிடச் சொல்."

குமாஸ்தா: "அடே, சேவகா! வாதி சரணவச் செட்டியாரை யும், பிரதிவாதி முனியனையும் கூப்பிடு."

சேவகன்: "வாதி சரணவச் செட்டியார்! சரவணச் செட்டி யார்!! சரவணச் செட்டியார்!!! பிரதிவாதி முனியன்! முனியன்!! முனியன்!!! (இருவரும் வருகிறார்கள்.)

நியாயாதிபதி: சரவணச் செட்டியாரைப் பார்த்து "உம் முடைய பெயர் என்ன?

சரவணச் செட்டியார்: "என் பெயர் சரவணச் செட்டியார்."

நியாயாதிபதி: உமது வக்கீல் யார்?

வக்கீல் அனந்தராமய்யர்: எஜமான், நான் தான் சரவணச் செட்டியாரிடம் வகாலத்து வாங்கியிருக்கிறேன்.

நியாயாதிபதி: உம்முடைய கக்ஷிக்காரரின் வழக்கைச் சொல்லும்.

வக்கீல் அனந்தராமையர்: என்னுடைய கக்ஷிக்காரர் சரவணச் செட்டியார். அவருடைய தொழில் லேவாதேவி செய்தல். பிரதிவாதி முனியன் இவரிடமிருந்து ஆறு மாதத்திற்கு முன் ஆயிரம் ரூபாய் கடனாக வாங்கி, இன்றுவரை வட்டிகூடக் கொடுக்கவில்லை. கடன் வாங்கினதையே இல்லையென மறுக்கிறான். ஆதலால் சமூகத்தில் கிருபை வைத்து முதலும் வட்டியும் சேர்த் துக் கொடுக்குமாறு உத்தரவாகப் பிரார்த்திக் கிறேன்."

நியாயாதிபதி: (முனியனைப் பார்த்து) உன்னுடைய பெய ரென்ன?

முனியன்: பா! பா!

நியாயாதிபதி: சரவணச் செட்டியாரை உனக்குத் தெரியுமா?

முனியன் :—"பா, பா."

நியாயாதிபதி :—என்ன இது, கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் நீ பா, பா என்று சொல்லுகிருய். சரவணச் செட்டியாரிடம் நீ கடன் வாங்கியதுண்டா ?

முனியன் :—“ பா, பா ” !

நியாயாதிபதி :—(கோபத்துடன்) உனக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதா !

முனியன் :—பா ! பா !

நியாயாதிபதி:—உண்மையாக இவன் பைத்தியக்காரன்தானு?

வக்கீல் இரத்தின முதலியார் :—(எழுந்து நின்று) எஜமான் இவன் பைத்தியக்காரன் போல்தான் தோன்றுகிருன். கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் பா பா என்றே சொல்லுகிருனே. சுய அறிவுள்ளவன் நியாயஸ்தலத்தில் இவ்வாறு கூறுவானு ?

நியாயாதிபதி :—ஆமாம். நானும் அவ்வாறே நினைக்கிறேன்.

(பின் தீர்ப்புக் கூறுகிருர்.)

வாதி சரவணச் செட்டியார் பணம் லேவாதேவி செய்வதில் சமர்த்தர். பிரதிவாதி முனியன் பைத்தியக்காரன். சரவணச் செட்டியார் உன்மத்தனை முனியனுக்கு கடன் கொடுப்பார் என்பது நம்பத்தகாத விஷயம். அவர் கடன் கொடுத்திருந்தாலும், பைத்தியக்காரனுக்குக் கடன் கொடுத்தது அவருடைய குற்றமே. ஆதலால் நான் இவ் வழக்கைத் தள்ளிவிடுகிறேன்.

(நியாயஸ்தலத்தில் உள்ளோர் யாவரும் வெளியே செல்லுகின்றனர்.)

காட்சி 3.

(வக்கீல் இரத்தின முதலியார் முனியனைத் தேடிச் செல்லுகிருர்.)

இரத்தின முதலியார் :—முனியா, நீ வழக்கில் வெற்றிப் பெற்ருய். எனக்குச் சேர வேண்டிய நூறு ரூபாயையும் கொடுத்து விடு.

முனியன் :—பா ! பா !

இரத்தின முதலியார் :—முனியா, இது நியாயமல்ல தாராளமாகப் பேசலாம்.

முனியன் : பா, பா !

இரத்தின முதலியார் : (கோபத்துடன்) என்னிடமா உன் வித்தையைக் காண்பிக்கிறாய்.

(ரூபாய் கொடுப்பாயா ? கொடுக்க மாட்டாயா ?)

முனியன் : பா, பா !

இரத்தின முதலியார் : "உன் மீது நடவடிக்கை எடுத்து உன்னிடமிருந்து பணத்தை வசூல் செய்கிறேன், பார்."

முனியன் : பா, பா !

இரத்தின முதலியார் : (தனக்குள்ளே) "நான் சொல்லிக் கொடுத்த உபாயத்தை என்னிடமே காட்டுகிறான் என்ன செய்வது. அவனிடமிருந்து பணம் வசூலிக்க வழியொன்று மில்லையே."

(வருத்தத்துடன் வீடு செல்லுகிறார்)

வஞ்சகன்	வக்கீல்கள்	லேவாதேவி
காட்சி	குமாஸ்தா	சமூகம்
பாத்திரங்கள்	விசாரணை	வட்டி
பிராது	உன்மத்தன்	பிரார்த்திக்கிறேன்
இலேசில்	சமர்த்தர்	வெற்றி
நியாயஸ்தலம்	உபய வாதிகள்	தாராளம்
வழக்குத் தொடர்கள்	வாதி	நடவடிக்கை
சம்மதம்	பிரதிவாதி	வசூலிக்கிறேன்
பாலனை	கக்ஷிக்காரர்	உபாயம்

கேள்விகள்

(1) முனியனின் குணம் என்ன ?

(2) முனியனுக்கும் சரவண செட்டியாருக்கும் உள்ள விவாதம் என்ன ?

(3) இரத்தின முதலியார் முனியனுக்குச்சொல்லிக்கொடுத்த உபாயம் என்ன ?

(4) நியாயஸ்தலத்தில் நியாயாதிபதி என்ன தீர்ப்பு கூறினுர்?

(5) முனியன் நியாயஸ்தலத்தில் எவ்விதம் நடந்து கொண்டான் ?

(6) முனியன் இரத்தின முதலியாரை எவ்விதம் ஏமாற்றினுன் ?

(7) இக் கதையினுல் நீ அறிந்த நீதி என்ன ?

அப்பியாசம்

கீழ்க்கண்ட பெயரெச்சங்களைச் சரியான இடத்தில் அமைத்து எழுதுக :

(1) சென்ற	(6) ஜயித்த
(2) வந்த	(7) பாடின
(3) தீட்டிய	(8) அடித்த
(4) பேசின	(9) எழுதின
(5) போகும்	(10) இருந்த

(1) முன் குதிரையோடு——நாய் இப்பொழுது அதைச் செல்லவிடாமல் குறைத்தது.

(2) என்னோடு———மனிதன் ஒரு செல்வன்.

(3) வகுப்பில்———பையன்கள் நிற்க வேண்டும்.

(4) அன்று மாலை———பாகவதர் இருப்பிடம் முசிரி.

(5) என் தந்தை அன்று———கடிதம் எனக்கு இன்று வந்தது.

(7) கிண்டி பந்தயத்தில் ——— குதிரை என்னுடையது.

(8) என் உபாத்தியாயர் ——— சித்திரம் மிக அழகாக இருக்கும்.

(9) அவ்விடத்திற்குப் ——— மனிதன் துன்பமடைவான்.

(10) ஆசிரியர் ——— இடம் நன்ருய் சிவந்துவிடும்.

அப்பியாசம்

நாய் தன் வாலை இலேசாக ஆட்டிற்று.

ஆட்டிற்று என்பது என்ன சொல்? இது வினைச் சொல் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் இங்கு அது பயனிலை என்று சொல்லப்படும்.

ஆட்டிற்று-எது?—நாய்.

ஆகவே நாய் என்ற வார்த்தை, காரியத்தைச் செய்கின்ற பொருளைக் குறிக்கும்.

இங்கு அது ஆட்டுகின்ற நாயைக் குறிக்கும். இதற்கு எழுவாய் என்று பெயர். எது ஒரு காரியத்தைச் செய்கின்றதோ அப்பொருளுக்கு எழுவாய் என்று பெயர். செய்கின்ற தொழிலுக்குப் பயனிலை என்று பெயர்.

கீழ்க்கண்ட வாக்கியங்களில் உள்ள எழுவாய் பயனிலையை எடுத்தெழுதுக.

(1) அவன் புத்தகத்தைப் படித்தான்.
(2) கீரி பாம்பைப் பிடித்தது.
(3) மாடுகள் தினந்தோறும் மேயப்போகின்றன.
(4) ராமன் வேகமாக நடக்கிறான்
(5) புத்தகம் மேஜையின்மேல் இருக்கிறது.

---

19. கடிதம் எழுதுதல்

கடிதம் 1.

உபாத்தியாயரிடத்தில் லீவ் கேட்பது

மேல இரத வீதி,
சிதம்பரம்.
14—1—'38

ஐயா,

நேற்று மாலை நான் பள்ளிவிட்டு வந்தது முதற் கொண்டு எனக்குத் தாங்க முடியாத தலைவலியாய் இருக்கி

றது. மேலும் அதோடு இன்று சுரமும் சேர்ந்து என்னை வருத்துகின்றது, இதனால் இன்னும் இரண்டு தினங்களுக்கு பள்ளிக்கு வர இயலாதிருக்கின்றேன். ஆகையால் தாங்கள் தயவு செய்து இன்றைக்கும் நாளைக்கும் லீவ் கொடுக்கும் படி தங்களை வணக்கமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இங்ஙனம் :
தங்கள் கீழ்ப்படிதலுள்ள மாணவன்
முத்துகுமாரசுவாமி,
நான்காம் வகுப்பு.

விலாசம் :—

திருவாளர்

ச. ஆறுமுக முதலியார்,

4-வது வகுப்பு உபாத்தியாயர்,
பச்சையப்பன் கல்லூரி,
சிதம்பரம்.

கடிதம் 2.

மகன் தந்தைக்கு பணம் அனுப்பும்படி எழுதிய கடிதம்

16-வது நம்பர் அறை,
சீ ஹாஸ்டல்
அண்ணாமலை நகர்.
16—8—'38.

அன்புமிக்க தந்தை அவர்களுக்கு, கிட்டு வணக்கமாய் எழுதிக்கொள்வது:

எல்லாம் வல்ல கடவுள் கிருபையால் நான் ஒருகுறைவு மில்லாமல் சௌக்கியமாய் இருக்கிறேன். அவ்விடத்தில் தங்களுடைய சுகத்தையும், தாயாருடைய சுகத்தையும் அறிய ஆவல் உள்ளவனா யிருக்கிறேன்.

நான் நேற்று மாலை இங்கு வந்து சேர்ந்தேன். இன்று காலை பள்ளிக்கூடத்திற்குச் செலுத்தவேண்டிய

தொகையைச் செலுத்தி மேல் வகுப்பில் சேர்ந்துவிட்டேன். இப்பொழுது என் கைவசம் இருக்கும் பணம் எல்லா புத்தகங்களும் வாங்குவதற்குப் போதாது. ஆகையால் தங்களை தயவு செய்து பத்து ரூபாய் அனுப்பும்படி தாழ்மையாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்:
தங்கள் அன்புள்ள தனயன்
கு. கிருஷ்ணமூர்த்தி.

விலாசம் :—

ஸ்ரீ அ. குப்புசாமி முதலியார் அவர்கள்,
கீழ ரத வீதி
திருநெல்வேலி.

கடிதம் 3.

நண்பனைக் கோடை விடுமுறைக்கு அழைத்தல்

நம்பர் 6, பவளக்காரத்தெரு,
சென்னை.
18—3—'39.

என் அன்புள்ள கிட்டுக்கு,

என் கலாசாலையில் கோடைகால விடுமுறை அடுத்த மாதம் 10-ம் தேதிமுதல் ஆரம்பமாகிறது. இன்னும் பன்னிரண்டு நாட்களில் என் பரீட்சை ஆரம்பிக்கிறது. நான் அதிகமான 'மார்க்' வாங்கி முதல்தரத்தில் தேர ஆசை கொண்டுள்ளேன். ஆகையினால் அதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்து வருகிறேன்.

நிற்க, நீ போன வருடமே கோடை விடுமுறைக்கு சென்னைக்கு வருவதாகச்சொல்லி பிறகு ஏமாற்றிவிட்டாய். இந்த ஆண்டும் என்னை அவ்வாறு ஏமாற்றாதே.

கோடைகால விடுமுறையைச் சந்தோஷமாகக் கழிப்பதற்குச் சென்னைதான் சிறந்தது. நாம் தினந்தோறும் மாலை வேளையில் கடற்கரைக்குச் சென்று மணலில் விளையாடி இன்புறலாம். கடலின் ஓயாத பெரிய அலைகளின் இரைச்சலைக் கேட்டு மகிழலாம். கடலின் அலைகள் நம் காலைத் தொடுவதுபோல கிட்டவரும் பொழுது நாம் கரைக்கு ஓடலாம். இவ்விளையாட்டு மிகவும் இன்பமாயிருக்கும்.

மேலும் சென்னையில் அநேக சினிமாக் கொட்டகைகள் இருக்கின்றன. ஆசை தீருமளவும் வேண்டிய சினிமாக்கள் பார்க்கலாம். இங்கு பெரிய கண்காட்சிசாலை இருக்கிறது; அதையும் போய்ப்பார்க்கலாம். பீபிள்ஸ் பார்க் என்ற இடத்தில் நீ இது வரையில் பார்த்திராத பிராணிகள் இருக்கிறது. அவைகளைப் போய்ப்பார்த்து மகிழலாம். இதைத்தவிர, சென்னை ஹைகோர்ட், லாகாலேஜ், துறைமுகம் முதலிய பல இடங்களையும் நீ பார்க்கலாம்.

என் தாய் தந்தையர் உன்னைப் பார்க்க வெகு ஆவலுள்ளவர்களாயிருக்கிறார்கள். ஆகையால் உனக்கு விடுமுறை ஆரம்பமான அன்றைக்கே புறப்பட்டு சென்னை வந்து சேர். நீ என்றைக்கு எத்தனை மணிக்கு சென்னை வருகிறாய் என்று எனக்கு முன்னாடியே ஒரு கடிதம் எழுது. நான் குறித்த நேரத்தில் ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்து உன்னை அழைத்துப்போகிறேன். உன் பதிலை கூடிய சீக்கிரம் எதிர் பார்க்கிறேன்.

இப்படிக்கு,
உன் அன்புள்ள நண்பன்,
மாணிக்கம்.

விலாசம்:—

ச. கிருஷ்ணமூர்த்தி, S. சுப்பிரமணிய முதலியார்,
ஜவுளிவியாபாரம், வடக்கு இரத வீதி, சிதம்பரம்.

லீவ்	ஸ்ரீ	தலைவலி	கோடைவிடுமுறை
வணக்கமாக	கீழ்ப்படிதலுள்ள	மாணவன்	விலாசம்
திருவாளர்	ரயில்வேஸ்டேஷன்	கிருபை	தாழ்மையாக
துகை	கைவசம்	பீபிள்ஸ்பார்க்	கண்காட்சி
சுரம்	பரீட்சை	கடற்கரை	இரைச்சல்
ஓயாத	துறைமுகம்	லாகாலேஜ்	முன்னடியே

கேள்விகள்

1. உன் விலாசத்தைச் சரியாய் எழுது.
2. உன் அக்காளுக்குக் கலியாணம் என்றும், அதற்காக 5 நாள் லீவ் வேண்டும் என்றும் உன் உபாத்தியாயருக்கு ஒரு 'லீவ் லெட்டர்' எழுது.
3. உன் ஊரில் நடக்கும் பெரிய திருவிழா ஒன்றைக் காண வரும்படி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுது

அப்பியாசம்

1. நான் ஏறிச் சென்ற ரயில் வண்டி காலை எட்டுமணிக்குத் தான் புறப்பட்டது.
2. இவன் கந்தன் வந்தான் எனச்சொன்னான்.
3. கொக்கு பால்போல் வெண்மையாக இருக்கும்.

இவ்வாக்கியங்களில் உள்ள தான், என, போல் என்பவைகள் இடைச் சொற்கள் எனப்படும். இவை பெயர்ச்சொல்லும் அல்ல, வினைச்சொல்லும் அல்ல. இரண்டிற்கும் இடையே இருந்து இரண்டுக்கும் உள்ள சம்பந்தத்தைக் காட்டுவதால் இடைச் சொல் என்று பெயர் வந்தது.

1. அந்தோ! என் நண்பன் இறந்து விட்டான்.
2. ஆஹா! இது என்ன ஆச்சரியமாயிருக்கிறது.
   சீ! இனிமேல் என்னிடம் பொய் சொல்லாதே.
   ஆ! என்னே இவன் வீரம்.
   தடித்த சொற்கள் எல்லாம் இடைச்சொற்கள்.
   இவைகளில் 'அந்தோ' என்பது வருத்தத்தைத் தெரிவிக்கும் இடைச்சொல்.

'ஆஹா' என்பது வியப்பைத் தெரிவிக்கும்.

'சீ' என்பது வெறுப்பைத் தெரிவிக்கும்.

! இது வியப்புக்குறியாகும்.

மேலே கூறியுள்ள இடைச் சொற்களை வைத்து நான்கு வாக்கியங்கள் எழுதுக.

1. சாலத்தின்ருன்.
2. கடி நகர்.
3. நனி பேதை.
4. கழிபெரிது தடித்த சொற்களுக்கு உரிச்சொல் என்று பெயர். இவைகளை உபயோகித்து நான்கு வாக்கியங்கள் எழுது.

இவைகளில் சால, நனி, கழி இவை மூன்றும் மிகுதி என்ற பொருளைத் தருகிறது. கடி என்பது இங்கு காவல் என்ற பொருளில் வந்தது. இது இன்னும் அநேக பொருள்களில் வரும்.

ஆகவே இப்பொழுது சொற்கள் நான்கு வகைப்படும்.

1. பெயர்ச்சொல், 2. வினைச்சொல், 3. இடைச்சொல், 4. உரிச்சொல்.

சொற்கள் எத்தனை வகைப்படும்? ஒவ்வொரு உதாரணம் கூறுக.

---

20. உண்மையின் உயர்வு

காட்சி 1

இடம்: மதுரை: ஓர் இருளடைந்தசந்து, காலம் இரவு 10 மணி, பாத்திரங்கள்: (1) இராமன், (2) மாறுவேடம் பூண்ட பாண்டிய மன்னன்.

இராமன்: ஒரு மாதகாலமாய் எனக்கு ஒரு பைசாக்கூட வரும்படி கிடையாது. பாழும் வறுமையே என்னை மிகக் கொடியவன் ஆக்கிற்று. ஆதலினுலேயே நான்

இந்தக் திருட்டுத் தொழிலில் ஈடுபட்டேன். என் தாயார் இறக்கும்போது என்னிடம் குடிகொண்டுள்ள பஞ்சமாபாதகத்தில் ஏதாவது ஒன்றை விட்டுவிடும்படி கூறினாள். அவள் வேண்டுகோளின்படி நான் பொய் சொல்வதை விட்டுவிட்டேன். என் தொழிலோ திருட்டுத் தொழில் அதில் உண்மை பேசுவது என்பது அசாத்தியமான காரியம். என்றும் யான் வாக்குத் தவற மாட்டேன்.

(பாண்டியன் மாறுவேடம் பூண்டு எதிரே வருகிறான்.)

பாண்டியன்: "யாரது ஊர் அடங்கின வேளையில் இவ்வாறு இருண்ட சந்துகளில் பூனைபோல் பதுங்கிச்செல்வது?"

இராமன்: ஐயா, என் பெயர் இராமன். பிறர் பொருள் களைத் திருடிச் சீவனஞ் செய்து வருகிறேன்.

பாண்டியன்: (உண்மைபேசும் திருடனைக் கண்டு ஆச்சரிய முற்று) அப்படியா, நானும் உன்போல் ஒரு திருடன் தான். இன்று எங்கேயாவது திருடவேண்டும் என்றே இப்பொழுது வந்திருக்கிறேன். இன்றிரவு நீ யார் வீட்டிற்குப் போவதாக எண்ணம்.

இராமன்: இன்று நம்ப, பாண்டியன் அரண்மனைக்குச் சென்று திருடுவதாக எண்ணம். நீ எனக்கு உதவி செய்தால், எனக்கு வருவதில் பாதி தருகிறேன், சம்மதமா?

பாண்டியன்: சரி. உனக்கு உதவி செய்கிறேன். வா. காவலாளிகள்கூட அயர்ந்து நித்திரை செய்கின்றனர். நாம் அரண்மனை செல்லலாம்.

(இருவரும் பாண்டியன் பொக்கிஷ சாலைக்குப் போகிறார்கள்.)

இராமன்: நீ இங்கே காவலாக இரு. நான் பொக்கிஷ சாலைக்குச்சென்று அங்குள்ள சிறந்த பொருள்களைக் கொண்டு வருகிறேன்.

பாண்டியன்: (இவனைச் சோதிக்க எண்ணி) சரி. நான் இங்கேயே நிற்கிறேன். நீ போய் வா.

(இராமன் ஒருவரும் அறியாவண்ணம் உள்ளே பிரவேசிக்கிறான்.)

இராமன்: இது என்ன ஆச்சரியமாயிருக்கிறது. அரசன் பொக்கிஷத்தில் நிறையப் பொருள் இருக்கும் என்று எண்ணி வந்தேன். ஒன்றையும் காணோமே. ஆ, இருக்கிறது, மூன்று இரத்தினங்கள். இவற்றில் ஒன்றை விற்ற பணத்தினால் என் ஆயுள் முழுமையும் கஷ்டப்படாமல் சீவிக்கலாம். பாவம் மூன்றையும் நாம் எடுத்துக்கொள்ள வேண்டாம். ஒன்றை அரசனுக்கு வைத்துவிட்டு இரண்டு இரத்தினங்களை நாம் எடுத்துச்செல்வோம்.

(வெளியே வருகிறான்.)

பாண்டியன்: "என்ன காரியம் ஒழுங்காக முடிந்ததா?"

இராமன்: தடையென்ன. நான் போய் ஒரு காரியம் கைகூடாமல் இருப்பதா? அரசன் பொக்கிஷத்தில் மூன்று விலையுயர்ந்த இரத்தினங்கள் இருந்தது. அவற்றில் ஒன்று அரசனுககே வைத்துவிட்டேன். மீதி இரண்டில் ஆளுக்கொன்று எடுத்துக்கொள்வோம்.

(பாண்டியனிடம் ஒன்று கொடுக்கிறான்.)

பாண்டியன்: ரொம்ப நல்லது. வந்தனம்; நான் போய் வருகிறேன்!!.

(தன் அரண்மனை போகிறான்.)

காட்சி 2

இடம்: பாண்டியன் தர்பார். காலம்: 9 மணி.
பாத்திரங்கள்: பாண்டியன், மந்திரி முதலியவர்கள்.

அரசன்:—மந்திரி நான் நேற்றிரவு நம்முடைய அரண்மனையில் யாரோ ஒரு திருடன் புகுந்து விலையுயர்ந்த பொருள்களை எல்லாம் திருடியதாகக் கனவு கண்

டேன். விடியற்காலையில் கண்ட கனவாதலால் ஒரு வேளை அது பலிக்கலாம். எதற்கும் நீ சென்று நமது பொக்கிஷ சாலையைப் பார்த்துவா.''

மந்திரி: அரச! தங்கள் சித்தம்.

(மந்திரி பொக்கிஷ சாலைக்குப் போகிறான்.)

என்ன! அரசனது மூன்று இரத்தினங்களில் இரண்டை யாரோ திருடர்கள் எடுத்துக்கொண்டு போயிருக்கிறார்கள். ஏதோ அவசரத்தில் மூன்றாவது இரத்தினத்தை எடுத்துப்போக மறந்துவிட்டார்கள் போலும். ஆகையால், இந்த ஒரு இரத்தினத்தையும் நாம் எடுத்து வைத்துக்கொண்டு, அரசனிடம் இரத்தினங்கள் மூன்றும் திருட்டுப்போய் விட்டது என்று சொன்னால் அரசன் நிச்சயம் நம்பிவிடுவான்.

(இரத்தினத்தை தன் உடையில் மறைத்துக் கொள்ளுகிறான்.)

அரசன்: ''மந்திரி நம் பொக்கிஷத்தைப் பார்த்து வந்தாயா? நான் கனவு கண்டது உண்மையாயிற்றோ''

மந்திரி: (வருத்தத்தோடு) ''ஆம் அரசே. தங்களுக்கு மிகவும் சிறந்ததான மூன்று இரத்தினங்களையும், திருடன் யாரோ எடுத்துச் சென்றனர். நமது ஆட்களை விட்டு அத்திருடர்களைப் பிடித்து வரச்செய்கிறேன்.''

அரசன். ''என்ன! என் மூன்று இரத்தினங்களையுமா?''

மந்திரி: ''ஆம்! அரசே திருடர்கள் மூன்று இரத்தினங்களையும்தான் எடுத்துச் சென்றனர்.

அரசன்: சரி இரத்தினங்களில் ஒன்றைக்கூட எனக்காக வைக்க வில்லையா?

மந்திரி: ''இல்லை அரசே. திருடர்கள் இரத்தினங்களைக் கண்டால் எடுத்துக்கொள்ளாது விட்டுவிடுவார்களா?''

அரசன்: ஓகோ அப்படியா விஷயம் யாரடா சேவகன். இந்த மந்திரியின் மடியைச் சோதியுங்கள்.

இவன் இவ்வளவு திருடனாய் இருப்பான் என்று நான் நினைக்கவில்லை.

(சேவகன் மந்திரியைச் சோதிக்கிறான். இரத்தினம் ஒன்று அகப்படுகிறது. மந்திரி பயத்தால் நடுங்குகிறான்.)

மந்திரி: "அரசே. என்னை தாங்கள் தயவு செய்து மன்னிக்க வேண்டும். ஏதோ பின் புத்தியால் இவ்வாறு செய்து விட்டேன். என் குற்றத்தைத் தாங்கள் பொறுத்து அடியேனை மன்னிக்கவேண்டும்."

அரசன்: சீ! நம்பிக்கைத் துரோகி. உன் முகத்தில் விழிப்பதுகூடப் பாபம். இவ்வூரை விட்டு இன்றைக்கே போய்விடு."

(மந்திரி தலை குனிந்து போகிறான்.)

அரசன்: யாரடா சேவகன் இவ்வூர் வட கோடியிலிருக்கும் இராமன் என்பவனை அழைத்துவா. அவன் திருடனாயினும் உண்மையே உரைப்பவன். அவனே எனக்குத் தகுந்த மந்திரி.

(சிறிது நேரத்தில் இராமன் வருகிறான்.)

இராமா: நேற்றிரவு நீ உண்மை பேசியதைக் கண்டு நான் உள்ளம் மகிழ்ந்தேன். இன்று முதல் நீ நமது மந்திரியாய் இரு.

இராமன்: மகாராஜா அடியேனிடத்து இவ்வளவு கருணை காட்டியதற்கு யான் என்ன தவம் செய்தேனோ தெரியவில்லை. தங்கள் அரண்மனையில் தங்கள் முன்பாக திருடிய என்னைக் கழுவேற்றாமல், மந்திரியான தங்கள் கருணையே கருணை. (விழுந்து தண்டம் சமர்ப்பிக்கிறான்.)

(காட்சி முடிகிறது)

இருளடைந்த	பொக்கிஷ சாலை	உடையில்
சந்து	பிரவேசிக்கிறான்	சோதிக்கிறான்
மாறுவேடம்	இரத்தினம்	பின்புத்தி
பாண்டியன்	ஆயுள்	குனிந்து
பஞ்சமா பாதகம்	தடை	கழுவேற்றுமல்
அசாத்தியம்	விலையுயர்ந்த	தண்டம்
பதுங்கி	நேற்றிரவு	சமர்ப்பிக்கிறான்
காவலாளி	பலிக்கலாம்	

கேள்விகள்

1. இராமன் தொழில் என்ன ?
2. இராமன் தன் தயாருக்குக் கொடுத்த வாக்குறுதி என்ன ?
3. இராமனை மாறுவேடம் பூண்டு சந்தித்தது யார் ?
4. இராமனும் அவனும் எங்கே போனார்கள் ? அவர்கள் செய்த காரியம் என்ன ?
5. இராமன் அவனுடன் செய்துகொண்ட ஒப்பந்தம் என்ன ?
6. மந்திரியின் தீய எண்ணம் என்ன ?
7. அவன் திருட்டுத்தனம் எவ்வாறு வெளியாயிற்று ?
8. மந்திரிக்குக் கிடைத்த தண்டனை என்ன ?
9. இராமன் அடைந்த நன்மை என்ன ?
10. இக்கதையினால் நீ அறிந்த நீதி யாது ?

திருமயம் மோட்டார் விபத்து

ஒரு விருத்தர் ஆஸ்பத்திரியில் இறந்தார்

ஒருவருக்கு பலத்த காயம்

நமது நிருபர்

புதுக்கோட்டை,
10—5—'39

புதுக்கோட்டை சமஸ்தானத்தைச் சேர்ந்த திருமயம் தாலூகாவில் நிகழ்ந்த மோட்டார் விபத்து விஷயமாகக் கிடைத்த செய்தி.

ஒரு மோட்டார் புதுக்கோட்டையிலிருந்து திருமயம் சென்று கொண்டிருந்தது. மற்ருெரு பஸ் திருமயத்திலிருந்து புறப்பட்டுப் புதுக்கோட்டைக்கு வந்துகொண்டிருந்தது. திருமயத்திலிருந்து வந்த மோட்டார் விளக்கு எரியவில்லை. இரண்டு மோட்டார்களும் வெள்ளாற்றின் அருகே வந்தது. புதுக்கோட்டையிலிருந்து போகின்ற மோட்டார் மிகவும் வேகமாய்ச் சென்றது. மேலும், அதில் உள்ள மோட்டார் ஓட்டி கட்குடித்ததினல் சரியான அறிவில்லை.

இரவு எட்டு மணி சுமாருக்கு இரண்டு மோட்டார்களும் வெள்ளாற்றின் அருகில் மோதிக்கொண்டன. திருமயத்திலிருந்து வந்த கார், எதிரில் வேகமாக வரும் மோட்டாரைக் கண்டதும் நின்றுவிட்டது. ஆனல், புதுக்கோட்டையிலிருந்து வந்தமோட்டார் நிற்கவில்லை.அதில் உள்ள மோட்டார் ஓட்டி போதையினல் தமது மோட்டாரை எதிரில் உள்ள காரின்மீது வேகமாக மோதினன்.

இந்த விபத்தில் இரண்டு மோட்டார்களுக்கும் விபத்து அதிகம் ஏற்பட்டது. மோட்டார்களின் முன்பக்கம் முழுமையும் நன்ருய் நசுங்கிப் போய்விட்டது. புதுக்கோட்டையிலிருந்து வந்த மோட்டாரில் உள்ள ஒரு வயோதிகர்

மோதின அதிர்ச்சி தாங்க முடியாமல் அங்கேயே இறந்து விட்டார். முன் பக்கத்தின் ஓரத்தில் உட்கார்ந்திருந்த ஒருவருக்கு பலத்த காயம். ஆனால், அவர் உயிர்பிழைப் பார் என நம்பப்படுகிறது. அநேகம் மனிதர்களுக்கும் குழந்தைகளுக்கும் பலத்த அடியேயன்றி வேறு உயிர்ச் சேதம் அதிகம் இல்லை. இந்த விபத்து ஏற்பட்டதிலிருந்து பிரயாணிகள் மோட்டாரில் போக மிகவும் அஞ்சுகின்றார் கள். அநேகமாக எல்லாரும் தற்போது ரயிலிலேயே பிர யாணம் செய்கின்றனர்.

கேள்விகள்

1. மோட்டார் விபத்து எங்கு எத்தனைமணிக்குஏற்பட்டது?
2. விபத்து ஏற்பட்டதின் காரணத்தைக் கூறுக.
3. பிரயாணிகளுக்கு நேர்ந்த சேதம் என்ன?
4. ஜனங்கள் ஏன் மோட்டாரில் ஏற அஞ்சுகின்றனர்?

அப்பியாசம்

இராமன் பாடினான்.
இராமன் பாடினானா?

இந்த இரண்டு வாக்கியங்களுக்கும் என்ன வித்தியாசமிருக் கிறது? மேலிருக்கும் வாக்கியம் ஒரு காரியம் ஆயிற்று என்று நிச் சயமாகத் தெரிகிறது. அடுத்த வாக்கியத்தில் காரியம் ஆய்விட்டதா அல்லது இன்னும் ஆகவில்லையா என்ற ஒரு கேள்விப்பொருள் இருக்கிறது. இவ்விதமாகக்கேள்விப்பொருள் உள்ள வாக்கியத்தை வினா வாக்கியம் என்று சொல்லுகிறோம்.

(1) கோவிந்தன் கடைக்குச் சென்றான். இதுசாதாரணமான வாக்கியம்.

(2) கோவிந்தன் கடைக்குச் சென்றானா? இது வினா வாக் கியம்? என்பது வினாக்குறி.

பின்வரும் வாக்கியங்களை வினா வாக்கியங்களாக மாற்றுக?

1. கந்தன் பள்ளிக்கூடம் போனான்.
2. மாடுகள் மேய்கின்றன.

3. குமுதினி பாடினுள்.
4. உன் தம்பி சாப்பிட்டான்.
5. அவன் கதையைக் கேட்டான்.
6. அவன் உன்னோடு பேசினுன்.

கீழ்க்கண்ட வாக்கியங்களில் பொருத்தமான முற்றுப்புள்ளி, வியப்புக்குறி, வினக்குறி இவைகளை இடு.

1. நாய் தன் எசமானனைப் பின் தொடர்ந்தது.
2. நீ உன் பாடத்தை நன்றாய்ப் படித்தாயா.
3. எனக்கு நாளை பள்ளிக்கூடம் கிடையாது.
4. அந்தோ அவன் மண்டை உடைந்துவிட்டது.
5. பணம் எங்கே இருக்கிறது.
6. ஆஹா என்ன அழகான பூவிது.
7. நாய் மெதுவாக தன் வாலை ஆட்டிற்று.
8. ஆ என்ன அழகான கிளியிது.

---

21. கொக்கும் நண்டும்—(பாட்டு)

காட்டுக் குளத்திலே மீன்கள் மிகுந்தது
கண்டதோர் கொக்கு நடந்து வர,
நீ நீட்டுக் கழுத்தினைக் கண்டொரு நண்டு,
நிமிர்ந்ததைப் பார்த்து வினவியதே 1.

"ஐயா நீர் இங்கு வருவதேன்? வேண்டிய
ஆகாரமில்லாது சோர்ந்து விட்டீர்
மெய்யாக உம்முடை யெண்ணத்தைச் சொல்லிடில்
வேண்டும் உதவிகள் செய்திடுவேன்" 2.

என்ன மொழிந்ததாம் நண்டினைக் கொக்கும்
இனியமுகத்தொடு பார்த்து நின்றே,
"என்னசொல் வேனப்பா வந்ததே மோசம்
இனியிங் கிருக்க வழியில்லையே" 3.

"யாருக்கு வந்தது மோசம் விளம்புவீர்?
எம்மா லியன்றது செய்து கொள்வோம்;
பாருக்குள் யாருமே துன்பங்கள் வந்தாற்
பதறிக் கதறுவ துண்மையன்றோ?" 4.

"மீன் பிடிப்போர் சிலர் பேசிய சொற்களை
வெட்டவெளியிலே கேட்டுநின்றேன்;
நான் பிழைக்கும் வழி யில்லாமல் அன்னவர்
நாளைக்கு வருவார் இக்குளத்தே". 5.

"வந்தொரு மீனையும் மிச்சம் விடாமலே
வாட்டி வதைத்துப் பிடித்திடுவார்;
இந்த வருத்தத்தை எண்ணி வருந்துவேன்,
என்னசெய் வேனினி யென்றதுவே?" 6.

"அப்படி மீன்கள் குலத்தோ டழியும்
அழிவை யான் பார்த்துப் பொறுக்கமாட்டேன்,
எப்படி யாயினும் மீன்களைக் காத்திட
ஏற்ற வழி சொல்வீர் என்று சொல்லி" 7.

நண்டு பதறிய காட்சியைக் கண்டுள்
நகைத்து மகிழ்ந்தவக் கொக்குரைக்கும்
"நண்டின் இனத்தையும் மீனின் இனத்தையும்
நானினிக் காத்திடு வேனெனவே" 8.

நண்டுநடந்துதன் நண்பராம் மீன்களை
நம்பிய கொக்கிடம் காட்டுதலும்,
நண்டு குளத்திலிருக்கவே மீன்களை
நன்கு சுமந்தது கொக்குடனே 9.

மீன்கள் எல்லாம்வெளி யேறிய பின்பவன்
மிஞ்சியிருந்த அந்நண்டதனை
மீன்கள் அனைத்தையும் கொன்று குவித்த
மிகக்கெட்ட கொக்கும் எடுத்ததுவே. 10.

போகும் வழியிலே மீன்கள் உலரும்
புதுமையைப் பார்த்த வந் நண்டுடனே,
சாகும் சமயத்தைக் கண்டு துணிந்தொரு
தந்திரம் செய்திட்ட தப்பொழுதே. 11.

“புதுமைக் குளம்வெகு தூரத்தில் உள்ளது
போக எனக்கு மன மில்லையே;
இதுநிற்க, என்னை நீ முன்போ லெடுத்தென்
இடத்தில் விடவேண்டும்” என்றதுவே. 12.

நம்மையிற் சிக்கிய நண்டு பிழைக்குமோ
நாமிதைக் கொல்வோம் எனத் துணிந்த
வஞ்சகக் கொக்கும் பழைய குளத்துக்கு
வந்ததும் நண்டதைக் கொன்றதுவே. 13.

பிறருக்குத் தீமையைச் செய்ய நினைப்பவர்
பித்துப் பிடித்தவர் என்பதுண்மை.
பிறரால் தமக்குப் பெருந்தீங் குறுவது
பின்னவர் பார்த்துத் தெளிகுவரே. 14

நா. கனகராஜையர், B.O.L.

கேள்விகள்

1. கொக்கு நண்டினிடம் கூறியது என்ன ?
2. நண்டு கொக்கை நம்பியதனால் நேர்ந்த துன்பம் என்ன ?
3. நண்டு கொக்கை எப்படித் தந்திரமாய்க் கொன்றது ?

அப்பியாசம்

இக்கதையைச் சுருக்கி 10 வரிகளில் எழுதுக.

22. விதை முளைத்தல்

தாவரங்கள் விதைகளிலிருந்தே உண்டாகின்றன. வித்துக்களில் பல விதம் உண்டு. தேங்காய் பனங்காய் முதலியவை பெரிய வித்துக்கள். இவற்றின் மேற்பாகம் கடினமானது. அவரை, துவரை முதலியவற்றின் மேற் பாகம் மெல்லிய தோலால் மூடப்பட்டிருக்கும். ஆமணக்கு விதை சிறியதா யிருந்தாலும் அதனுடைய மேற்ருேலும் சற்றுக் கடினமாகவே இருக்கிறது. விதைகள் உருவில் வேறுபட்டிருந்தாலும், அவற்றிலிருந்து முளை கிளம்பிச் செடிகளாகவும், மரங்களாகவும் வளர்வதை நாம் தினந் தோறும் பார்க்கிறோம்.

விதையிலிருந்து முளை எவ்வாறு கிளம்புகின்றது என்பதை இங்கு ஆராய்வோம். எல்லா விதைகளிலிருந் தும் முளை கிளம்புவதை நமது கண்ணுற் காணமுடியாது. விதையின் அமைப்புகள் கண்ணுக்குப் புலனுகும் ஓர் விதையை எடுத்துக்கொள்வோம். அவரைவிதையின் அமைப்பு கண்ணுக்குத் தெளிவாய்ப் புலனுகும்.

அவரை விதையின் மேற்பாகத்தில் வெண்மை நிற மான கோடு தோன்றுகிறது. அவரைவிதையைக் காயி னின்றும் பிரிப்பதால் இக் கோடு ஏற்படுகின்றது. இப் போது அவரைவிதையைத் தண்ணீரில் ஊறப்போடு வோம். தண்ணீரில் நன்ருய் ஊறியபின் விதை சிறிது பருத் துத் தோன்றும். அதைக் கையினுல் அழுத்த, தோல் வேருகும். உள்ளே இரு பருப்புகளும், ஓரத்தில் ஓர் மெல்லிய தண்டும் தோன்றும். ஊறின விதையை அழுத் தும்போது, முதலில் ஒரு துளி நீர் இம் மெல்லிய தண்டின் மேற்பாகத்தின் வழியாய் வெளியேவரும். இத் துவாரத் தின் வழியாகவே தண்ணீர் உள்ளே சென்று விதையை ஊறவைத்ததென்று தெரிகிறது. ஆகவே, அவரை விதை

யில் இரண்டு பருப்புகள், மெல்லிய தண்டாகிய முளை மேல் தோல் ஆகிய பாகங்கள் அடங்கியிருக்கின்றன.

அவரை விதையைப் பூமியில் நட்டுவைத்தால், இரண்டு மூன்று தினங்களில் பூமியின்மீது முளை வட்டமாகக் கிளம்பி நிற்பது தோன்றும். இதற்குமுன் நடப்பது நமக்குத் தெரியாது. அதை அறியவேண்டுமானால் ஒரு கண்ணாடிக் குழாயை எடுத்து அதனுள் ஆற்றுமணலைப் போட்டுச் சிறிது தண்ணீர் ஊற்றவேண்டும். குழாயின் ஓரத்தில் விதையை நட்டுவைத்தால், விதையில் ஏற்படும் வேறுபாடுகள் நமக்கு நன்றாய் தெரியும்.

அவரைவிதை தண்ணீரில் ஊறியதும் பருப்புகள் உப்பிவிடுகின்றன. மெல்லிய தண்டின் மேற்பாகத்தில் முற்கூறிய துவாரத்தின் பக்கத்தில் முளையானது, வெளிப்படும். அப்போது பருப்புகள் சிறிது அகன்று இடங் கொடுக்கும். முளையின் கீழ்ப்பாகம் எப்பொழுதும் பூமியை நோக்கியே செல்லும்.

விதை முளைப்பதற்குத் தண்ணீர், உஷ்ணம், காற்று, முதலியவை மிக அவசியம். விதையினுள் தண்ணீர் செல்வதால், பருப்புகள் உப்பிச் சலனம் ஏற்படுகின்றது. உஷ்ணமானது முளைக்குச் சுறுசுறுப்பைக் கொடுக்கின்றது. சுறுசுறுப்பு உண்டாகாவிட்டால் விதை ஒருபோதும் முளைக்காது. ஆகையினால், விதை முளைப்பதற்குத் தண்ணீரும், உஷ்ணமும் மெத்த அவசியம் என்று தெரிகிறது.

பூமியில் மிக ஆழமாக விதையை ஊன்றி வைத்தால் விதை முளைக்காது. அங்கு, காற்றுச் செல்ல வழி இல்லை. மண்ணைச் சிறிது எடுத்துவிட்டால் முளைக்கும். தண்ணீரின் உள்ளேயே அமிழ்ந்திருக்கும் விதைகளும் முளைப்பதில்லை. இதனால் விதை முளைப்பதற்குக் காற்று வேண்டும் என்பதும் தெரிகிறது.

இள முளைகளுக்கு வேண்டிய ஆகாரம் அவற்றின் பருப்புக்களிலேயே இருக்கின்றன. அவரைவிதையானது முளைத்து வெளிக்கிளம்பும் பொழுது, அதன் பருப்புக்கள் உப்பிப் பருத்திருக்கின்றன. முளை வளர, வளர, அப் பருப்புகள் மெலிந்து கடைசியாக வாடி கீழே விழுந்து விடுகின்றன. அடியில்உள்ள வேருக்கு ஆகாரத்தைக் கிரகிக்கும் சக்தி ஏற்பட்டவுடன் பருப்புக்கள் கீழே விழுந்து விடுகின்றன. இதனுல், ஆகாரத்தைச் சேமித்துவைத்து, இள முளைகளுக்கு உதவுவது பருப்புக்களின் வேலையென்பது தெரிகிறது.

தாவரம்	அமைப்பு	ஊறவைத்து	அகன்று
விதை, வித்து	புல்னுகும்	நட்டுவைத்தால்	உப்பி
மேற்பாகம்	அவரை	கண்ணுடிக்குழாய்	சலனம்
ஆமணக்கு	தெளிவாக	ஆற்று மணல்	கிரகிக்கும்
முளை, தண்டு	பருப்பு	வேறுபாடு	துவாரம்

கேள்விகள்

1. கடினமான தோல் உள்ள சில விதைகளைக் கூறு.
2. மெல்லிய தோலால் மூடப்பட்டுள்ள விதைகளைக் கூறு.
3. ஆமணக்கு விதையின் மேற்பாகம் எவ்வாறு இருக்கிறது?
4. அவரைவிதையைத் தண்ணீரில் ஊறப்போட்டால் என்ன மாறுதல்கள் ஏற்படுகின்றன?
5. அவரைவிதை நன்ருய் ஊறியதும் அது என்ன ஆகிறது?
6. விதைகள் முளைப்பதற்கு என்னென்ன அவசியமாய் வேண்டும்?
7. பருப்புக்களின் வேலை என்ன? அவை எப்பொழுது கீழே விழும்?

அப்பியாசம்

கீழ்க்கண்ட வாக்கியங்கள் எங்கு முடிகின்றனவோ அங்கே முற்றுப்புள்ளிகள் இடுக.

நிலத்தில் வாழும் மிருகங்களில் மிகவும் பெரியது யானை அதன் தேகம் பருத்துச் சிறிய குன்றுபோல் தோன்றும் அதன் தலை பெரியது தலையின் மேற்பாகம் மத்தகம் எனப்படும் அதன் முகத்திலிருந்து ஓர் உறுப்பு நீண்டு தொங்கும் அதுவே துதிக்கை அல்லது தும்பிக்கை எனப்படும் துதிக்கை யானைக்குக் கையாகவும் நாசியாகவும் உபயோகிக்கப்படுகிறது அதன் நுனியில் ஒரு விரலும் இரு நாசித் துவாரங்களும் இருக்கின்றன இந்த விரலினால் யானை ஊசிபோன்ற சிறிய வஸ்துவையும் பொறுக்கி எடுக்கும் துதிக்கையினால் பெரிய மரங்களையும் வேருடன் பிடுங்கும் மரக்கிளைகளை முறிக்கும் தண்ணீரை மொண்டு தன்மீது ஊற்றிக்கொள்ளும் இன்னும் பலவிதமான வேலைகளையும் துதிக்கையினால் செய்கின்றது.

முற்றுப்புள்ளியை உபயோகிக்கவும். அதன் உபயோகத்தையும் நீங்கள் அறிந்தீர்கள். இனி கால்புள்ளியின் உபயோகத்தையும் அதை இடவேண்டிய இடங்களையும் பார்ப்போம்.

முற்றுப்புள்ளி இருந்தால் நம்மால் எல்லா வாக்கியங்களையும் ஒரே மூச்சில் வாசிக்கமுடியாது. ஆகவே, ஒரு பாடத்தை எளிதாக வாசிப்பதற்கு முற்றுப்புள்ளி பயன்படுகிறது.

கால்புள்ளியும் நாம் பாடங்களை எளிதாகப் படிப்பதற்குப் பயன்படுகிறது. ஒரு வாக்கியம் மிக நீளமாக இருந்தால் நாம் அதை ஒரே மூச்சில் படிக்கமுடியாது. ஆகையால், பொருள் எங்கெங்கு கொஞ்சம் முடிவடைகிறதோ அங்கெல்லாம் கால்புள்ளிகள் இடலாம். வாக்கியத்தின் இறுதியில் முற்றுப்புள்ளி யிடவேண்டும். ஆகவே கால்புள்ளி, முற்றுப்புள்ளி என்பன ஒரு வாக்கியத்தில் இருக்கும். வாக்கியம் முடிந்தபின் இடுவது முற்றுப்புள்ளி. வாக்கியத்தின் இடையிடையே நிறுத்தி வாசிக்குமிடங்களில் அமைப்பது கால்புள்ளிகள் ஆகும்.

1. சர்க்கரையில் நாட்டுச் சர்க்கரை, வெள்ளைச் சர்க்கரை, அஸ்கா, சீனி என்ற மூன்று வகைகள் உண்டு.

2. சர்க்கரைப் பாகை ஆறவிடாமல், இன்னும் கொஞ்சம் காய்ச்சி, ஆறவைத்து, தடிகளால் தட்டி உடைத்தால், பழுப்புச் சர்க்கரை ஆகும்.

3. விதை முளைப்பதற்குத் தண்ணீர், உஷ்ணம், காற்று, இவை அவசியம்.

4. ஆனால், அவைகள் தற்காலத்தில் உள்ள மோட்டார் வண்டிகளையும், புகைவண்டித் தொடர்களையும், ஆகாய விமானங்களையும்போல், அதிக வேகமாய்ச் செல்லக் கூடியவை அல்ல.

5. தமிழ் நாடானது முன்பு சேர நாடு, சோழ நாடு, பாண்டி நாடு என்று மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

---

23. மலை

(பாட்டு)

வானத்தை முட்ட வளர்ந்து பரந்தனை
மாமலையே உனையே—அந்த
வானத்தில் வாழ்பவர் பார்த்து மகிழ்வரோ
மண்ணவர் பார்ப்ப துண்டோ. (1)

கானத்தை நின்தலை மேற்சுமப்பாய் அருங்
காட்சி யெலாந் தருவாய்—தமிழ்க்
கானத்தை யென்னுள் எழுப்புவை நின்னிடம்
கண்ட எழில் சொலவே. (2)

எத்தனை கோடி மரங்களைத் தாங்கி
இனிய நிழல் தருவாய்—உன்னை
எத்தனை வாய்கள் இருந்தாலும் என்னால்
இயலுமோ பாடு தற்கே. (3)

ஆயிர மாயிர மாகவே நின்தலை
ஆறு பெருக் கிடுவாய்—இந்த
மாயிரு ஞாலம் வளம்பெற உன்மேல்
வழிந்து பெரு கிடவே. (4)

சூரியன் தோன்றிய போதிலுன் மேனியிற்
சோதியை என்ன சொல்வேன்—அந்தச்

சூரியன் சாய்வுறும் வேளையில் நின்னிடம்
சொக்கும் அழகென்னவோ. (5)

சந்திரன் நின்தலை மீது நடக்கும்
சமயத்தைப் பார்த்து விட்டால்—விண்ணில்
இந்திரன் வந்துன் னிடத்திலி ருக்கவே,
இங்குறுவான் உண்மையே. (6)

வெண்பனி நின்தலை மீது விளங்கும்
விளக்கத்தைக் கண்டதுமே—வெள்ளி
எண்பது கோடி கொடுத்தாலும் உன்விலை
ஏற்றத்துக் கொப்பி லையே. (7)

நவமணி தாங்குவை பல்வகை யாகிய
நல்ல நிறம் தருவாய்—உன்னை,
அவமதி செய்யும் அறிவிலி உன்றன்
அழகை யறிந் திலனே. (8)

நா. கனகராஜையர், B.O.L

அரும்பதவிளக்கம்:—முட்ட - எட்டும்படியாக. மாமலை - பெரியமலை. மண்ணவர் - மனிதர்கள். வானத்தில் வாழ்பவர் - தேவர்கள். கானத்தை - காட்டை, பாட்டை. எழில் - அழகு. இயலுமோ - முடியுமோ. மாயிரு ஞாலம் - பெரிய அகன்ற பூமி. மேனி - உடம்பு. சோதி - பிரகாசம் (ஒளி) சொக்கும் - கவர்கின்ற. விண்ணில் - ஆகாயத்தில். வெள்ளி - வெள்ளியாலாகிய நாணயம் (ரூபாய்.) நவமணி - ஒன்பது வகைப்பட்ட இரத்தினங்கள். ஒப்பு - இணை. நிறம் - ஒளி. அறிவிலா - மூடன்.

கேள்விகள்

1. மலை எவ்வாறு பரந்திருக்கின்றது.
2. மலைமேல் உள்ள பற்பல காட்சிகளை எழுதுக?
3. இப்பாட்டினைச் சுருக்கி 15 வரிகளில் எழுதுக.

24. மலேரியா ஜுரம்

முத்து ஒரு நாள் காய்ச்சலால் வருந்தினன். தன் மகன் ஜுரத்தினுல் அல்லற்படுவதைக் கண்ட முத்துவின் தந்தை ஆறுமுக முதலியார் தனக்குத் தெரிந்த ஒரு மருத்துவரை அழைத்து வந்தார். மருத்துவர் வந்ததும் முத்துவை நன்ருகப் பரிசோதித்து இன்னநோய் என்பதைத் தெளிவாக உணர்ந்தார்.

ஆறுமுக முதலியார்: என்ன சார், பையன் என்ன நோயினுல் கஷ்டப்படுகிருன்? எனக்கு ஒன்றும் புரியவில்லை. அசாத்தியமாகக் குளிர்கிறது என்கிருன். கை கால் முதலியவைகள் ரொம்பவும் வலிக்கின்றதாம். பாவம்; குளிரினுல் அவன் தேகம் நடுக்கம் எடுக்கின்றது. இதைப் பார்த்தால் எனக்கு சாதாரண ஜுரமாகத் தோன்றவில்லையே?"

மருத்துவர்: "நீங்கள் நினைத்தது உண்மை. இது சாதாரண ஜுரம் அன்று. இதற்கு மலேரியா ஜுரம் என்று பெயர்."

ஆ-மு: மலேரியா ஜுரம் என்ருல் என்ன? நான் இதுவரையில் கேள்விப்பட்டதில்லையே. அது எவ்வாறு உண்டாகிறது?

மருத்துவர்: மலேரியா ஜுரம் என்பது ஒருவகை விஷ ஜுரம். ஒருவகைக் கிருமி நம் உதிரத்தோடு கலப்பதால் அது உண்டாகிறது.

ஆ-மு: "நீங்கள் சொல்வது விந்தையாய் இருக்கிறதே. கண்ணுக்குத் தெரியாத கிருமிகள் தோலைக் கடித்து உள்ளே சென்று விடுமோ?"

மருத்துவர்: இக்கிருமி தோலைக் கடித்து உள்ளே செல்லாது. நாம் உட்கொள்ளும் ஆகாரத்தின் மூலமாக

வும் உள்ளே செல்லாது. கொசுவினல்தான் அக்கிருமி நம் தேகத்தில் செலுத்தப்படுகின்றது.

ஆ-மு: கொசுக்கள் எவ்விதம் கிருமிகளை நம் தேகத்தினுள் செலுத்தும்?

மருத்துவர்: கொசு தாவரங்களின் இரசத்தையும் மிருகங்கள், மனிதர்களின் உதிரத்தைக் குடித்தும் உயிர் வாழ்கின்றன. அது மலேரியா ஜுரமுள்ள மனிதனைக் கடித்து, அவனுடைய இரத்தத்தை உறிஞ்சும்போது, மலேரியாக் கிருமிகளும் அதனுடைய வயிற்றினுட் செல்லுகின்றன. அக்கிருமிகள் கொசுக்களை ஒன்றும் செய்வதில்லை. இந்தக் கிருமிகளை அகத்தே உடைய மசகங்கள், ஒரு மனிதனைக் கடித்து இரத்தத்தை உறிஞ்சும்போது, கிருமிகளையும் தேகத்தில் செலுத்துகிறது. இந்த விஷக்கிருமிகள் மனிதனுடைய குருதியில் நாளுக்குநாள் பெருகிக்கொண்டேயிருக்கும். இதனல் மனிதனின் நல்ல இரத்தம் கெட்டுவிடும். கடைசியில் குளிரும் காய்ச்சலும் உண்டாகின்றது.

ஆ-மு: மலேரியா ஜுரம் கொசுக் கடிப்பதால் உண்டானல் இச்சுரம் எல்லோருக்கும் வரவேண்டுமே?

மருத்துவர்: "ஆம். மலேரியா ஜுரத்தினல் அநேகர் வருந்துகின்றனர். ஆனல், எல்லாக் கொசுக்களும் மலேரியா ஜுரத்தை பரவச்செய்கிறதில்லை. அனேபிலஸ் என்ற ஒருவகைக் கொசுக்களே மலேரியா ஜுரத்தை அதிகம் பரவச்செய்கிறது.

ஆ-மு: அனேபிலஸ் கொசுவை மற்றக் கொசுக்களிலிருந்து வேறு பிரித்தறிய முடியுமா?

மருத்துவர்: ஆம். முடியும். அனேபிலஸ் கொசு சுவர்களில் உட்கார்ந்திருக்கும் பொழுது, அதன் தேகம் சுவரோடு சேர்ந்திருக்கும். மற்றக் கொசுக்களுக்குத்

தலைப்புறந்தான் சுவரோடு ஒட்டியிருக்கும். இக்கொசுக்களின் சிறகுகளில் சிறுசிறு புள்ளிகள் இருக்கும்.

ஆ-மு: சரி. இக்கொசு எவ்வாறு பெருகுகின்றது?

மருத்துவர்: இக்கொசு தண்ணீர் தேங்கியிருக்கு மிடங்களில் வசிக்கும். தண்ணீரின்மீது முட்டையிடும். முட்டைகளிலிருந்து இருபத்திநான்கு மணி நேரத்திற்குள் புழுக்கள் வெளிப்படும். இந்தப் புழுக்கள் பதினான்கு நாட்களுக்குள் கூட்டுப் புழுக்களின் உருவத்தை அடைகின்றன; பின் மூன்று அல்லது நான்கு நாட்களில் கொசுவாக வெளிப்படும். இந்த விதமாக, இக்கொசுக்கள் சீக்கிரத்தில் பெருகிவிடுகின்றன.

ஆ-மு: கொசுக்கள் பெருகுவதைத் தடுக்கும் வழிகள் உண்டா?

மருத்துவர்: கொசுக்கள் வாழும் இடங்களில் மண்ணெண்ணெய் தெளித்தால் கொசுக்கள் இறந்துவிடும். மேலும் கொசுக்களைக் கொல்வதற்கென்று இப்பொழுது சில எண்ணெய்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள். இவ்வெண்ணெயைத் தண்ணீர் தேங்கியுள்ள இடங்களில் தெளித்தால் அக் கொசுக்கள் இறந்துவிடுகின்றன. அவைகள் முட்டைகளும் அந்நீரின் மீது இடுவதில்லை. நம் வீடுகளைச் சுற்றித் தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். புற்பூண்டுகளை அழிக்கவேண்டும். இவ்வாறு செய்தால் கொசுக்கள் பெருகாதபடி தடுக்கலாம்.

ஆ-மு: "ஐயா, இந்த ஜுரத்திற்கு என்ன மருந்து கொடுக்கிறது?

மருத்துவர்: இதற்குக் கொடுக்கவேண்டிய மருந்து 'கோயினு' ஒன்றுதான். மலேரியா ஜுரம் உள்ள இடங்களில் வசிப்பவர்கள் இதை தினம் சாப்பிட்டு வந்தால் இந்நோய் அவர்களை ஒருபோதும் அணுகாது.

ஆ-மு: "இந்த ஜுரம் வராமல் எவ்விதம் தடுக்கலாம் ?

மருத்துவர்: "இக்கொடிய நோய் கொசுக்களினுல் பரவுவதால் முதலில் கொசுக்களை ஒழிக்கவேண்டும். நம்மைக் கொசுக்கள் கடிக்காதபடி படுக்கையைச் சுற்றிலும் கொசுவலை கட்டவேண்டும். கொயினுவையும் அடிக்கடி சாப்பிட்டு வரவேண்டும்."

ஆ-மு: ஐயா, தங்களுக்கு மிகுந்த வந்தனம். மலேரியா ஜுரத்தைப்பற்றி நான் விவரமாக அறிந்துகொண்டேன். என் பையனுக்கு கொயினு வாங்கித் தருகிறேன். நீங்கள் சொன்ன இதர அறிவுரைகளையும் நினைவில் வைத்துக்கொள்ளுகிறேன்.

மலேரியா	**உதிரம்**	**தேங்கி, மசகம்**	**புற்பூண்டு**
ஜுரம்	**விந்தை**	**கூட்டுப்புழு**	**இடுவதில்லை**
மருத்துவர்	**காய்ச்சல்**	**மண்ணெண்ணெய்**	**மருந்து**
கிருமி	**அனேபிலஸ்**	**கொசுவலை**	**கோயினு**

அப்பியாசம்

மேற்கோள் குறி (Inverted Commas)

(1) ராமன் "கிருஷ்ணு நீ ஏன் இன்று பள்ளிக்கூடத்திற்கு வரவில்லை?"

கிஷ்ணன், 'இன்று எனக்கு உடம்பு சரியாக இல்லை. ஆகையினுல் நான் பள்ளிக்கூடம் வரவில்லை."

(2) " அடே மணி உன் பாடத்தை நன்ருய்ப்படி" என்று அவன் தாயார் சொன்னுள்.

"என்ற குறிகளுக்கு மேற்கோள் குறி என்று பெயர். ஒருவரோடு ஒருவர் பேசிக்கொள்ளுவதாக நாம் எழுதும்பொது சம்

பாஷணைகளை எல்லாம் இக்குறிகளின் இடையில் அடக்க வேண்டும். சம்பாஷணை தொடங்கும் போதும் இக்குறி தொடங்க வேண்டும். சம்பாஷணை முடியும்போதும் இக்குறிகளைப் போட வேண்டும்.

பின்வரும் இடங்களில் சரியான மேற்கோள் குறிகளை அமைக்க.

கிட்டு என்னோடு இன்று மாலை விளையாட வருகிறாயா என்று கேட்டான் மணி. அதற்குக் கிட்டு இன்று என்றால் உன்னோடு விளையாட முடியாது, நான் என் அம்மாவோடு கோயிலுக்குப் போகிறேன் என்றான். அப்படியானால் நானும் உன்னோடு கோயிலுக்கு வருகிறேன் என்று மணி சொல்ல, கிட்டு, சரி அப்படியே என்னோடு இன்றுமாலை கோவிலுக்குவா, மறந்துவிடாதே என்றான்.

---

25. பேராசை பெரு நஷ்டம் (பாட்டு)

1. காவிரி பாய்ந்திடும் நாட்டிலே—செல்வம்
காண நிறைந்ததோர் ஊரிலே—மக்கள்
யாவரும் போற்றும் பணத்தினால்—புகழ்
ஏற்றவோர் வைசியன் வாழ்ந்தனன்.

2. ஏழைகட் கீயும் இயல்பிலான்—என்றும்
எண்ணியெண்ணிப் பணம் கூட்டுவான்—அவன்
ஆழ மனத்தினன் ஆகையால்—தன்னை
ஆரும் மதிக்கவே நின்றனன்.

3. வாணிகம் செய்யக் கருதியே—அவன்
வண்டியிலேறிப் புறப்பட்டான்—நெல்லைக்
கோணியில் கட்டியே வைத்திட்டான்—பணம்
கொண்டதோர் பையை எடுத்திட்டான்.

4. ஆயிரம் ரூபாயைப் பையிலே—நன்றாய்
ஆதரவாக முடிந்திட்டான்—வெளி
ஞாயிறு தோன்றுமுன் சென்றனன்—பெரு
நன்மைகள் யாவையும் எண்ணியே.

5. போகும் வழியிற் பணப்பையே—அன்று
பொட்டென்று வீழ்ந்து மறைந்ததே—அதை
நோகும் மனத்தோ டறிந்தனன்—அவன்
நூறு வழிகளில் தேடினன்.

6. தேடிப் பெறுது திரும்பினன்—க்ஷணம்
சித்தம் தெளிந்தவோர் ஏழைதான்—தொழில்
நாடிப்புறத்தே நடந்தனன்—பணம்
நற்பையைக் கண்டே எடுத்திட்டான்.

7. ஊருக்குள் வந்து விசாரித்தான்—அதன்
உண்மையறிய விரும்பினன்—தரும்
பேருக்கு நூறு தருவதாய்ச்—செட்டி
பேசிய வார்த்தையைக் கேட்டனன்.

8. ஐயாநீர் எத்தனை வைத்திட்டீர்—உமது
ஆஸலிப் பையினைக் கொள்ளுவார்—இதை
மெய்யாக நான் கண்டெடுத்திட்டேன்—தர
வேண்டும் எனக்கு வெகுமதி.

9. என்றவன் சொல்லவே செட்டியும்—பையை
என்னதி தென்னவே வாங்கினன்—வாங்கி
இன்றவன் சொன்ன வெகுமதி—தர
எண்ணமிலாம லோர் பொய் சொன்னன்.

10. பையிலோர் மோதிரம் வைத்திட்டேன்—அதைப்
பார்த்து நீ தந்திடுவா யென—ஏழை
ஐயநான் பையைத் திறந்திலேன்—அதில்
ஆயிரம் வைத்ததும் பார்த்திலேன்.

11. என்று புகன்றிட வைசியன்—இதற்கு
ஏற்றவழி செய்குவே னென—அன்று
சென்றனன் நீதிபதியிடம்—அங்கு
செப்பினன் தன் வழக்கு யாவுமே.

12. நீதிபதி யிது கேட்டனர்—சற்று
நேரம் நினைத்தனர் சொல்லுவார்—ஐயா
வாதிநீ வைத்ததோர் பையிலே—பெரு
வயிர மோதிரம் உண்டன்றோ.

13. மோதிரம் இல்லாத பையிதே—இவன்
முற்றிலும் பொய் சொல்லா ஏழையே—ஐயா
ஆதலின் இந்தப்பை வேறுபை—நீர்
ஆயிரம் வைத்தபை வேறன்றோ.

14. உண்மையே பேசினான் ஆதலால்—இவன்
ஊரார் அறிய இதைக் கொள்வான்
உண்மையே வெற்றி பெறுகவே—என
ஓதினர் செட்டி வருந்தினான்.

15. ஏழையை ஏமாற்ற எண்ணியே—தான்
ஏமாறி நின்றவவ் வைசியன்—பின்பு
ஏழைகள் வாயாற் புகழவே—பொருள்
ஈந்து புகழினை எய்தினான்.

நா. கனகராஜையர்.

குறிப்புரை: வைசியன் - வணிகன். ஈயும் - கொடுக்கும். இயல்பு - குணம். கோணி - சாக்கு. ஞாயிறு - சூரியன். மெய்யாக - உண்மையாக. வெகுமதி-சம்மானம். நீதிபதி-நியாயாதிபதி. செப்பினன் - சொன்னான். ஓதினர் - சொன்னார். ஈந்து-கொடுத்து.

செய்யுள்

வெற்றிவேற்கை

1. இதற்கு இது அழகெனல்

1. கல்விக் கழகு கசடற மொழிதல்
2. செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்
3. மன்னவர்க் கழகு செங்கோல் முறைமை
4. மந்திரிக் கழகு வரும்பொருள் உரைத்தல்
5. தந்திரிக் கழகு தறுகண் ஆண்மை
6. உழவர் கழகு உழுதூண் விரும்பல்
7. உண்டிக் கழகு விருந்தோ டுண்டல்
8. வணிகர் கழகு வளர்பொருள் ஈட்டல்
9. அறிஞர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்
10. வறிஞர்க் கழகு வறுமையிற் செம்மை

2. ஆசிரியனும் கல்வியும்

1. எழுத்தறி வித்தவன் இறைவன் ஆகும்

2. கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினுங் கற்கை நன்றே

3. கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுட் பிறந்த பதரா கும்மே

4. நாற்பாற் குலத்தில் மேற்பா லொருவன்
கற்றில னாயிற் கீழ்இருப் பவனே.

5. எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடிக் கற்றோரை மேல்வருக என்பார்.

6. அறிவுடை யொருவனை அரசனும் விரும்பும்
அச்சமுள் ளடக்கி அறிவகத் தில்லா.

7. கொச்சை மக்களைப் பெறுதலி னக்குடி
எச்சமற் றேமாந் திருக்கை நன்றே.

3. பெருமை சிறுமைகளின் பண்பு

1. தேம்படு பனையின் திரள்பழத் தொருவிதை
வானுற ஓங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க் கிருக்க நிழலாகாதே.

2. தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே யாயினும் அண்ணல் யானை
அணிதேர்ப் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலாகும்மே.

3. பெரியோ ரெல்லாம் பெரியரு மல்லர்
சிறியோ ரெல்லாம் சிறியரு மல்லர்.

4. பெருமையும் சிறுமையும் தான்தர வருமே.

4. நட்பு

1. அடினும் ஆவின்பால் தன்சுவை குன்றாது
சுடினும் செம்பொன் தன்னொளி கெடாது
அரைக்கினும் சந்தனம் தன்மணம் மாறாது
புகைக்கினும் காரகில் பொல்லாங்கு கமழாது.
கலக்கினும் தண்கடல் சேறாகாதே.

2. ஒரு நாள் பழகினும் மூர்க்கர்க் கேண்மை
இருநிலம் பிளக்க வேர்வீழ் கும்மே.

3. நூறாண்டு பழகினும் மூர்க்கர்க் கேண்மை
நீர்க்குள் பாசிபோல் வேர்க்கொள் ளாதே.

4. அடினும் பால்பெய்து கைப்பறாது பேய்ச்சுரைக்காய்
ஊட்டினும் பல்விரை உள்ளி கமழாது.

5. பிழை பொறுத்தல்

1. சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம்
பெரியோராயின் பொறுப்பது கடனே.

2. சிறியோர் பெரும்பிழை செய்தன ராயின்
பெரியோர் அப்பிழை பொறுத்தலும் அரிதே.

6. இவர்க்கிது இல்லையெனல்

1. அச்சமும் நாணமும் அறிவிலோர்க் கில்லை
2. கேளும் கிளையும் கெட்டோர்க்கு இல்லை
3. யானைக்கில்லை தானமும் தவமும்
4. பூனைக்கில்லை தவமும் தயையும்
5. ஞானிக்கில்லை இன்பமும் துன்பமும்
6. நாளும் கிழமையும் நலிந்தோர்க் கில்லை

7. இன்னுர் பதரெனல்

1. முதலுள பண்டம் கொண்டு வாணிபஞ் செய்து
அதன் பயன் உண்ணு வணிகரும் பதரே.

2. வித்தும் ஏரும் உளதாயிருப்ப
எய்த்தங் கிருக்கும் ஏழையும் பதரே.

3. தன் ஆயுதமும் தன்கைப் பொருளும்
பிறன்கைக் கொடுக்கும் பேதையும் பதரே.

8. செல்வம் நிலையாது

1. உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா.

2. குடைநிழ லிருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்
நடைமெலிந்து ஓர்ஊர் நண்ணினும் நண்ணுவர்.

3. சிறப்பும் செல்வமும் பெருமையும் உடையோர்
அறக்கூழ்ச் சாலை அடையினும் அடைவர்.

4. அறத்திடு பிச்சை கூவியிரப்போர்
அரசரோ டிருந்து அரசாளினும் ஆளுவர்.

5. குன்றத் தனையிரு நிதியம் படைத்தோர்
அன்றைப் பகலே அழியினும் அழிவர்.

6. எழுநிலை மாடம் கால் சாய்ந் துக்குக
கழுதை மேய் பாழ் ஆகினும் ஆகும்.

7. பெற்றமும் கழுதையும் மேய்ந்த அப்பாழ்
பொற்றொடி மகளிரும் மைந்தரும் செறிந்து
நெற்பொலி நெடுநகர் ஆயினும் ஆகும்.

நீதி வெண்பா.

உணவுகொள்ளும் பொழுதுகள்

1. ஒருபோது யோகியே; ஒண்டனிர்க்கை மாதே!
இருபோது போகியே என்ப;—திரிபோது
ரோகியே; நான்குபோ துண்பான் உடல்விட்டுப்
போகியே யென்று புகல்.

துர்ச்சனருக்கு எங்கும் விடமே.

2. ஈக்கு விடந்தலையில் எய்துமிருந் தேளுக்கு
வாய்த்த விடங்கொடுக்கில் வாழுமே—நோக்கரிய
பைங்கரை வுக்குவிடம் பல்லளவே துர்ச்சனருக்கு
கங்கமுழு தும்விடமே யாம்.

போலிப் புண்ணியர்.

3. கற்பூரம் போலக் கடலுப் பிருந்தாலும்
கற்பூர மாமோ கடலுப்பு—பொற்பூரும்
புண்ணியரைப் போல இருந்தாலும் புல்லியர்தாம்
புண்ணியரா வாரோ புகல்.

உத்தமர் குணம்.

4. பொன்னுங் கரும்பும் புகழ்பாலும் சந்தனமும்
சின்னம் படவருத்தஞ் செய்தாலும்—முன்னிருந்த
நற்குணமே தோன்றும் நலிந்தாலும் உத்தமர்பால்
நற்குணமே தோன்றும் நயந்து.

கற்றோர் இயல்பு.

5. பாலினீர் தீயனுகப் பால்வெகூண்டு தீப்புகுந்து
மேலுநீர் கண்டமையும் மேன்மைபோல்—நூலினெறி
உற்றோர் இடுக்கண் உயிர்கொடுத்தும் மாற்றுவரே
மற்றோர் புகல மதித்து.

விவேக சிந்தாமணி

1. ஆபத்துக் குதவாப் பிள்ளை
அரும்பசிக் குதவா அன்னம்
தாபத்தைத் தீராத் தண்ணீர்
தரித்திரம் அறியாப் பெண்டீர்
கோபத்தை அடக்கா வேந்தன்
குருமொழி கொள்ளாச் சீடன்
பாபத்தைத் தீராத் தீர்த்தம்
பயனில்லை ஏழும் தானே.

2. குக்கலைப் பிடித்து நாவிக்
கூண்டினில் அடைத்து வைத்து
மிக்கதோர் மஞ்சட் பூசி
மிகுமணம் செய்தா லும்தான்
அக்குலம் வேற தாமோ
அதனிடம் புனுகுண் டாமோ
குக்கலே குக்கல் அல்லால்
குலம்தனில் பெரிய தாமோ.

3. ஒப்புடன் முகம் மலர்ந்தே
உபசரித் துண்மை பேசி
உப்பிலாக் கூழ் இட்டாலும்
உண்பதே அமிர்த மாகும்
முப்பழ மொடுபால் அன்னம்
முகம்கடுத் திடுவா ராயின்
கப்பிய பசியி னோடு
கடும்பசி யாகுந் தானே.

4. ஆலிலை பூவும் காயும்
அளிதரும் பழமு முண்டேல்
சாலவே பட்சி எல்லாம்
தம்குடி என்றே வாழும்
வாலிபர் வந்து தேடி
வந்திருப்பார் கோடி கோடி
ஆலிலை ஆதி போனால்
அங்குவந் திருப்பார் உண்டோ.

5. வாழ்வது வந்த போது
மனம்தனில் மகிழ வேண்டாம்
தாழ்வது வந்த தானல்
தளர்வரோ தக்கோர் மிக்க
ஊழ்வினை வந்த தானல்
ஒருவரால் விலக்கப் போமோ
ஏழையாய் இருந்தோர் பல்லக்
கேறுதல் கண்டி வீரோ.

பழமொழிகள்

சுகாதாரம்

1. கூழானாலும் குளித்துக்குடி.
2. அளவுக்கு மிஞ்சினல் அமுதமும் விஷம்.

3. வைத்தியனுக்குக் கொடுப்பதை வாணியனுக்குக் கொடு.
4. சுத்தம் சுகம் தரும்; அசுத்தம் அழச்செய்யும்.
5. இலங்கணம் பரம ஔடதம்.

விவசாயம்

1. அகல உழுவதை ஆழ உழு.
2. ஆடிப் பட்டம் தேடி விதை.
3. மாசி எள் மனைவந்து சேரும்.
4. பருவத்தே பயிர் செய்.
5. சீரைத் தேடின் ஏரைத் தேடு.
6. உழத் தெரிந்தவன் அழத் தெரியாதவன்.

பொது

1. குதிக்குமுன் பார்த்துக் குதி.
2. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.
3. எட்டி பழுத்தென்ன! ஈயாதார் வாழ்ந்தென்ன!
4. கேடுவருபின்னே மதிகெட்டுவருமுன்னே.
5. ஊர்வாயை மூட உலைமூடி உண்டோ ?
6. ஏட்டுச் சுரக்காய் கறிக்காகுமா ?
7. பணம் இல்லாதவன் பிணம்.
8. ஒற்றுமை இல்லாக்குடி ஒருமிக்கக் கெடும்.
9. பொய் சொல்லி வாழ்ந்தவருமில்லை
   மெய் சொல்லிக் கெட்டவரும் இல்லை.
10. கப்பல் போம் துறை கிடக்கும்
    காலம் போம் வார்த்தை நிற்கும்.

குறிப்புரை

வெற்றிவேற்கை

1. அரும்பதவுரை: கசடு + அற - குற்றம் நீங்க. செழுங்கிளை - பெரிய சுற்றத்தார். செங்கோன் - முறையாக அரசு செய்தல். வரும்பொருள் - பின்னே வரப்போகின்ற விஷயம். தந்திரி - சேனாதிபதி. தறுகண் - அஞ்சாமை. ஊண் - உணவு. வணிகர் - வைசியர். அறிஞர் - கற்றறிந்தோர். அடங்கல் - நிறைந்து அடக்கமாயிருத்தல். வறிஞர் - ஏழைகள். வறுமை - தரித்திரம்.

2. அரும்பத வுரை : இறைவன் - கடவுள். பிச்சைபுகினும் - பிச்சை எடுத்தாலும். குலநலம் - குலத்தின் பெருமை. அகத்து - உள்ளில். கொச்சைமக்கள் - அறிவில்லாத மூடமக்கள். எச்சம் அற்று - பிள்ளைகள் இல்லாமல்.

3. அரும்பதவுரை: தேம்படு - இனிமையான. திரள் - திரண்ட. தெண்ணீர் - தெளிந்த நீர். கயம் - குளம். சினை - முட்டை. புரவி- குதிரை.

4. அரும்பதவுரை: அடினும் - அடுப்பில் வைத்துக் காய்ச்சினும். செம்பொன் – உயர்ந்த பொன். மாற்று-நிறை. அறாது - நீங்காது. காரகில் - கருமை யான அகில் கட்டை. பொல்லாங்கு - கெட்ட வாசனை. தண் கடல் - குளிர்ச்சியான கடல். வீழ்க்கும் - விடும். ஆண்டு - வருடம். கைப்பு - கசப்பு. பல்வரை - பல வாசனைகள். ஊட்டினும் - செலுத்தினும்.

5. அரும்பதவுரை: பிழை - குற்றம். அரிதே - அருமையாம்.

6. அரும்பதவுரை: கேளும் கிளையும்-உற்றார் உறவினர். ஞானி - கற்றறிந்த பெரியோர். நலிந்தோர் - வியாதியாலும் வறுமையாலும் வருந்துவோர்.

7. அரும்பதவுரை: முதல் - கையில் உள்ள முன்பணம். வித்து - விதை. பேதை - அறிவல்லாதவன்.

8. அரும்பதவுரை: உடைமை - செல்வம். குஞ்சரம் - யானை. நண்ணினும் - அடைந்தாலும். அறக்கூழ்ச்சாலை - தருமசத்திரம்.

குன்றத்தனை - மலையளவு. நிதி - செல்வம். உக்கு - இடிந்து. பெற்றம் - எருதுகள். பொற்றொடி - பொன் - கொடி - பொன்வளையல். நெற்பொலி - நெல்மிகுந்து. நெடுநகர் - பெரிய ஊர்.

நீதி வெண்பா

1. ஒருபோது - ஒருவேளை உண்டவன். யோகி - யோகம் செய்பவன். ஒண் தளிர்க்கை - ஒள்ளிய தளிர்போன்ற கைகளையுடைய பெண். திரிபோது - மூன்றுவேளை யுண்பது. போகி - இல்வாழ்வான். ரோகி - பிணியாளன்.

2. எய்தும் - இருக்கும். பைங்கண் - பச்சை நிறமுள்ள. துர்ச்சனர் - தீயவர்.

3. பொற்பூரும் - அழகு நிறைந்த. புல்லியர் - அற்பர்.

4. பொன் - தங்கம். சின்னப்பட - சிறுமை உண்டாகும் படி. நலிந்தாலும் - வருத்தினாலும். மேலுநீர் - மேலே பெய்த நீரும். நூலினெறி - நூல்களிற் சொல்லும் வழிகள். இடுக்கண் - துன்பம். மற்றோர் - அறிவிலாதார்.

விவேக சிந்தாமணி

அரும்பதவுரை :—அரும்பசி - மிக்க பசி. அன்னம் - சோறு. தாபம் - தாகவிடாய். சீடன் - மாணாக்கன். தீர்த்தம் - புண்ணிய நதிகள் முதலியன. குக்கல் - நாய். நாவி - புனுகுபூனை. ஒப்பு - மனம் சம்மதித்து. முப்பழம் - மா, பலா, வாழை இவைகளின் கனிகள். கடுத்து - கோபித்து, வேறுபட்டு. சாலவே - மிகவே. வந்திருப்பர் - புகழ்வார். தக்கோர் - பெரியோர்.

THE B. N. PRESS, MOUNT ROAD, MADRAS.